பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 24 சனிக்கிழமை (10.10.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 318

## ரி.ஆர்.பாலு தலைமையில் 10 பேர் கொண்ட

# தமிழக எம்.பிக்கள் தூதுக்குழு

# இன்று இலங்கை வருகிறது

### அகதிமுகாம் மக்களின் நிலைமையை நேரில் கண்டறிவதற்கு



கொழும்பு, ஒக்ரோபர்10

வவுனியா அகதிகள் முகாமில் தங்கி அவலமுறும் வன்னி மக்களின் நிலைமையை நேரில் கண்டறிவதற்காக, தமிழகத்தைச் சேர்ந்த பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இந்தியத் தூதுக்குழு ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இன்று நண்பகல் கொழும்பு வரவுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ரி.ஆர். பாலுவின் தலைமையில் வரும் தூதுக்குழுவில் தி.மு.க., காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சிகளைச் சேர்ந்த பத்து எம்.பிக்கள் அங்கம் வகிப்பர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

இன்று கொழும்பு வந்து சேரும் இந்தியக் தூதுக்குழுவில் - திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ரி.ஆர்.பாலு, கனிமொழி, மு.க.அழகிரி, ரி.கே.எஸ். இளங்கோவன், ஏ.கே.எஸ். விஜயன், ஹெலன் டேவிட்சன் ஆகியோரும்-

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுதர்சன நாச்சியப்பன், என்.எஸ்.வி.சித்தன், ஹாரூன் ரசீத் -

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த தொல்.திருமாவளவன் - ஆகியோரும் அங்கம் வகிப்பர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர் உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான வரலாறு -I பாடத்துக்கான மாதிரி வினாத் தாள்.

### 'ரூபெல்லா' தடுப்பு ஊசி ஒவ்வாமையால் நான்கு மாணவிகள் வைத்தியசாலையில்

கொழும்பு, ஒக். 10

'ரூபெல்லா' தடுப்பு ஊசி ஏற்றப்பட்ட பின்னர் ஒவ்வாமை காரணமாக நுகேகொடை மகளிர் கல்லூரி மாணவிகள் நால்வர் களுபோவில் வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்டனர்.

'ரூபெல்லா' தடுப்பு ஊசி ஏற்றப்பட்ட

(20 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுக்குழுவினருக்கு மாநகர சபை நாளை காலை பொதுவரவேற்பு நல்கும்

### அவர்கள் பல்கலைக்கழகத்துக்கும் செல்வர்

யாழ்ப்பாணம்.ஒக்.10

யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தரும் இந்திய நாடாளுமன்ற தூதுக்குழுவினர் யாழ்.நூலகம், யாழ்.பல்கலைக்கழகம் ஆகிய இடங்களுக்குச் செல்வர்.

நாளை காலை எட்டு மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு ஹெலியில் வந்திறங்கும் தூதுக்குழுவினர், ஊர்வலமாக பொதுநூலகத்துக்கு

(20 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து இன்று ஆயிரம் பேர் யாழ். அழைத்து வரப்படுவர்

யாழ்ப்பாணம், ஒக்.10

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து சுமார் ஆயிரம்பேரை இன்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவர ஏற்பாடாகியுள்ளது.

தீவகத்தைச் சேர்ந்த 600 பேரை அழைத்துவந்து அங்குள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைத்து உறவினர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாக அரசஅதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்

அத்தோடு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டு வவுனியா சிவன் கோயிலில் தங்கவைக்கப்பட்டுள்ள கர்ப்பிணி பெண்கள் மற்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத் தமிழ் வர்த்தகர்களுக்கு புதிய பதிவு விண்ணப்ப படிவம்

கொழும்பு, ஒக். 10

கொழும்பு, புறக்கோட்டை, கொம்பனிவீதி, வெள்ளவத்தை, ஆமர்வீதி, கொட்டாஞ்சேனை, பம்பலப்பிட்டி, தெஹிவளை, கிராண்ட்பாஸ் ஆகிய பகுதிகளில் வர்த்தகத்தில் ஈடுபடும் தமிழர்களுக்கு இராணுவத்தினரால் புதிதாக பதிவு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து வாழ்க்கை தொழில், (20 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை இந்திய எம்.பிக்கள் பார்க்கலாமென்றால் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு ஏன் அனுமதி இல்லை?

### சிறப்புரிமை பிரச்சினை கிளப்பினார் அக்கட்சியின் எம்.பி.

கொழும்பு, ஒக்.10

வவுனியா அகதி முகாம்களைப் பார்வையிட இந்திய எம்.பிக்களுக்கு அனுமதி வழங்க முடியும் என்றால் ஏன் இலங்கையின் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு அனுமதி வழங்கமுடியாது - என்று ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

இலங்கை அரசு இலங்கை எதிர்க்கட்சி எம்.பிக்களின் சிறப்புரிமையை இதன் மூலம் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் இன்று வாக்களிப்பு; வன்முறைகள் உச்சக்கட்டம்

### 55 ஆசனங்களுக்காக 1,091 பேர் களத்தில்

கொழும்பு, ஒக்.10

தென்மாகாண சபைக்கான தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெறுகின்றது. 55 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் 17 லட்சத்து 61 ஆயிரத்து 859 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். பத்துக்கும் மேற்பட்ட கட்சிகளைச் சேர்ந்த ஆயிரத்து 91 பேர் இதில் போட்டியிடுகின்றனர்.

தென்மாகாணசபைத் (20 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்துக்கான நோபல் பரிசு ஒபாமாவுக்கு மக்களிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவற்காக



கொழும்பு, ஒக்.10

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இவ்வாண்டுக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளார்.

சர்வதேச இராஜதந்திரம் மற்றும் மக்கள் மத்தியிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் அவரது அதி தீவிர முயற்சிகளுக்காக (20 ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant



தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்ரைஸ், ஸ்பெஷல் நாண், பூரி, சூப் மற்றும் சைனிஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

Open 11.00 am to 11.00 pm

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. CALL: 0112504020

இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். CALL: 021-2225898

கொசி உணவகம்

Feel at home

யாழ் நகரிலும் கொழும்பிலும் நீண்ட காலமாக சுவையான, தரமான Indian, Chinees உணவு வகைகளுடன்

AC Non AC Rooms Available

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்ப்பாணம் வரும் இந்தியக் குழுவினரை வரவேற்று உணர்வுகளை வெளிப்படுத்த அழைக்கின்றார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழுவினரை அனைவரும் ஒன்றுதிரண்டு வரவேற்று எமது உணர்வுகளை வெளிப்படுத்தவேண்டும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு குடாநாட்டுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது அயல் நாட்டின் தொப்புள்கொடி உறவுகளான தமிழக மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் எமது உறவுசார் உணர்வுகளை வெளிப்படுத்த அனைவரும் ஒன்றுதிரண்டு வரவேண்டும்.

டி.ஆர்.பாலு, கனிமொழி உட்பட தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றனர்.

எமது மக்களின் உண்மையான நிலைமைகளை வெளிப்படுத்தி, இந்திய அரசின் குறிப்பாகத் தமிழக அரசின் உதவிகளை எமது மக்களின் மேம்பாட்டிற்காகவும் எமது பகுதிகளின் அபிவிருத்திக்காகவும் பெற்றுக்கொள்வதற்கு நாம் இந்தச் சந்திப்பை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்டுள்ள 13வது சீர்திருத்தத்தையும் அதற்கும் அதிகமான அதிகாரங்களையும் செயற்படுத்துமாறு நான் முன்வைத்துவந்த யோசனை தற்போது செயல்வடிவம் பெறத் தயாராகிவரும் நிலையில், இந்தியாவின் மூலமான உதவிகளை எமது பகுதிகளின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நாம் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இந்த நிலையில் யாழ்.குடாநாட்டுக்கு வருகைதரும் தமிழகத்தைச் சேர்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக்குழுவினரை நாம் அனைவரும் ஒன்றுதிரண்டு வரவேற்பதில் எமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும்-என்றார். (1)


**தவறிவிட்டது:** தங்கராசா றஞ்சிதமலர் என்பவரது NOKIA கலர் கைபட க்கத் தொலைபேசி (06.10.2009) அன்று திருநெல்வேலி வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தொடர்பு: த.ரஞ்சிதமலர் இல.21, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.

## Scootypep விற்பனைக்கு

அலுவலரின் தனிப்பாவனையில் உள்ள சிவப்பு நிற ஸ்கூட்டிபெப் (பழைய வகை) IG. தொடரிலக்கம் உடையது.7500km ஓடிய நிலையில் விற்பனைக்குண்டு. விலை 98500/= விலையில் எதுவித மாற்றமும் ஏற்படாது. 396, நாவலர் வீதி, கைலாசப் பிள்ளையார் கோயிலடி (உதயன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) சனி, ஞாயிறு மட்டுமே பார்வையிடலாம். மு.ப 10-12 மட்டுமே. (சி/561626)

## மரண அறிவித்தல்கள்

### தம்பித்துரை றெட்ணதுரை



பாஷையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தோபியாஸ் கிறகரி எனப்படும் தம்பித்துரை றெட்ணதுரை நேற்று (09.10.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை-றெட்ணம் தம்பதிகளின் அன்புமகனும், ஆகத்தம்மாவின் பாசமிகு கணவரும், றெஜிமா, லலி, கெனடி (சுவிஸ்), றதி (பிரான்ஸ்), டியூலா, டியூறோ (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், கனியூட், றெஜிஸ், மொய்றா (சுவிஸ்), டயஸ் (பிரான்ஸ்), எட்மன் ஆகியோரின் மாமனாரும், ஜெனிக்ஷன், றுபின்ஷன், றுபினா, அல்பேக், அல்பீனா, அகத்னா, ஆன்சலீனா, எட்வீஷா, அபிஷா, றொஸ்னி, ஏறிக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.10.2009) சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35/6, 3 ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்,
மனைவி, மக்கள்

### திருமதி கந்தசாமி தேவமணி

காரைநகர், நீலிப்பந்தனையைச் சேர்ந்த திருமதி க.தேவமணி நேற்றுமுன்தினம் (08.10.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கந்தசாமியின் (மீசை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சிதம்பரம் (சிவன்கோயில் வீதி) தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பரிமளம் (தங்கரத்தினம்) தம்பதியரின் அன்பு மருமகளும், சரவணபவான் (நீர்கொழும்பு), கிருஷ்ணபவான் (கண்ணன் -லண்டன்), திருமதி மங்கையர்க்கரசி (கண்ணம்மா - லண்டன் ) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோரஞ்சிதம் (ரகுபதி - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தருமலிங்கம் (கனடா), காலஞ்சென்ற பார்வதி மற்றும் பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற மின்சார சபை உத்தியோகத்தர், பிரதேசசபை,காரைநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி நாகம்மாவின் அன்புப் பெறாமகளும், சறோஜாதேவி (கனடா), காலஞ்சென்ற ராசரத்தினம் மற்றும் தயாபரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், துர்க்கா, டிலக்சன், கேசவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (12.10.2009) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நீலிப்பந்தனையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீலிப்பந்தனை,
காரைநகர்.

தகவல்
பிள்ளைகள்

# இலங்கையர் நால்வர் பிரிட்டனில் கைது!

கொழும்பு, ஒக். 10

பிரித்தானிய நாட்டு குடிவரவு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின்பேரில் இலங்கையர் நால்வர் பிரிட்டனில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரித்தானிய குடிவரவு திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உணவு விடுதி ஒன்றில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோதமான முறையில் பிரிட்டனில் தங்கியிருந்து தொழில் பார்த்தனர் என்று குற்றஞ்சாட்டி இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுடன் சேர்த்து அதே விடுதியில் வேலை பார்த்த இந்தியர்கள் ஐவர், ஒரு பாகிஸ்தானியர் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிய வருகிறது. (சி)

## மாபெரும் மலிவு விற்பனை



தீபாவளித் தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளரின் நலன் கருதி 17/10/2009 வரை எங்கும் இல்லாத மாபெரும் மலிவு விற்பனை.

Sale

★அனைத்து ஆடைகளுக்கும் விசேட விலைக்கழிவு

**லைடன் புடைவை நிலையம்**

இல.410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். T.P: 021 222 2381

## ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்

திருமதி இரஞ்சிதகௌரி சிவநாதன் (Conf.Sec-I)



மக்கள் வங்கியில் 1974 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரை 35 ஆண்டுகள் அர்ப்பணிப்பான சேவையை ஆற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் **திருமதி இரஞ்சிதகௌரி சிவநாதன்** அவர்களது ஓய்வுக் காலம் இறைவனருளால் நிறைவாயும் நீடுழியும் அமைய வாழ்த்துகின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
மக்கள் வங்கி, யாழ்.பல்கலைக்கழகம்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**செல்வன் வரதராஜன் நிருபன்**
(சத்யசாயி பாடசாலை, மானிப்பாய்)

மானிப்பாய் சத்யசாயி பாடசாலையில் கல்வி கற்கும், செல்வன் வரதராஜன் நிருபன் 2009 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 171 புள்ளிகளைப்பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாவது இடம் பெற்றமைக்காக வாழ்த்துவதுடன், அவரை ஊக்குவித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவர் மேலும் கல்வியில் சிறந்து விளங்கவும் சத்ய சாயிபாபாவின் அருளும் ஆசியும் கிடைக்கவும் பிரார்த்திக்கின்றோம்.



மாவடி ஆலயவீதி,
சங்கானை (89747)

வ.நிரோஜன் (தம்பி)
ந.கமல்ராஜ் குடும்பத்தினர்
(சின்னண்ணா)

## புதுக்கடை திறப்பு விழா வாழ்த்துக்கள்

**ஸ்ரீ ரெக்ஸ்**

இல11, நவீன சந்தை (உட்புறம்),
சாவகச்சேரி









இன்று (10.10.2009) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இல, 11 நவீன சந்தை (உட்புறம்), சாவகச்சேரியில் இடம் பெறவுள்ள, ஸ்ரீரெக்ஸ் புடைவைக்கடை திறப்பு விழா சிறப்புற எமது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்.

**வாழ்த்துவோர்:**
திரு.திருமதி.கேதீஸ்வரன்

## 'அறிவாயில்' கண்காட்சியை மாணவர்களும் பார்வையிட ஏற்பாடு

யாழ்ப்பாணம்.ஒக்.10

வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்தினால் பல்கலைக்கழக மட்டத்தில் நடத்தப்படும் கண்காட்சி, வாசகர்களின் வேண்டுகோளிற்கிணங்க பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வார இறுதி நாள்களான சனி, ஞாயிறு தினங்களில் இந்தக் கண்காட்சியினை மாணவர்கள் பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 5 ஆம் திகதி தொடங்கிய இக் கண்காட்சி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.(10)

PJ CORNER IN **Pj Corner in** மற்றுமோர் புதிய அத்தியாயம் ஆரம்பம்!!

BIIT The Village Campus

**Higher Diploma in English.(HDE)**
**Path Finder to IELTS!!!**

Duration 8 Months
Course Fees 8000/=

Teach by :- Mr.S.Makeswaran (Teacher, Jaffna Hindu Collage) Specialist in English

Avarangal Junction
Avarangal

1st & 2nd Months :- Pronounciation
3rd Month :- Oral Practical
4th Month :- Listening
5th Month :- Reading
6th Month :- Speaking
7th Month ;- writing
8th Month :- Testing Modiules

நிபந்தனைகள்
- சாதாரண பரீட்சையில் C பெற்றிருத்தல். (இல்லாதுவிடத்து விசேட பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படுவீர்.)
- IELTS நோக்கமாக கொண்ட மாணவராக இருத்தல் வேண்டும்.
- பணமீளளிப்பு கிடையாது, 90 வீத வரவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

Our Computer Courses
- Diploma In Computerizes Accounting
- Diploma In Multi Media Tech
- Diploma In Vedio Editing
- Diploma In Web Designing
- Diploma In Hardware
- Diploma In Internet Technology
- Diploma In Ms-Office
- Diploma In Graphics Designing
- Programming
- ICT,GIT

Contact:0776172740
0214591055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இம்முறை வரவு - செலவுத் திட்டம் 'அவுட்'! கணக்கறிக்கை என்ற பெயரில் பூச்சுற்றல்

அடுத்த ஆண்டுக்கா[illegible] வரவு - செலவுத் திட்டத்தை இம்முறை சமர்ப்பிப்பதில்லை [illegible] அரசு தீர்மானித்திருக்கின்றது.

இடைக்காலக் கணக்கு அறிக்கை ஒன்றை மட்டுமே நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கின்றது.

வழமையாக, ஒவ்வொரு ஆண்டுக்குரிய உத்தேச வரவு - செலவுத் திட்டமும் அதற்கு முந்திய ஆண்டு நவம்பரில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். அதன் மீது பொது நிலையிலும், பின்னர் ஒவ்வொரு அமைச்சுக்கான ஒதுக்கீடுகள், செலவுகள் குறித்து குழு நிலையிலும் சூடான வாதப் பிரதி வாதங்கள் நடக்கும். இறுதியில் அது நிறைவேற்றப்படும். இதுவே வழமை. இம்முறை அப்படியெல்லாம் நடவாது.

நெருக்கடி நிலைமை போன்ற விசேட காரணங்கள் கருதி இவ்வாறு வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதை நிறுத்தி, இடைக்காலக் கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் முன்னுதாரணங்கள் - வழக்காறுகள் - இலங்கையை ஒத்த நாடாளுமன்ற ஆட்சி முறைமைகளின் கீழ் பின்பற்றப்பட்டமைக்குப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அது மறுக்கப்பட முடியாத உண்மைதான்.

ஆனால், இம்முறை இலங்கையில் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்காமல், காய் வெட்டி, இடைக்காலக் கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு அரசுத் தரப்பில் கூறப்படும் காரணம் ஏற்கக் கூடியதாக இல்லை.

அத்தகைய தீர்மானத்தின் பின்புலத்தில் வேறு பல உள்நோக்கங்கள் புதைந்து கிடக்கலாம் என்று சந்தேகிக்கப்படு வதையும் மறுப்பதற்கில்லை.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் இரண்டாம் வாரத்தில்தான் முடிகின்றது. ஆகவே, தற்போதைய நாடாளுமன்றம் அடுத்த ஆண்டின் கால் பகுதிக்கும் மேல் பதவியில் நீடிக்கக் கூடிய நிலைமை உள்ளது. முற்கூட்டியே அந்த நாடாளுமன்றம் கலைக்கப் பட்டு, நேரத்துடனேயே அதற்கான தேர்தல் நடத்தப்படு வதற்கான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியாகும் வரை, இந்த நாடாளுமன்றம் அடுத்த ஏப்ரல் வரை அதிகாரத்தில் இருக்கும் என்றே கருதப்படவேண்டும்.

அதேபோல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய பதவிக் காலமும் 2011 நவம்பர் வரை உள்ளது. முற்கூட்டியே அவர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தல் விடுக்கும் வரை, அடுத்த ஆண்டிலும் அவரே பதவியில் இருப்பார் என்றே கருதவேண்டும்.

எனவே, தற்போதைய நாடாளுமன்றம் அடுத்த ஆண் டின் முதற் கால் பகுதி முழுவதும் அதிகாரத்தில் இருப்பது இன்னும் மறுக்கப்படாத நிலையில் -

தற்போதைய அரசுத் தலைவரே தொடர்ந்தும் அடுத்த ஆண்டும் அப்பதவியில் இருப்பார் என்பதில் சட்ட ரீதியான மாற்றம் எதற்கும் இப்போது இடமில்லை என்பதால் -

இந்த அரசு, அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பது உட்பட சகல பணிகளையும் வழமைபோல முன்னெடுப்பதே நியாயமானதாகும்.

அடுத்த வருடத்தின் முதல் காலாண்டின் பின்னர் வரக் கூடிய பிறிதொரு அரசைக் காரணம் காட்டி, வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்காமல் இடைக்காலக் கணக்கறிக்கையை முன்வைக்க எத்தனிப்பது எந்த விதத்திலும் நியாயமானதும் அல்ல; ஏற்றுக் கொள்ளத்தக்கதும் அல்ல.

மேலும், அடுத்த அரசையும் தாங்களே அமைப்பர் என ஜனாதிபதியும் அவரது ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்ன ணியினரும் அடித்துக் கூறி வருகின்றனர். அப்படி அவர்கள் கூறுவது அவர்களைப் பொறுத்தவரையிலாவது உண்மை யாயின், தற்போதைய அரசை அமைத்துள்ள அவர்களே அடுத்த அரசையும் அமைக்க இருப்பதால் - எம்.பிக்களி லும், அமைச்சரவை உறுப்பினர்களிலும் சில மாற்றங்கள் நேர்ந்தாலும் கூட - அடுத்த தேர்தலின் பின்னரும் புதிய வரவு - செலவுத் திட்டத்தைத் தங்களது அரசே அமைக்கப் போகின்றது என்ற காரணத்தால், அதை வழமைபோல - நியாயப்படி - இந்த நவம்பரிலேயே அவர்கள் சமர்ப்பிப்பதில் எவ்வித தடையும் இல்லை; தார்மீகப் பிழையும் இல்லை.

ஆனால், ஆளுந்தரப்பு அப்படிச் செய்யாமல் மெல்ல நழுவப் பார்க்கின்றது. அதற்குப் பின்னணியில் முக்கிய காரணங்கள் புதைந்து கிடக்கின்றன எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

வரவு - செலவுத் திட்டம் ஒன்றை இப்போது சமர்ப்பிக் கப் போனால், இந்தத் தேசத்தை எத்தகைய பொருளாதாரப் பேர வலத்துக்குள் இந்த ஆட்சிப்பீடம் கொண்டுபோய் நிறுத் தியிருக்கின்றது என்ற விடயம் மக்களுக்குப் பகிரங்கமாகி விடும். பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தி நிற்கும் அரசு, அதற்காக நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப, எப்படி மடங்கிப் போகின்றது என்ற உண்மையை வரவு - செலவுத் திட்டம் அம்பலமாக்கிவிடும். தமது வாழ்வு நிலை பொருளா தார ரீதியில் எத்துணை கீழ் மட்டத்துக்கு இறங்கிவிட்டது என்ற உண்மை மக்களுக்குப் புரிந்துவிடும்.

அப்படியெல்லாம் நேர்வது - முற்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலையும், அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தலையும் நடத்துவதற்கு அரசுத் தலைமைப்பீடம் உத்தேசித்திருக்கையில் அவ்வாறு நேர்வது - அத் தேர்தல்களில் அரசுக்குப் பேரடியை - பேரிடியை - தந்துவிடலாம் என அஞ்சுகின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

எனவே, இதையெல்லாம் சமாளிப்பதற்காகவே வெறும் உத்தேச செலவு விவரங்களை மட்டும் காட்டும் இடைக் காலக் கணக்கறிக்கையைச் சமர்ப்பிக்கும் தந்திரோபாயத்திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

வழக்கமாக வரவு - செலவுத் திட்டத்தை உத்தியோகபூர் வமாக சமர்ப்பித்து, அங்கீகரித்த பின்னர் கூட, அரச செலவி னங்கள் அந்த அங்கீகரிக்கப்பட்ட கணக்குக்குள் அடங்கி விடுவதில்லை. அவ்வப்போது குறைநிரப்பு பிரேரணை என்ற பெயரில், வரவு - செலவுத்திட்ட ஒதுக்கீட்டிலும் விட மேலதிகமாகப் பெருந்தொகை நிதி முக்கிய அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்டு வருகின்றமை கண்கூடு; வழமை யான செயற்போக்கு.

இப்போது இடைக்காலக் கணக்கறிக்கையைப் சமர்ப்பிப்பது இத்தகைய குசும்புத்தனங்களுக்கு மேலும் உதவும். இடைக்காலக் கணக்கு அறிக்கையில் முக்கிய அமைச்சுகளுக்கு ஒதுக்கும் தொகையை, பின்னர் தேவைப்படின் பொதுத் தேர்தலின் பின்பு சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டத்தின் போதோ - சில சமயம் அடுத்த ஆண்டில் அமை யக்கூடிய புதிய அரசும், அடுத்த ஆண்டில் தனது ஆட்சிக்கு உட்படும் எஞ்சிய காலம் ஓராண்டிலும் விடக் குறைவானது என்பதால், அக்கால கட்டத்துக்குத் தன்பாட்டிலும் ஓர் இடைக்காலக் கணக்கு அறிக்கையை சமர்ப்பிக்கத் தீர்மானித்தால் அப்போதோ - அல்லது அதன் பின்னர் குறை நிரப்பு பிரேரணை மூலமோ, தேவையான அளவுக்கு மாற்றவோ, உயர்த்தவோ ஆட்சித் தலைமைக்கு வாய்ப்புக்கிட்டும்.

அந்த வாய்ப்புகள் இருப்பதால் இப்போது சமர்ப்பிக்கக் கூடிய இடைக்கால அறிக்கையில் உத்தேச செலவினத்தைக் குறைத்துக் காட்டி, மக்களின் காதில் பூச்சுற்ற முடியும் என அரசுத் தலைமை கருதுகின்றது போலத் தோன்றுகின்றது. எப் படியாயினும், போகப் போக உண்மை அம்பலமாகியே தீரும்.

# பருவமழை ஆரம்பித்தால் நலன்புரி முகாம்களிலுள்ள 2½ லட்சம் மக்கள் பெரும் அவலத்தை எதிர்கொள்வர்

## எச்சரிக்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை

வாஷிங்ரன், ஒக். 10

தடுப்பு முகாம்களில் வைக்கப் பட்டுள்ள இரண்டரை லட்சம் மக்கள் பருவமழை ஆரம்பித்தால் மாபெரும் மனித அவலத்தை எதிர்கொள்ள நேரிடும். பருவமழை வருமானால் அகதிமுகாம்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கும் நிலை ஏற்படும்.

இவ்வாறு கவலையும் எச்சரிக்கையும் வெளியிட்டிருக்கின்றது சர்வதேச மன்னிப்புச்சபை.

இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் பருவமழைக்கும் இராணுவத்துக்குமிடையில் அகப்பட்டுச் சிக்கித் தவிக்கிறார்கள் என்று தெரிவித்துச் சர்வதேச மன்னிப்புச் சபை வாஷிங்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் அது மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

நான்கு மாதங்களாகிவிட்டபோதிலும் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்க இலங்கை அதிகாரிகள் தவறிவிட்டார்கள். இந்த முகாம்களில் மக்கள் நிறைந்து வழிகிறார்கள். அடிப்படை சுகாதார வசதிகள் கிடையாது. கடந்த செப்ரெம்பரில் பெய்த கடும் மழையினால் ஆற்றுநீர் பெருக்கெடுத்து முகாம்களுக்குள் பாய்ந்து சென்றது. இதனால் கழிப்பறைகள் நிறைந்து கூடாரங்கள் வழியாக வழிந்து ஓடிய தண்ணீரில் மக்கள் மிதந்து கொண்டு காலத்தைக் கழிக்க நேர்ந்தது.

**வெளியேறுவதற்கு முகாம் மக்கள் விருப்பம்**

இந்த முகாம்களில் உள்ள மக்கள் வெளியேறுவதற்கு அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார் சர்வதேச மன்னிப்புச்சபையின் இலங்கை விவகாரம் தொடர்பான நிபுணர் யொலண்டா போஸ்ரர். முகாம்களில் வாழும் மக்கள் சிலரின் உறவினர்களுடன் தொடர்புகொண்டிருக்கிறார் போஸ்ரர். இடம்பெயர்ந்த மக்கள் கண்ணியமாக நடத்தப்படுகிறார்கள் என்பதை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

**கர்ப்பிணிகளுக்கு நேர்ந்த கதி**

செட்டிகுளம் முகாமிலிருந்து அண்மையில் தப்பி வெளியேறியுள்ள அகதியொருவர் மன்னிப்புச் சபையிடம் தெரிவித்துள்ள தகவலில், சில கர்ப்பிணிகள் அறிமுகமில்லாத மனிதர்களின் முன்னிலையில் மறைப்பு ஏதுமில்லாமல் பிரசவிக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்கப் பட்டிருந்தார்கள் என்பது தெரியவந்துள்ளது.

வைத்தியர்கள் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. அதிகாலையிலிருந்தே மக்கள் சிகிச்சைக்காக வரிசையில் நிற்கவேண்டியிருக்கிறது. கர்ப்பிணியான பெண்கள் மணிக்கணக்கில் வரிசையில் நிற்கவேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் என்று கேட்டார் தப்பி வந்துள்ள அகதி. போர் முடிவுற்றுவிட்டால் இந்த மக்களை அரசு விடுவித்தால் என்ன என்று அவர் கேட்டார்.

**கருணையல்ல அடிப்படை உரிமை**

பாதுகாப்பு, உதவி மற்றும் திருப்பி அனுப்புவது என்பதெல்லாம் கருணை செயற்பாடுகளுக்குட்பட்டவையல்ல. அவர்களின் அடிப்படை உரிமைகள் என்று கூறினார் யொலண்டாபோஸ்ரர்.

பாதுகாப்புக்கான உரிமை அவர்களுக்குண்டு. அவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்ப விரும்புகிறார்களா அல்லது மீள் குடியமர்த்தலை விரும்புகிறார்களா என்பது குறித்து அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்றார் அவர். (ப)

# பண்பாட்டுப் பேரணியுடன் இன்று இலக்கியவிழா இறுதிநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.10

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறைஅமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தால் நடத்தப்படும் தமிழ் இலக்கிய விழாவின் இறுதிநாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலய முன்றலில் இருந்து பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம் பமாகின்றது.

இந்தப் பண்பாட்டுப் பேரணி நல்லூரிலிருந்து அரசடி வீதியூடாக யாழ்.இந்து மகளிர் கல்லூரியை வந்தடையும். பிற்பகல் 2.30மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ''செ.இராச நாயகம் முதலியார்'' அரங்கில் நிகழ்வு ஆரம்பமாகும்.

வடமாகாண விளையாட்டுத் துறை அமைச்சின் கல்வி பண்பாட்டலு வல்கள் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திர சிறி கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக வட மாகாணப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஆகியோர் கலந்துகொள்வர்.

கலைநிகழ்வுகளாக கலாமண்டலம் வின்சென்ற் குழுவினர் வழங்கும் "தாண்டவம்", உருத்திராபதி இராதா கிருஷ் ணன் குழுவினர் வழங்கும் ''தொல் சுபவாத்திய பிருந்தா'' ஆகிய நிகழ்வுகளும் கடந்த 2007, 2008ஆம் ஆண்டுகளில் சிறந்த நூல் தேர்வுக்கான பரிசில் வழங்கல், மற்றும் 2008,2009ஆம் ஆண்டுகளுக்கான ஆளுநர் விருது வழங்கல் நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன.(50- 201)

# உதயன் அனுசரணையுடன் பளுதூக்கும் போட்டி நாளை மறுதினம் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.10

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும், பளுதூக்கும் அணியும் இணைந்து நடத்தும் மாபெரும் பளுதூக்கும் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்படும் இப்போட்டி நாளை மறுதினம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.

உடல் நிறையின் அடிப்படையில் பிரிவுகளாக வகுக்கப்பட்டு இந்தப் போட்டி நடத்தப்படுகின்றது. யாழ். மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான போட்டியாளர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர். இப்போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும், பளுதூக்கும் அணியும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

இப்போட்டியில் வெற்றிபெறும் வீரர்களுக்குப் பெறுமதிமிக்க பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் மாலை 4.30 மணிக்கு நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உதயன்-சுடர்ஒளி நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் கலந்துகொள்வார். சிறப்புவிருந்தினராக யாழ்.பல் கலைக்கழக உடற்கல்வி அலகின் பணிப்பாளர் கே.கணேசநாதனும் கௌரவ விருந்தினராகப் பிரபல பளுதூக்கும் வீரர் பி.மகாதேவாவும் கலந்து கொள்வார்கள். (50-86)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 25 | 11.10.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | பி.இ. 01.05 வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | மு.ப. 07.57 வரை |
| சுபநேரம்: | 09.02 - 10.32 வரை |
| ராகுகாலம்: | 04.32 - 06.02 வரை |

# இவ்வருட கந்தஷஷ்டி விரதம் எந்தத் தினத்தில்?

இந்த வருடம் கீந்தஷஷ்டி விரதம் 18.10.2009 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து 23.10.2009 வெள்ளிக்கிழமை முடிவடைவதாகத் திருக்கணிதப் பஞ்சாங்கத்திலும், 19.10.2009 திங்கட்கிழமை ஆரம்பித்து, 24.10.2009 சனிக்கிழமை முடிவடைவதாக வாக்கியப் பஞ்சாங்கத்திலும் குறிக்கப் பட்டுள்ளமை மக்களுக்குப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. கந்தஷஷ்டிக் கான விதிமுறையினைப் பார்ப்போம்.

*"ஷஷ்ட்யாம் பிரதோஷயுக் தாயாம் சூரர் சம்ஹிருத்ய ஷண்முக ரக்ஷதிமமுதாயுக்த திரிலோகாந் சராசரன் கார்த்திகே சுக்லஷஷ்ட்யாந்தீ சூரசம் ஹரா பூர்வகம் ஸ்கந்தோற்சவம்தீ சாயான்னே சூர்யாத் சர்வார்த்த சித்தயே"*

இதன் பிரகாரம் பிரதோஷ காலமாகிய மாலை 4.30 மணி முதல் 6 மணிவரையுள்ள சாயங்காலத்தில் ஷஷ்டி வியாபித்திருக்கும் போது சூரன்போர் நிகழ்த்தவேண்டும்.

ஐப்பசி மாத வளர்பிறை பிரதமையில் ஆரம்பித்து ஷஷ்டியில் விரதம் முடிவடை தல் வேண்டும். சூரன்போர் நடைபெற்ற நேரம், இரவும் பகலும் அல்லாத மாலைப்பொழுது. இந்நேரத்தில் ஷஷ்டி இருப்பதை வைத்தே சூரன்போர் நிகழவேண்டும்.

அதன் பிரகாரம் பார்த்தால், வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி 24.10.2009 சனிக் கிழமையன்று பி.ப 3.04 மணியின் மேல் ஷஷ்டித் திதி இல்லை. ஆரம்பத் தினத்தன்றும் (19.10.2009) மு.ப 10.56இற்குப் பிரதமை முடிவடைகின்றது.

கந்தஷஷ்டியில் 12 நாழிகை வரையிலான பஞ்சமியுடன் சேர்ந்த ஷஷ்டி பூர்வ வித்தா என விசேடமானது என்றும், ஸப்தமியுடன் சேர்ந்த ஷஷ்டி அபரவித்தா என நன்மை குறைந் தது என்றும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

மேலும் கந்தஷஷ்டிக்கு ஷஷ்டி முக்கியமே தவிர பாரணையில் ஸப்தமி இருக்க வேண்டும் என்ற விதி இல்லை.

இதன் பிரகாரம் 18.10.2009 ஞாயிற்றுக் கிழமை விரதம் ஆரம்பித்து 23.10.2009 வெள்ளிக்கிழமை முடிவடைவதே சரியானதாக இருக்கின்றது.

இந்தியாவிலிருந்து வெளிவரும் பாம்பு வாக்கியப் பஞ்சாங்கம், ஆற்காடு வாக்கியப் பஞ்சாங்கம், சீதாராம ஐயர் வாக்கியப் பஞ்சாங்கம், சர்வ முகூர்த்த வாக்கியப் பஞ்சாங்கம், பாரத் கணிதப் பஞ்சாங்கம், கும்பகோண மடத்துப் பஞ்சாங்கம், வாசன் திருக்கணிதப் பஞ்சாங்கம், ஸ்ரீநிவாஸன் திருக்கணிதப் பஞ்சாங்கம், திருக்கோவில் அனுஷ்டான வாக்கியப் பஞ்சாங்கம் என எல்லாப் பஞ்சாங்கங்களிலும் 18.10.2009 ஞாயிற் றுக்கிழமை கந்தஷஷ்டி விரதம் ஆரம் பித்து 23.10.2009 வெள்ளிக்கிழமை சூரன்போர் எனக் குறிக்கப்பட்டுள்ளது.இலங்கை வாக்கியப் பஞ்சாங்கம் மட்டுமே முரணுற்று நிற்கின்றது.

கொழும்பிலுள்ள ஆலயங்களான பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம், ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயம், வத்தளை ஹேகித்தை முருகன் ஆலயம், வத்தளை ஹுணுப்பிட்டி முருகன் ஆலயம், பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயம், கொழும்பு சம்மாங் கோடு கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் முதலிய ஆலயங்கள் யாவும் 18.10.2009 ஞாயிற்றுக்கிழமை கந்தஷஷ்டி விரதத்தை ஆரம்பித்து 23.10.2009 வெள்ளிக்கிழமை சூரன் போர் நடை பெறுமென அறிவித்துள் ளனர்.

எனவே, மக்கள் இதை அவதானித் துக் குழப்பம் நீங்கி விரதங்களை அதற்குரிய காலத்தில் அனுஷ்டித்து நற்பேறுகளை அடைவார்களாக

மு.சுந்தரலிங்க தேசிகர்
திருகோணமலை

*(இந்தியாவிலிருந்து வெளிவரும் சில பஞ்சாங்கங்களின் கந்தஷஷ்டி விரதக் குறிப்புப் பற்றிய பிரதிகளையும் கட்டுரைகளையும் இணைத்துள்ளார்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலியில் தென்னங்காணியில் புதைக்கப்பட்டிருந்த துப்பாக்கி, ரவைகள் மானிப்பாய் பொலிஸாரால் மீட்பு

சண்டிலிப்பாய்,ஒக்.10

மர்னிப்பாய் பொலிஸ் பகுதியில் தென்னங்காணியில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியையும் அதற்குரிய ரவைகளையும் மானிப்பாய் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

நவாலிப் பகுதியில் உள்ள ஒரு தென்னங்காணியில் நிலத்துக்கடியில் துப்பாக்கி புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திர ஜெயவீர தலைமையில் சென்ற சார்ஜன்டுக்கள் தசநாயக்கா,ஜெயந்த, சாந்த, கான்டபிள்களான சந்திரலால,ரசித் ஆகியோர் அடங்கிய குழு நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு துப்பாக்கியையும் அதற்குரிய சுமார் 50 ரவைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

(1-115)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.10

'இளைஞர்களுக்கான நாளை' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பாசையூர் சென்.அன்ரனிஸ் வி.கவும் , நவசக்தி வி.கவும் மோதுகின்றன.

(1-23)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்முகநாதன் தனலக்ஷமி



சூளானை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் தனலக்ஷமி கடந்த (06.10.2009) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் அப்புத்துரை-செல்லமுத்து தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ் சென்ற சண்முகநாதனின் பாசமிகு மனைவியும், செல்லச்சாமி (ஓய்வு பெற்ற சுகாதார மேற்பார்வையாளர்), தங்கவேல், வடிவேல், கதிரவேல், செல்வநாயகி, ஸ்ரீகாந்தமலர் (கிளி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராமச்சந்திரன் (வேலை அத்தியட்சகர், வலி.தெற்கு பிரதேச சபை), குகநாதன், பூமணி, ஸ்ரீரஞ்சினி, கோமதி, இந்துமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.10. 2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்ல த்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூளானை,
சுன்னாகம்.
0212240584

தகவல்,
ஆ.செல்லச்சாமி (தம்பி)

### விஸ்வலிங்கம் செல்லம்மா

பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், 855,K.K.S. வீதி, தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் செல்லம்மா கடந்த (08.10.2009) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் பெருமாள் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னையா - இராசமணியின் அன்புச் சகோ தரியும், காலஞ்சென்ற துரைராஜா மற்றும் குமாரசாமி, கனகரெத்தினம் ஆகியோரின் சிறிய தாயும் , திலகவதி, ஜெயலட்சுமி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 855, கே.கே.எஸ்.வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்

தகவல்: சி.குமாரசாமி
சி.கனகரெத்தினம்
(பெறாமக்கள்)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ 27.02.1983
கண் நெகிழ 21.09.2008

அமரர்
தருமலிங்கம் குமாரராஜ்

(திதி: அபர ஷப்தமி)

எங்கள் அன்புச் செல்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று (10.10.2009) சனிக்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"நீண்டு வளர்ந்த நீ வளர்த்த தென்னை
நின்னைத்தேடி இலை சோர்கிறதே!
மாண்ட துயர் ஆறவில்லை மகனே
மடி மீது தவழ வரமாட்டாயோ!"
"என்றென்றும் எம் நெஞ்சங்களில்
உந்தன் நினைவு!
இன்னும் ஒரு பிறப்பு உண்டேல்
எம்மில்லம் வா மகனே!"

குமரபதி
அல்வாரை தெற்கு,
மீசாலை

(சி/561629)

குடும்பத்தினர்,
அம்மா, அப்பா, உற்றார்,
உறவினர்.

## புலமைப்பரிசில் முடிவுகள் நேற்று வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஒக்.10

கடந்தவாரம் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று யாழ்ப் பாணத்திற்கு வந்து சேர்ந்தன.

பரீட்சைத் திணைக்களத்தினால் அண்மையில் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களின் பெறு பேறுகள் யாழ். மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் தத்தமது கல்வி வலயங் களுக்கு இன்று சென்று தமது பாடசாலை மாணவர் களின் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (1-9)

## ஊர்திப் பவனியை ஒட்டி வீதிகள் மூடப்படும்

யாழ்ப்பாணம்,ஒக் 10

வடமாகாண தமிழ் இலக்கிய நிகழ்வின் மூன்றாம் நாள் நிகழ்வுகளாக பண்பாட்டு விழுமியங்களைச் சித்தரிக்கும் ஊர்திப்பவனி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறுவதால் அந்த நேரத்தில் குறிப்பிடப்படும் சில வீதிகள் தற்காலிகமாக மூடப்படவுள்ளன.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக உள்ள பருத்தித்துறை வீதி, அரசடிச்சந்தி வழியாக கந்தர்மடம் சந்தியில் இருந்து யாழ். இந்து மகளிர் கல்லூரி வரையான வீதிகள் தற்காலிகமாக மூடப்படவுள்ளன.

நிகழ்வுகளிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வாகனங்கள் குறிப்பிட்ட வீதிகளில் பயணிப்பதைத் தவிர்த்து மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு விழா ஏற்பாட்டாளர்கள் மக்களைக் கேட்டுள்ளனர்.

(1-10-111)

## மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக் .10

யாழ் மாவட்டதில் தடகளப் பெருவிளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாண பொது நலகத்தில் நடை பெறவுள்ளது.

வடமாகாணக் கல்வி கலாசார விளை யாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி கலந்து கொள்வார்.

நிகழ்விற்கு தடகளப்போட்டிகளில் வெற்றியீட்டியமாணவர்களை வருகை தரும்படி வடமாகாண கல்வி கலாசார விளை யாட்டு அமைச்சுச் செயலர் கேட்டுள்ளார்.

(1-10)

## மரண அறிவித்தல்கள்

### நடராசா சுந்தரலிங்கம்



தாவடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சுந்தரலிங்கம் நேற்று (09.10.2009) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-சரஸ்வதி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியினரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், கௌரி (லண்டன்), இளங்கோ (வவுனியா வளாகம்), கலைவாணி, கீதாஞ்சலி (டென்மார்க்), சுமதி (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வநாத் (லண்டன்), குமுதா (சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா), ஜெயரட்ணம் (ரட்ணகோபால் அன்சன்ஸ்), அரவிந்தன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.10.2009) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப் பட்டு தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(சி/561628)

தகவல்,
குடும்பத்தினர்.

### திருஞானசம்பந்தர் பாலேந்திரன்

(ஓய்வுபெற்ற வடபிராந்திய பொறியியலாளர், இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில்)

தெல்லிப்பழை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானசம்பந்தர் பாலேந்திரன் நேற்று (09.10.2009) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ஆனையிறவு, உப்புக் கூட்டுத்தாபன முன்னாள் அத்தியட்சகர் காலஞ்சென்ற முதலியார் திருஞானசம்பந்தர் - செல்லம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் (முன்னாள் சுகாதார போதனாசிரியர், புன்னாலைக் கட்டுவன்) - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், லோகராணியின் அன்புக் கணவரும், உமேஷ், ரமேஷ், நந்தினி, ஜதீஷ் ஆகியோரின் அன்புத் தகப்பனும், ஷியாமளா, உஷா, யோகேஸ்வரன், கல்பனா ஆகியோரின் அன்பு மாமனும் கௌசிகா, சுவஸ்திகா, ரிஷிக்கா, நிவேஷிக்கா, பிரவீன், கிஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான திருமதி லீலாவதி செல்லையா, திருமதி ரத்தினாவதி சிவஞானசோதி, கணேந்திரன் (மகாராஜா நிறுவன முன்னாள் பணிப்பாளர் ) மற்றும் மகேந்திரன் (பெனின் சுலா குறுப்), இராஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான செல்லையா (சட்டத்தரணி), சிறிஸ்கந்தராசா, முரளிதரன், தயாபரன் மற்றும் சிவஞானசோதி (முன்னாள் உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி) தாட்சாயிணி, கனகாம்பிகை, இந்திராணி, திருமதி டாக்டர் இந்திராணி சத்தியநாதன் (முன்னாள் பொறுப்பு வைத்திய அதிகாரி, கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை), திருமதி விஜயராணி பத்மநாதன், திருமதி யோகராணி வன்னியசேகரம், திருமதி தர்மராணி ஜெகநாதன், சண்முகதாசன் (முகாமையாளர், சம்பத் வங்கி, மன்னார்), யுகேந்திரராஜா, நந்தகுமாரன் (ஆசிரியர், சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), திருமதி தயாவதி சபாநடேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.10.2009) ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
021 321 4931

தகவல்
த.நந்தகுமாரன் (மைத்துனர்), ஆசிரியர்
சென்ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்

### சின்னத்தம்பி சண்முகநாதன்



நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியை பிறப்பிடமாகவும் சுழிபுரம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகநாதன் நேற்று (09.10.2009) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை- சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சிவயோகத்தின் அன்புச் சகோதரனும், மைதிலி, மகிந்தன், சயந்தன்,ஜெயந்தன், ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜதுரை, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் , அன்னம்மா ஆகியோரின் மைத்துனரும், நிமல்ராஜ், சாமினி, ரமா ஆகியோரின் மாமனும்,பாவனா, ஹாசினி, அஜகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், திரு.திருமதி. சற்குணநாதன்-சிவயோகம், திரு.திருமதி பத்மநாதன்-கனகேஸ்வரி ,திரு.திருமதி கணேசன் - ராஜேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2009) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில், அவரின் இல்லத் தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம் பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல-88 ,யாழ்வீதி,
யாழ்ப்பாணம். 222 9495

(89743)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர், பாடசாலை அதிபர், உபஅதிபர் ஆகியோர் விழா மேடைக்கு அழைத்துவரப்படுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொமர்ஷல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் இ.குலேந்திரன் உரையாற்றுவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
திருமதி வசந்தராணி குலேந்திரன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் கலை நிகழ்வின் ஒரு காட்சியையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம்.

## வடமராட்சி வலயப் பாடசாலைகளின் மேம்பாட்டுத் திட்டச் செயலமர்வு

வடமராட்சி வலயப் பாடசாலை மேம்பாட்டுத் திட்டச் செயலமர்வு எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு புலோலி மெ.மி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் வடமராட்சி வலயத்தில் பணிபுரியும் சேவைக்கால ஆலோசகர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள் ஆகியோர் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (203-236)

## வடமராட்சியின் பிரதேசச் செய்திகள்

## வாசிப்பு மாத நிகழ்வுகள்

வடமராட்சி, ஒக்.10

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு டெங்கு ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும், படக்காட்சியும் எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்குப் புலோலி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எம்.ரவிச்சந்திரன் கருத்துரை வழங்குவார். (203-236)

## வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.10

மானிப்பாய் பிரதேச சபையின் வலி. தென் மேற்குப் பிரதேச அலகிற்குட்பட்ட மாதகல்- பெரியவிளான், அந்தோனியார் ஆலய வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியூடாக பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பலர் பயணம் செய்து வருகின்றனர்.

போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் மிக மோசமான நிலையில் இவ்வீதி காணப்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201)

## நூல் வெளியீட்டு விழா

வடமராட்சி, ஒக்.10

ஆசிரியர் அ.பௌநந்தி எழுதிய "செ.கணேசலிங்கன் நாவல்கள் - ஓர் ஆய்வு" என்னும் நூல் வெளியீட்டுவிழா நாளை 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டிப் பிரதேசசபை மண்டபத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் அறிமுகவுரையை நிகழ்த்துவார்.

வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை முதுநிலை விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். ஓய்வு பெற்ற அதிபர் கி.நடராசா முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார். (203-236)

## தென்மராட்சி நலன்புரி நிலையப் பாடசாலைகளிலிருந்து

# சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவருக்கு விண்ணப்பப் படிவங்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஒக்.10

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையப் பாடசாலைகளில் இருந்து ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்துள்ளன.

நலன்புரி நிலையப் பாடசாலைகளின் அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

இதேவேளை நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இணைந்துள்ள மாணவர்களுக்கான படிவங்களை அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் பெற்று விண்ணப்பிக்குமாறும் அறிவித்துள்ளார்.

பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாகப் பரீட்சை எழுத முடியாமல்போன மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவித்துள்ளார். (203-207)

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் கிராமியக் கலைவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.10

திருமறைக் கலாமன்றம் கிராமிய 'கலை விழா' நிகழ்வை நடத்தவுள்ளது.

இவ்விழாவின் ஓர் அம்சமாக கிராமியப் பாடல்போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டி தனிப்பாடல் போட்டி, குழுப்பாடல் போட்டி என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

கிராமிய மணம் கமழும்ஐந்து கிராமங்களில் நடத்தப்படவுள்ளது. இரண்டு சுற்றுக்களாக நடைபெறவுள்ள போட்டிகளில் முதற் சுற்று அந்தந்தக் கிராமங்களில் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான இறுதிச் சுற்று பொதுவான போட்டியாக நடத்தப்படவுள்ளது.

போட்டி விதிகள் வருமாறு:

* கிராமியப் பாடல் போட்டியில் 15-30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்.
* கிராமியப் பாடல் போட்டியில் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ எவரும் பங்குபற்றலாம். ஆனால் அவர்கள் அக் கிராமத்தைச் சேர்ந்தவர்களென கிராம சேவையாளர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
* குழுப்பாடல் போட்டியில் 6-12 பேர் பங்குகொள்ள முடியும்.

கிராமியப் பாடல் போட்டியில் பாடப்படும் பாடல்கள் அந்தந்தக் கிராம கலாசாரப் பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

* இப்பாடல் போட்டியில் பாவிக்கப்படும் இசைக்கருவிகள் கீழைத்தேய இசைக் கருவிகளாக இருக்க வேண்டும்.
* கிராமியப் பாடல் போட்டிக்கான நேரம் தனிப்பாடல் 7-9 நிமிடம், குழுப் பாடல் 8-12 நிமிடம் வரையானதாகும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தோர் விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பதாக 'கிராமியப்பாடல் போட்டி, பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்'என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வலி.தென்மேற்கு பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தெரிவித்துள்ளார். (203-201)

# சாவகச்சேரி ஆயுள்வேத மருந்தகத்தில் பிரதி வியாழக்கிழமைகளில் இலைக்கஞ்சி

யாழ்ப்பாணம்,ஒக்.10

சாவகச்சேரி ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் இலைக்கஞ்சி நேற்றுமுன்தினம் தொடக்கம் மீண்டும் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி வியாழக்கிழமைகளில் மருந்தகத்திற்கு வருவோருக்கு இலைக்கஞ்சி வழங்கப்படுமென மருந்தகப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

ஏற்கனவே மருந்தகத்தில் வாராந்தம் இலைக்கஞ்சி வழங்கப்பட்டதாகவும் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலைய மக்களுக்கு இலைக்கஞ்சி வழங்கியதால் மருந்தகத்தில் வழங்கப்படவில்லையெனவும் தற்போது நலன்புரி நிலையங்களுடன் மத்திய மருந்தகத்திற்கும் பிரதி வியாழக்கிழமைகளில் இலைக்கஞ்சி வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

# விஞ்ஞான பீட புகுமுக மாணவர்களுக்கு எதிர்வரும் 21ஆம் திகதி வரவேற்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.10

கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சையின் அடிப்படையில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு அனுமதிபெற்ற மாணவர்களுக்கான வரவேற்பு மற்றும் வழிகாட்டல் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு விஞ்ஞானபீட பௌதிகவியல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவர் நலன் சேவை... உதவிப் பதிவாளர், மருத்துவ அ... மாணவர் ஒன்றிய... புதிய மாணவர்களை வரவேற்று பல்கலைக்கழகச் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிப்பர்.

அன்றைய தின நிகழ்வைத் தொடர்ந்து சில நாள்களுக்குக் கற்கை நெறிகளுக்கான அறிமுகம், ஆங்கிலம் கற்பித்தலுக்காகத் தரம் பிரிக்கும் தேர்வு, கணனி, ஆங்கிலம் கற்றலுக்கான வசதிகள் தொடர்பான அறிமுகம், விளையாட்டுத்துறை வசதிகள், நூலகப்பாவனை தொடர்பான கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன.

இந்த மாணவர்களுக்கான கற்கை நெறிகள் அடுத்தமாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ... இ.குமாரவடிவேல் ... (203-201)

## நூல் வெளியீடும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.10

சமகால தகவல் தொழில்நுட்ப நூல் வெளியீடும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருத்தரங்கும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

## கைதடி அ.த.க.பாடசாலையே முதலிடத்தைப் பெற்றது

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற மாகாணமட்டத் தமிழ்த்தினப் போட்டியில் நாட்டுக் கூத்து -வடமோடி திறந்தபோட்டியில்-

கைதடி- நாவற்குழி அ.த.க.வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்தப் போட்டியில் நாட்டுக் கூத்து -தென்மோடி போட்டியில் இந்தப் பாடசாலை இரண்டாம் இடம் பெற்றதாக வெளிவந்த தகவல் தவறு என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (1-204)

## கணித பாட விசேட பரீட்சைக்கு தோற்ற முடியாத பரீட்சார்த்திகளுக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.10

இடப்பெயர்வு காரணமாக கடந்த வருடம் ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் கணித பாட விசேட பரீட்சையில் தோற்ற முடியாத மாணவர்களுக்கு விசேட பரீட்சை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடம் கணிதபாட விசேட பரீட்சைக்குத் தோற்ற முடியாத தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களும் வெளியேறிய மாணவர்களும் தமது பெயர்,சுட்டிலக்கம் போன்ற விவரங்களை தத்தமது அதிபரிடம் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

## கந்தர்மடம் சந்தியிலிருந்து பழம் வீதி வரையான பகுதி மூடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.10

பலாலி வீதியில் கந்தர்மடம் சந்தியிலிருந்து செல்லும் வீதி மதகு கட்டும் வேலைகள் ஆரம்பமாக இருப்பதால் கந்தர்மடம் சந்திக்கும், பழம் வீதி சந் திக்குமிடைப்பட்ட பலாலி வீதியின் பகுதி இன்று சனிக்கிழமை தொடக்கம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்த வீதியில் செல்லும் பயணிகள் அனைவரும் மாற்றுப் பாதையாக அரசடி வீதியின் பகுதி- பழம் வீதி ஆகியவற்றை மறு அறிவித்தல் வரும்வரை பயன்படுத்துமாறு யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார். (2..4)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.10

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட வலய மட்ட சைவசமய பாட பரீட்சையில் வகுப்பு ரீதியாக சித்திபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சைவசமயபாட முதன்மை ஆசிரியர் செல்வி இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்து கொள்வார். (...-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் சிறிய கூட்டுறவு நகர் ஒன்று குருநகர் 32 'ஏ' தொடர்மாடியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மங்கள விளக்கேற்றுவதையும் சங்கத் தலைவர் கே.தெய்வேந்திரன் உரையாற்றுவதையும் முதல் இரண்டு படங்களிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர சபையின் துணை மேஜர் து.இளங்கோ, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.சிவலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: நந்தன்)

# புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.10

ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடி வுகள் இணையத்தளம் ஊடாக வெளியாகியுள்ளன.

இணையத்தளத்தில் பெற்ற முடிவுகளின் பிரகாரம் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த முடிவுகள் சில வருமாறு:-

சென்.ஜோன் பொஸ்கோ
(இப் பாடசாலையிலிருந்து162 பேர் தோற்றியிருந்தனர் 75 பேர்சித்தியடைந்தனர்)

த.நீலலோகன்-184, செ. செந்தில்குமரன்-184, ந. நிரஞ்சன்-176, ரா. அட்சயன்-175, போ. கோபிசாளினி-175, ர.லதாங்கி-173, வ.யதுஷன்-173, ச. சிவஸ்திகன்-172, உ. கேதீஸ்-169, யூ. ஜீன்தியோ ஜினி-169, தே.மதுமிலன்-168, அ.டிவுலகானந்- 168, இ.கிஷாந்-168, சி.கிருத்திகன்-168, பீ.லூட்ஸ் கிளாறா-168, ஹ.அஜந்தன்- 167, பி.சாருஜனன்-167, கு. சாருஜன்-166, ஸ்ரீ.தனுசிகன்- 166,ந.வித்தியா-166, றா.கொன்சன் வேஜின்- 166, வ.கஜானன்- 164, கோ.தீபனா-164, இ.தர்சிகா-164, க.கிஷான்- 163, பு.தர்மிகா-161, சி.சுபாங்கி- 160, நா.சுபகேதன்- 160, ப.விதுரசன்-159, ஸ்.தர்மிகா-159, மு.லக்ஸ்மன்- 159, ம.சங்கவி-159, ர.விதுஜா-158, இ.நிரூசன்- 158,ச. றொனால்ட்-157, சி.அபிகிருஸ்ணா- 156, ஞா.நந்தரூபன்- 156,ஜெ.துஷாயினி- 156, ந. திபேந்திரன்- 155, கு.சகானா-155, த.அனோஜா-155, ரூ.அனற்அபிஷா-155, க.மாலவன்-155, கு.சரவணன்- 154, பெ.மிசேல்பியோனா-154, சி.துளசிகன்-153, க.மோனலிசா-153, அ.நிகேதா- 152, இ.சங்கவி-152, யு.யதுர்சன்-151, உ.அஸ்வத்- 151, கே. பிரியசாருணி- 151, த.தரணி தரன்-151, ர.ஜனோஜன்-150, கு.கபிலா- 150, க.யோபிசுதன்-150, சி.ஜெறோமி- 149, க. வருண்யா-149, செ. ஏனோக்ராஜ் 148, நி.மயூரேஷ்- 148, ஜெ.துஷாரா-147, தே. மதுரங்கி-144, ம.ரவீந்திரஷங்கர்- 144, பு.கஜனி-144, யு.கமிலியா- 144, க.காஞ் சீலன்-144, ச.விதுரா-143, வி.பிரவீணன்- 142, ஜெ.கஜனன்-142, அ.தாட்சாயினி- 142, சா.சானுசன்- 141, அ.சேனுகயாணா- 141, அ.சுஜிற்றா பென் செலஸ்ரின்-140, இ.வர்த்தனா - 140, ஜெ.செனோவா- 140 (9)


## ST.JOHN'S COLLEGE, JAFFNA ANNUAL PRIZE GIVING 2009

Saturday 10th October 2009 at 10.00 a.m.

**Chief Guests:**
***Prof.N.Shanmugalingan***
*Vice Chancellor, University of Jaffna*
&
***Mrs.Gowri Shanmugaligan***

**Chairman**
***Ven S.P.Nesakumar***
Archdeacon of Jaffna & Manager of the College

Parents, Old Boys & Well- Wishers are cordially invited

(சி/561612) **Principal, Staff & Students.**


## முதியோர், மாற்றுஆற்றலுடையோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 10

சர்வதேச முதியோர், மாற்று ஆற்றல் உடையோர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் டெனிஸ் அகதிகள் சபை தலைமை அதிகாரி யோ. ஆன் கிங்சிலி முதன்மை விருந்தினராகவும், மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ர.ஞானவேல், தலை மைப்பீட சமுர்த்தி முகாமையாளர் எஸ்.பி. பாலகரன், இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் சி.தயாளன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

பிரதேசத்தைச் சேர்ந்த 250 முதியோர், மாற்று ஆற்றல் உடையோர் ஆகியோருக்கு நுளம்புவலை மற்றும் உடுபுடைவைகள் வழங்கப்பட்டன. (203-207)

## பட்டம்பெறும் மாணவர்களுக்குக் கலந்துரையாடல்

உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு நிகழ்வு அடுத்த மாதம் 4 ஆம்திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்களுடனான கலந்துரையாடல் நிறுவனத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற் பாட்டில் யாழ்.தொழில்நுட்ப நிறுவனத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் நிறுவனத்தில் கல்விகற்று பட்டம்பெறவுள்ள சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1-10)

# மரண அறிவித்தல்கள்

## கதிரேசு சடாட்சரம்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு சடாட்சரம் நேற்று முன்தினம் (08.10.2009) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு-நாகமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் மகேஸ்வரி , சிவஞானம், மகாலிங்கம் (மகாராசி ரெக்ஸ், சுண்டுக்குளி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருளானந்தம், பூபதிநாயகி, ராஜலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.10.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இல.134, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பரியோவான் ஆலய (இலங்கை திருச்சபை) கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.மகாலிங்கம்
(மகாராசி ரெக்ஸ்- சகோதரன்).

(89735)

## சோமசுந்தரம் நகுலேஸ்வரன்



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் சுவிஸில் முன்னர் BADEN நகரிலும், தற்போது BASEL நகரில் வசித்து வந்தவருமாகிய சோமசுந்தரம் நகுலேஸ்வரன் 04.10.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்(சிங்கராசா)-பூமணி தம்பதியினரின் பாசமிகு மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.10.2009 வியாழக்கிழமை அன்று சுவிஸ் நேரப்படி காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை Friedhof Amhoernli, Hoernliallee-70, CH-4125 Riehen (BASEL), SWITZERLAND என்னும் முகவரியில் நடைபெற்று பின்பு 12.15 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.பத்மநாதன் (சகோதரன்)

203/6, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (89733)


## வீடு வாடகைக்கு உண்டு

இலந்தைக்குளம் வீதியில் நவீன, பெரிய வீடு வாடகைக்கு உடனடியாக உண்டு.

தொடர்பு: 0112596429,0718565502

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

93,ஈச்சமோட்டை வீதியில் 3 பரப்புக் காணி,வீடு என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:0213210396,0779941079

## வாடகைக்கு

பலாலி வீதியில் 4 படுக்கையறை, Hall, Kitchen, Attach Bathroom வாகனத்தரிப்பிட வசதியுடன் வீடு [illegible]

தொடர்புகளுக்கு :- 0776636542 (89728)


## புனரமைப்புக் கூட்டம்

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய பழைய மாணவர் சங்க புனரமைப்புக் கூட்டம் நாளை பி.ப.3 மணிக்கு சங்கத் தலைவர் மா.மெய்யழகன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை நலன்கருதி பழைய மாணவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். (203-236)


அம்மா பகவான் சரணம்

## சாரங்கன் பூஞ்சோலை

எம்மிடம் நல்லின செம்பரத்தைகளும் பல வர்ணக் குறோட்டன்களும், சைப்பிரஸ் கன்றுகளும் , நல்லின ஒட்டு மாங்கன்றுகளும், ஒட்டுத் தேசிகளும் மற்றும் மலை வேம்பு, சமண்டலயம்பு, மாதுளை, பலா, தென்னை , பாக்கு மரக்கன்றுகளும் சகலவிதமான பூங்கன்றுகளும், பூங்கன்றுகளை நோய்த் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பதற்குத் தேவையான சகலவிதமான மருந்துகளும், பிளாஸ்ரிக் மற்றும் சிமெந்திலான பூச்சாடிகளும் சீமை எலிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 295, ஆலடிச் சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி/561616)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 ★ 05 ★ 1940



இறப்பு 03 ★ 10 ★ 2007

### கலைத்தென்றல் கந்தன் நல்லையா

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரும் இலங்கை சினிமா திரைப்பட நடிகரும் தாசன் எஞ்சினியறிங் சேவிஸ் அன் கோவின் உரிமையாளரும்)

நிலையற்ற இவ் உலகில் ஐயா
நிலையான செல்வம் நீங்கள்
ஊர் போற்ற உத்தமசீலராய்
வாழ்ந்த எம் குல விளக்கே
பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
கலைக்கோர் கலைமகனாய் இருந்து
கல்வி முதற்கொண்டு பலகலையும் கற்பித்துத்
தந்த எம் ஐயாவே
ஈராண்டு சென்றும் உன்நினைவில்
தவிக்கின்றோம்............

மத்தொனி,
கரவெட்டி தெற்கு, கரவெட்டி.

என்றும் நினைவுடன்:
திருமதி நல்லையா.

(89727)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 14 ★ 09 ★ 1933



விண்ணில் 21 ★ 10 ★ 2008

### திருமதி இராசம்மா குணரத்தினம்

ஈராறு மாதங்கள் கடந்தும் அம்மா
ஆறவில்லை எம் மனம்-இன்றும்
உங்கள் நினைவலைகளை சுமக்கின்றோம்
எத்தனை உறவுகள் வந்தாலும்
எம் அம்மா போல் உறவு வருமா?
பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
மறவாது உம் அன்புக்காய் ஏங்கி நிற்கின்றோம்...?

என்றும் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

த.முகவரி: பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.
நி.மு: கிளானை, கோல்லங்கலட்டி.

(சி/561619)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர் சிந்தனை மாற வேண்டும்!

இந்திய ஆதிக்க வர்க்கமும் அதன் இலங்கை அடிமைகளும் கூட்டிணைந்து நிகழ்த்திய வன்னிப் படுகொலைக்ள் புலிகள் என்ற அமைப்பிற்குக் கிடைத்த தோல்வி மட்டுமல்ல அதன் அதிகாரம் சார்ந்த கருத்தியலுக்கும் சிந்தனை முறைக்கும் கிடைத்த மாபெரும் தோல்வி. இன்னமும் செத்துப் போய் விடாத இந்தச் சிந்தனை முறையும், அரசியலும் இன்னும் எத்தனை மனித உயிர்களைப் பலியெடுக்கப் போகின்றன என்பதே இங்கு புதிய அச்சங்களைத் தோற்றுவிக்கின்றன.

அதிகார வர்க்கத்தின் பொருளாதார நலன்கள் வரலாறு முழுவதும் பல ஆயிரக்கணக்கில் மனித உயிர்களைப் பலி கொண்டிருக்கின்றன. மத்திய கிழக்கில், ஆபிரிக்காவில், ஆசியாவில் என்று எங்கெல்லாம் தமது அதிகார நலன்களுக்காக அப்பாவிகளைக் கொன்று போட வேண்டுமோ அங்கெல்லாம் மனிதக் கொலைகளை அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றன.

அதிகார வர்க்கத்தைச் சார்ந்த கருத்தியல் என்பது புலிகள் போன்ற போராட்டக் குழுக்களின் அரசியலாக வடிவமைக் கப்பட்டிருந்தது என்பது ஒரு புறம், மறுபுறத்தில் அதுவே இன்னுமொரு வடிவத்தில் உலக மக்களின் சிந்தனை முறையிலும் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பது துரதிர்ஷ்டவசமானது. இது தான் மக்களை அழிக்கும் பாசிசமாக வளர்ச்சி பெறுகிறது: இவ்வாறு வளர்ச்சி பெற்ற பாசிசம் என்பது தான் தமிழ் பேசும் மக்களின் இலங்கை அரசிற்கு எதிரான நியாயமான போராட்டத்தையும் சீர் குலைத்துச் சிதைத்து விட்டிருக்கிறது.

அதிகாரம் சார்ந்த இந்தச் சிந்தனை முறை தகர்த்தெறியப்பட வேண்டும். உலகம் முழுவதும் அதிகார வர்க்கத்தால் ஒடுக்கப்படும் மக்களே பெரும்பான்மை. இந்தப் பெரும்பான்மை ஆளும் வர்க்கத்தின் சிந்தாந்தங்களால் சிதைக்கப் படுகின்றது. இவ்வாறான சித்தாந்தங்கள் ஒடுக்கப்படுகின்ற மக்களின் பெரும்பான்மையைச் சிதைத்து அதன் ஒருபகுதியை அதிகாரத்திற்குச் சார்பானதாக மாற்றிவிடுகிறது.

ஆளும் வர்க்கத்தோடு சமரசம் செய்கின்ற உணர்வையும், பெரும்பான்மை மக்களின் அபிலாசைகளையும் கூறுபடுத்துகின்ற இந்தப் போக்கானது அதிகாரத்தோடு சமரசத்தையும் கோருகின்றது. காலனியாதிக்க பிரித்தானியாவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கை இன முரண்பாடு இலங்கை இந்திய ஆளும் வர்க்கத்தால் தொடர்ச்சியாகக் கையாளப் பட்டு, ஆயிரக்கணக்கன தமிழ் பேசும் அப்பாவிகளைக் கொன்று புதைத்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சி மட்டும் தான் தமிழ் பேசும் மக்கள் அழிக்கப்படுவதற்குக் காரணமல்ல. வன்னியில் கொன்று போடப்பட்ட அப்பாவி மக்களின் பிணங்களின் மீது அரசியல் நடத்த முனையும் அத்தனை சிங்களப் பௌத்தப் பேரின வாதிகளும்தான் காரணம். மக்கள் அழிக்கப்பட்டாலும் புலிகள் அழிந்துபோனதைப் பெருமையாகப் பேசும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை அரசின் வெற்றியில் தானும் பங்கு கேட்கிறார். மக்கள் கொத்துக் கொத்தாக அழிக்கப்படும் போது மூச்சுக்கூட விடாமல் இலங்கைத் தேசியம் பேசிய ஜே.வி.பி யினருக்கு இப்போது மட்டும் திடீரென தமிழ் பேசும் மக்கள் மீது கரிசனை முளைவிட்டிருக்கிறது. இவர்கள் அனைவருமே மனித குலத்தின் எதிரிகள். மனித குலத்தின் ஒரு தொகுதி, சாரி சாரியாக கொல்லப்பட்ட போது பார்த்து ரசித்துக்கொண்டிருந்தவர்கள்,இன்று தமிழ் பேசும் மக்களின் பிரமுகர்கள் கூட்டத்தோடு தம்மை இந்தக் குழுக்களோடு அடையாளப் படுத்திக்கொள்ள முனைகின்றனர். இவர்களும் மனித குலத்தின் எதிரிகளே!

ஆசியாவின் ஒரு மூலையில் மக்கள் சாரிசாரியாகக் கொல்லப்பட்ட பின்னர், கால் மில்லியன் மக்களை திறந்த வெளிச் சிறைச் சாலைகளில் அடைத்து வைத்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் சர்வதேச அதிகாரவர்க்கம் தம்மை நிர்வாணமாக மக்கள் மத்தியில் அடையாளம் காட்டியிருக்கிறது.

இலங்கை, இந்திய, அமரிக்கா போன்ற சர்வதேச அதிகார வர்க்கத்தோடு மட்டும் தான் நாம் இன்னமும் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ளப் போகிறோமா இல்லை உலகெங்கும் அதிகார வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் பகுதியினரோடு எம்மை அடயாளப்படுத்திக் கொள்ளப்போகிறோமா என்பது தான் இங்கு தொக்கி நிற்கும் பிரதான கேள்வி.

அதிகாரவர்க்கத்தை நம்பியிருந்த புலிகளை அவ்வர்க்கம் கைகழுவி விட்டு, மனிதப் படுகொலைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த பின்னரும் அதே ஆதிக்க வர்க்கத்தோடு மட்டும் தான் இன அழிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் தம்மை அடையாளப்படுத்துவதென்பது கடைந்தெடுத்த முட்டாள்தனம் மட்டுமல்ல, இன்னொரு தோல்வியின் ஆரம்பத்திற்கான அத்திவாரம்.

காரணமின்றி வலிந்து சிறைவைக்கப்பட்டிருக்கும் கால் மில்லியன் மக்களை விடுவிக்க வேண்டுமென்று எந்தச் சர்வதேச அமைப்புக்களும் கோரிக்கை விடவில்லை. ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புக்களெல்லாம் சிறை முகாம்களில் மனித உரிமை குறித்தும், அவற்றின் வசதிகள் குறித்தும் அவ்வப்போது அறிக்கை வெளியிட்டபடி அவ்வப்போது தமது இருப்பைப் பறைசாற்றிக்கொள்கின்றன.

இவர்களெல்லாம் இலங்கை அரசுக்கு மறைமுக அங்கீகாரம் மட்டும்தான் வழங்குகின்றனர். நீங்கள் மக்களைக் காரணமின்றிச் சிறை வைத்திருக்கலாம். ஆனால் மனித உரிமை மீறல்களின்றிப் பார்த்துக் கொள்ளுங்கள் என்கின்றனர். அறுபது வருட காலமாக திட்டமிட்டு நடத்தப்படும் இனச்சுத்திகரிப்பை மனித உரிமைக்கு மதிப்பளித்துத் தொடரச்சொல்கின்றனர்.

இவை அனைத்திற்கும் மத்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட திஸாநாயகத்தின் கைதிற்கு எதிரான கண்டனக்கூட்டம் அதிகாரம் சாராமல் நடைபெற்ற நிகழ்விற்கு ஒரு நல்ல முன்னுதாரணம்.

புலிசார் வானொலியொன்று ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் மக்களைச் சாரிசாரியாகக் கொன்றொழிக்கும் ஒபாமாவின் ஆதரவை கோரி நிற்கும் அதே வேளை ஒபாமா அரசு புலிகளுக்கு ஆதரவு வழங்கக் கூடாது என எச்சரிக்கை ஓிடுத்திருக்கிறது.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான முரண்பாட்டின் வெளிப்பாடாகத் தான் இந்திய அரசு இலங்கைக்கு ஆதரவு வழங்குகிறது என்றும் இதற்கு மாறாக இந்திய அரசிற்கு தமிழர்கள் ஆதரவு வழங்க வேண்டுமென்றும் அதிகார வர்க்கச் சிந்தனை முறைக்குட்பட்ட இன்னொரு பகுதியினர் கோருகின்றனர்.

காஷ்மீரிலும், மேற்கு வங்கத்திலும், இன்னும் இந்தியா முழுவதும் எந்த மனிதப்பெறுமானங்களுக்கும் மதிப்பளிக்காது மனிதப்படு கொலை நிகழ்த்தும் இந்திய அதிகாரம் உலக முதலாளித்துவத்தோடு தன்னை இணைத்துக் கொள்வதற்காக இலங்கையில் மட்டுமல்ல தனது சொந்த எல்லைக்குள்ளேயே மக்களைக் கொன்று குவிக்கிறது என்பதை உணர மறுக்கிறார்கள் இவர்கள்.

உலகம் முழுவதையும் தனது பொருளாதார ஆக்கிரமிப்பிற்குள் உட்படுத்தும் நோக்கோடு இரத்தம் தோய்ந்த வரலாற்றை இன்றுவரை எழுதிவைத்திருக்கும் பிரித்தானிய வாக்குக் கட்சிகளோடு இலங்கைப் பிரச்சினை பற்றி மணிக்கணக்கில் விலையுயர்ந்த உணவு விடுதிகளுள் பேச்சு நடத்தும் பிரித்தானிய தமிழ் போரம் போன்ற புலி சார் அமைப்புக்கள், பிரித்தானியாவின்அடக்குமுறைகளுக்கு எதிராக, பிரித்தானியாவிற்குள்ளேயே போராட்டம் நடத்தும் இலட்சக்கணக்கான இடது சாரிகளை இனம் கண்டுகொள்வதில்லை.

பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காகவும், ஈராக்கிய, ஆப்கானிஸ்தானிய ஆக்கிரமிப்புக்களுகெதிராகவும் இவர்கள் நடத்திய வீரம்மிக்க எதிர்ப்பியக்கங்கள்

**- சபா நாவலன் -**

பல தடவைகள் பிரித்தானிய அதிகாரத்தை அதிரவைத்திருக்கின்றன.

ஒடுக்கப்படுகின்ற, இனப்படுகொலைக்கும், இனச்சுத்திகரிப்பிற்கும் முகம்கொடுக்கும் தமிழ் பேசும் மக்கள் அதிகாரத்தின் பக்கமல்ல, ஒடுக்கப்படுகின்ற ஏனைய மக்களின் பக்கத்தில் தான் என்ற செய்தி சொல்லப்பட வேண்டும்.

நமது சிந்தனை முறை மாற்றத்திற்கு உள்ளாக்கப்படவேண்டும். இந்தியாவிலும், இல்ங்கையிலும், உலகம் முழுவதும் பெரும்பான்மையான ஒடுக்கப்படும் மக்களை எமது பலத்திற்கு ஆதரவு சக்திகளாக இணைத்துக்கொள்வதன் ஊடாகவே தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்குப் புதிய உயிர்ப்பை வழங்க முடியும். *

# சனல் 4 விசாரணையை நடத்தாமை இராணுவத்தை அவமதிக்கும் செயல்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.10

இராணுவத்தின் 60 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டாலும், இலங்கை இராணுவம் இன்று உலகில் பிரபல்யம் வாய்ந்த ஒரு படையணியாகப் போற்றப் பட்டாலும், 'சனல் 4' வீடியோ தொடர்பில் இராணுவத்தினர் மீது பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதுதொடர்பில் எவ்வித விசாரணைகளும் நடத்தப்படவில்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் அமைப்பாளரும், எம்.பியுமான மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

இராணுவத்தினர் நாட்டுக்காக அரிய பல சேவைகளைச் செய்தாலும், தியாகங்கள் புரிந்தாலும் அவர்கள் மீதுள்ள குற்றச் சாட்டுகள் குறித்தும் விசாரணை நடத்தப் பட வேண்டியது அவசியம்.

1982களில் கதிர்காம ரூபசுந்தரி என்ற பெண்ணைத் துஷ்பிரயோகம் செய்தார் என லெப்டினன் ஜெனரலாக இருந்த அல்பட் விஜயசூரிய மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. இவர் மீது விசாரணை நடத்தப்பட்டு, சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் 16 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

1970 - 1980களில் நாட்டின் இறைமையைப் பாதுகாக்க இராணுவத்தினர் தமது உயிரைத் தியாகம் செய்தனர்.1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரத்தில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் கடந்த 20 வருட காலமாக நிலவிய யுத்தத்தின் போதும் ஏராளமானோர் கொல்லப்புட்டனர். மேலும் பலர் அங்கவீனர்களாகினர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில், 1994 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பொல்கொல்லை கங்கையில் தமிழ் இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதுதொடர்பான நபர்களைக் கைதுசெய்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் 1996இல் இராணுவத்தினரால் கிருஷாந்தி குமாரசுவாமி என்ற மாணவி மீதான துஷ்பிரயோக வழக்கில் பல இராணுவத்தினர் தொடர்புபட்டிருந்தனர். இவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நான் ஊடக அமைச்சராக இருந்த காலகட்டத்தில், 'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் பாதுகாப்புத் தரப்பு தொடர்பான கட்டுரைகளை எழுதிய இக்பால் அத்தாஸுக்கு சிலரால் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பில் உடனடியாக ஆராய்ந்து நாம் நடவடிக்கை எடுத்தோம். விமானப் படையினரே அச்சுறுத்தல் விடுத்தனர் எனக் கூறப்பட்டது. சம்பந்தப்பட்ட விமானப் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

உலகிலுள்ள சிறந்த இராணுவப் படைகளுக்கு எதிராகவும் கூட எத்தனையோ குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. உலகில் சிறந்த இராணுவமாகக் கருதப்படும் அமெரிக்க இராணுவத்தினர் மீதும் பல குற்றசாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. குற்றச் சாட்டுக்கள் எழும்போதெல்லாம், உரிய விசாரணைகளை நடத்தி அவர்களுக்கு எதிராக அந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது இவ்வாறிருக்க, எமது இராணுவத்தினர் 60 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் போது, வரலாற்றில் இல்லாத பல குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தப் பட்டுள்ளன. மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் எமது இராணுவத்தினர் மீதும் அரசு மீதும் பாரிய குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

ஆனால் இந்த அரசோ இதுதொடர்பில் எவ்வித விசாரணைகளையும் இதுவரை நடத்தவில்லை. இது எமது இராணுவத்தினருக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் செயலாகும்.

'சனல் 4' வீடியோ தொடர்பில் இராணுவத்தினர் மீது பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இதுதொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கெதிராகவும் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆரம்பத்தில் தற்போதைய அரசு இராணுவத்தினர் பற்றிக் கதைத்தாலும் தற்போது அவர்களைப் பற்றி எவருமே பேசுவதில்லை.

யுத்தத்தில் வெற்றிகொண்டவர்களை மறந்து விட்டார்கள். யுத்தத்திற்காகப் பாடுபட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உட்பட பலரை இன்று மறந்து செயற்படும் நிலை உருவாகியுள்ளது. மேலும் யுத்த வெற்றியில் பங்கு கொண்ட இராணு



வத்தினருக்கு பதக்கம் வழங்குவதற்கான யோசனை முன்னர் முன்மொழியப்பட்டது. ஆனால் இன்று அதற்கும் கூட பணம் இல்லை என்று தட்டிக்கழித்து விட்டார்கள்.

சரத் பொன்சேகாவுக்கு ஏற்ற பதவிகள் வழங்கப்படவில்லை. அவருக்கு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது எனவும் அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவரது பெயரைக் கூட ஐ.டி.என். மற்றும் ரூபவாஹினி தொலைக் காட்சிகளில் குறிப்பிடவோ அவர் தொடர்பான செய்திகளை வெளியிடவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற இராணுவ ஆயுத கண்காட்சியில் கூட அவரது புகைப்படம் அகற்றப்பட்டு ஜனாதிபதியின் புகைப் படம் மாட்டப்பட்டிருந்தது. இது மேலிட உத்தரவு என்கிறார்கள்.

என்னை அன்று பலவாறாக ஏசிய மக்கள் இன்று ஏன் மௌனமாக இருக்கின்றார்கள்? இன்று சரத் பொன்சேகாவைப் பற்றி அவருக்கு ஏற்பட்டுள்ள அநீதி பற்றி ஏன் குரல் எழுப்ப மறுக்கின்றார்கள்?

57 ஆம் படையணி பிரிகேடியர் சவீந்திர சில்வாவின் பதவித் தரமும் கூட இன்று கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக் கின் றது. இது குறித்தும் எவரும் எந்தக் கருத்தும் கூறுவதாகத் தெரியவில்லை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சுடர் 18

# மாவட்ட வலம் - கொழும்பு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## வரலாறு - I

33-T-I

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

* கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள், கலை அம்சங்கள் அவதானித்து 1-10 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - ருவன்வலி தாதுகோபுரம் B - சாஞ்சித் தூபி
C - சிகிரியா ஓவியம்.
D - பர்மாவிற்கு தூதுக்குழு அனுப்புதல்.
E - மகாகாமத்தை அபிவிருத்தி செய்தல். F - தூபாராம
G - அஜந்தா ஓவியம்
H - சிங்கள இராசதானியை மீள நிறுவுதல் I - அம்மன் கங்கை மறித்தல்
J - மாமினிய வாவி K - அம்பக்க தேவாலயம்
L - திரச சந்தேச M - ஆலாஹன பிரிவெனா

01. கம்பளை காலத்திற்குரிய படைப்புக்களைக்கொண்ட விடை எது?
1) AB 2) JM 3) MI 4) ML

02. மௌரியர் கலைச் செல்வாக்கைக் காட்டும் படைப்புக்கள் எது?
1) BL 2) ML 3) BF 4) AD

03. துட்டகைமுனு மன்னனுடன் தொடர்புடைய அம்சங்கள் எவை?
1) AB 2) AF 3) AE 4) AL

04. குப்தர் கலைச்செல்வாக்கைக் காட்டும் கலைப் படைப்புக்கள் எவை?
1) DI 2) CH 3) FM 4) KL

05. மகாசேனனின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய விடை எது?
1) KL 2) KJ 3) LK 4) LJ

06. முதலாம் விஜயபாகு மன்னனின் சாதனைகளுடன் தொடர்புடைய விடயங்கள்?
1) DL 2) DI 3) DM 4) AC

07. வெளிநாட்டு கலை மரபுகளுடன் தொடர்புடைய அம்சங்கள்?
1) KL 2) MI 3) AB 4) HB

08. தேவநம்பியதீசனின் பௌத்த மதத் தொண்டினை எடுத்துக்காட்டுவது?
1) IF 2) L 3) M 4) K

09. அநுராதபுரகால கலை ஆற்றலைக் காட்டும் விடை எது?
1) ICH 2) CB 3) AF 4) AB

10. பொலநறுவையில இராசதானி அமைந்திருந்த கால நிகழ்வுகள்?
1) NB 2) IN 3) AE 4) LB

11. முதலாவது நிரல் 2 ஆம் உலகப் போருடன் சம்பந்தப்பட்ட நாடுகளின் பெயர்களைக் கொண்டுள்ளது. 2 ஆவது நிரல் அந்த நாடுகளின் தலைவர்களின் பெயர்களைக் கொண்டுள்ளது. தலைவர்களின் பெயர்களை முதலாவது நிரலிலுள்ள பொருத்துகையில் பெறப்படும் சரியான விடை யாது?

| நிரல் 01 | நிரல் 02 |
| --- | --- |
| A ஐக்கிய இராச்சியம் | F ஹிட்லர் |
| B பிரான்ஸ் | G ஸ்டாலின் |
| C ரஷ்யா | H ருஸ்வெல்ட் |
| D இத்தாலி | I வின்ஸ்ரன் சேர்ச்சில் |
| E ஜேர்மனி | J சார்லஸ் டிகோல் |
| | K முசோலின் |

1) IGJKF 2) IJGKF 3) LJGKF 4) KJHIG

12. அநுராதபுரக் காலப்பகுதிக்குரிய சந்திர வட்டக்கற்களைப் போலன்றி பொலநறுவைக் காலப் பகுதிக்குரிய சந்திரவட்டக்கற்களில் இடபம் இடம்பெறவில்லை. இதற்குக் காரணம்?
1) மௌரிய சிற்பக்கலையின் செல்வாக்கு.
2) இந்து சமயச் செல்வாக்கு.
3) இடபத்தின் உருவத்தைச் செதுக்குவது கடினமாக இருத்தல்.
4) அக்கால மக்கள் இடபத்தை இழிவானதாகக் கருதியமை.

13. ''ஒல்லாந்தர் தாம் இலங்கையிலே கொள்வனவு செய்த வியாபாரப் பொருட்களுள் கறுவாவுக்கே கூடின அக்கறை காட்டினர்'' இதற்குக் காரணம்?
1) இலங்கையிலே உற்பத்தி செய்யப்பட்ட ஒரே ஒரு வாசனைப்பொருள் கறுவா என்பதாகும்.
2) கறுவா வியாபாரம் மூலம் அவர்கள் பெரும் இலாபத்தைத் திரட்டியமையாகும்.
3) அரசின் ஆதரவின் கீழ் கறுவா வர்த்தக ரீதியில் பயிர்செய்யப்பட்டமையாகும்.
4) இலங்கையில் கிடைத்த ஏனைய வியாபாரப்பொருட்கள் தரம் குறைந்தவையாக இருந்தமையாகும்.

14. கண்டி இராச்சியம் தொடர்பில், பின்வருவனவற்றில் இருந்து சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.
1) நாளாந்தம் தேவைப்படுபவைகளில் அதிகமானவற்றை வழங்குவதற்குத் தக்கவாறு உள்நாட்டுக் கைத்தொழில்கள் அபிவிருத்தியடைந்திருந்தன.
2) பிரதானிகளே கல்வியில் முன்னணியில் இருந்தனர்.
3) விவசாய நடவடிக்கைகளிலும் பார்க்க வியாபார நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.
4) பிரதானிகளும், பொதுமக்களும் ஆடை அணிகளை அணிந்த முறையில் வேறுபாடு இருக்கவில்லை.

15. 6 ஆம், 7ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்துடன் தொடர்புடையவர்களின் பெயர்கள் சில நிரல் 01 இல் தரப்பட்டுள்ளன. அவர்களுடன் தொடர்புடைய விடயங்கள் சில நிரல் 11இல் தரப்பட்டுள்ளன. நிரல் 02 இல் உள்ள விடயங்கள் நிரல் 01 இல் உள்ளவர்களுடன் தொடர்புபடுத்தப்படும்போது அவர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ள ஒழுங்கில் அமைந்துள்ள சரியான விடையினை தெரிவுசெய்க. நிரல் 01 இல் உள்ளவர்களின் தொடர்புடைய விடயங்கள் 02 இல் இணைக்கும் போது சரியான விடை?

| நிரல் 01 | நிரல் 02 |
| --- | --- |
| A மைக்கல் ஆஞ்சலோ | F மொழியும் இலக்கியமும் |
| B நிக்கலஸ் கொப்பநிக்கஸ் | G ஓவியக் கலை |
| C பத்தோலமியு டயஸ் | H அச்சுக்கலை |
| D தோமஸ் மூவர் | I மதச் சீர்திருத்தம் |
| E - ஜோன் கட்டன்பேர்க் | J - நாடுகாண் பயணங்கள் |
| | K - ஞாயிற்றுத்தொகுதி |

1) HJKIF 2) GKIHF 3) GKJFH 4) FHGKJ

16. 15ஆம், 16ஆம் நூற்றாண்டுகளில் கண்டி இராச்சியத்தில் நிலவிய நிலைமையை விவரிக்கும் சரியான கூற்றினை தெரிவுசெய்க.
1) பிரபுகள் வாழ்ந்த வீடுகளுக்கும் சாதாரண மக்கள் வாழ்ந்த வீடுகளுக்குமிடையே வேறுபாடு இருக்கவில்லை.
2) தனியாளினினது பதவியோ அந்தஸ்தோ அவர்களது ஆடை ஆபரணங்களில் செல்வாக்குச் செலுத்தவில்லை.
3) நாட்டிலுள்ள நிலம் அனைத்தும் அரசின் உடைமையாகும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.
4) பணப்பழக்கத்தை அடிப்படையாகக்கொண்டே வியாபாரம் நடைபெற்றது.

17. நாடுகளுக்கிடையே ஆயுதப் போராட்டம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான பிரதான காரணம்,
1) போர்கள் சர்வதேச வியாபாரம் நடைபெறுவதற்கு பெரும் இடையூறாக இருக்கும் என்பதாகும்.
2) பெறுமதி மிக்க சொத்துக்கள் அழிந்துவிடும் என்பதாகும்.
3) உயிர் சேதம் ஏற்படும் என்பதாகும்.
4) சூழல் மாசடைவதற்கு வழிவகுக்கும் என்பதாகும்.

18. தாதுசேன மன்னன் கட்டிய கலாவாவியிலிருந்து திசாவாவிக்கு நீரைக்கொண்டு செல்வதற்கு ஜெயகங்கை அல்லது யோத கால்வாய் ஒரு மைலுக்கு ஒரு அங்குலம் சாயுவுடையதாக அமைகின்றது. இதனால் ஏற்பட்டுள்ள சிறப்பு என்ன?
1) தாதுசேனனால் கலாவாவி கட்டப்பட்டது.
2) அக்காலத்தில் இருந்த நீர்ப்பாசன தொழில்நுட்பம் உயர்வானது.
3) கலாவாவியில் கிடைக்கும் அதிக நீரை திசாவாவிக்கு எடுத்துச்செல்லல்.
4) வருடம் முழுவதும் நீரைப்பெறும் கலாவாவியில் இருந்து வரண்ட வலயத்தில் நீரைக்கொண்டு செல்லல்.

19. 15 ஆம், 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் கீழ் குடியேற்ற நாடுகள் ஆரம்பிக்கப்பட்டமைக்குரிய பிரதான காரணம்,
1) ஐரோப்பாவின் சனத்தொகை அதிகரித்துச் சென்றமை.
2) பயிற்றப்பட்ட இராணுவம் பாரிய அளவில் குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டமை.
3) கடல் ஆகாரப் போக்குவரத்து விரைவாக பெருகியமை.
4) பொருளாதாரத்தில் அதிக இலாபத்தை ஈட்டுவதற்கான பெருவிருப்பம்.

20. முதலாம் உலக மகா யுத்தம் தொடர்பாக கீழே தரப்படும் கூற்றுக்களில் பிழையானதைத் தெரிவுசெய்க.
1) எதிர்காலத்தில் யுத்தங்கள் இல்லாது ஒழிப்பதற்கான இலக்கினை உடைய ஐக்கிய நாடுகள் தாபனம் அமைக்கப்பட்டமை.
2) மரபு முறையிலான யுத்த முறைகளுடன் நீர்மூழ்கிக் கப்பல்கள், டாங்கிகள் போன்ற நவீன ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டன.
3) யுத்தம் தொடர்பான பொறுப்புக்கள் ஜேர்மனி மீது சுமத்தப்பட்டமையால் அந்நாடு ஏராளமான நஷ்டஈட்டுத் தொகையைச் செலுத்தவேண்டி ஏற்பட்டது.
4) யுத்தத்தின் பின் பெருந்தொகையான ஐரோப்பிய நாடுகள் சுதந்திரம் பெற்றமையால் ஜேர்மனிக்கும் சுதந்திரம் வழங்கப்படும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டது.

21. மத்திய ஐரோப்பாவில் காணப்பட்ட மானிய முறையின் பிரதான அம்சம்?
1) நாட்டின் பொருளாதார அமைப்பு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது.
2) வர்த்தகம் வளர்ச்சியடைந்தமையால் சுயதேவையைப் பூர்த்திசெய்தல் வலுவிழக்கத் தொடங்கியது.
3) ஐரோப்பாவுக்கும் ஏனைய உலகத்திற்கும் இடையில் தொடர்புகள் வளர்ச்சி அடைந்தது.
4) பணப்புழக்கம் காரணமாக நிலப் பிரபுக்களின் செல்வாக்கு குறையத் தொடங்கியது.

22. முதலாம் உலக மகா யுத்தத்துடன் தொடர்புள்ளவர்களின் பெயர்கள் மட்டும் அடங்கிய விடை எது?
1) ஹிட்லர், புட்ரோ வில்சன், கிளெமன்சோ, ஸ்டாலின்.
2) வின்ஸ்டன் சேர்ச்சில், முசோலின், ஒலன்டோ, லோயிட் ஜோர்ஜ்
3) வுட்டோ வில்சன், லொயிட் ஜோர்ஜ், கிளெமன்சோ, ஒலன்டோ.
4) ஸ்டாலின், ட்ரூமன், வின்ஸ்டன் சேர்ச்சில், தியடோர் ருஸ்வெல்.

23. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுள் இரண்டாம் உலக மகா யுத்தத்துடன் தொடர்புள்ள நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ள வாக்கியங்கள் அடங்கியுள்ள விடை எது?
A - ஹிரோஷீமா நகரத்தில் குண்டு வீசப்பட்டமை.
B - சர்வதேச சங்கம் (நாடுகளின் அமையம்) நிறுவப்பட்டமை.
C - பேல் துறைமுகத்திற்கு குண்டு வீசப்பட்டமை.
D - பரிஸ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை.
1) A, B 2) B, C 3) A, C 4) C, D

24. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஓர் உலக யுத்தம் பற்றிய நான்கு எதிர்வு கூறல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அத்தகையதொரு யுத்தத்தின் பின்னர் ஏற்படக்கூடிய நிலைமையை எடுத்துக்கூறும் விடையை தெரிவுசெய்க?
1) எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஓர் உலக யுத்தத்தில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் வெற்றிபெறும்.
2) ஒருங்கிணைந்த முயற்சியினால் மூன்றாம் உலக நாடுகள் மேற்கு நாடுகளைத் தோற்கடிக்கும்.
3) மிக நவீனமான அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதனால் உயிரின உலகின் பெரும் பகுதி அழிவுக்குள்ளாகும்.
4) யுத்த நடவடிக்கையில் ''ரோபோ'' களைப் பயன்படுத்துவதனால் மனித வாழ்க்கை மேலும் பாதுகாக்கப்படும்.

25. திரு கோணமலைத் துறைமுகத்தை கைப்பற்றப் பிரித்தானியர் விசேட ஆர்வம் காட்டியதன் காரணம்?
1) திருகோணமலையைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் வாசனைத்திரவியங்களின் பயிர்ச்செய்கைக்கு பேர் பெற்றிருந்தமை.
2) இந்து சமுத்திரத்தில் கடல்வழி நடவடிக்களை கட்டுப்படுத்துவதற்கு திருகோணமலையின் அமைவிடம் பயனுள்ளதாக இருந்தமை.
3) திருகோணமலைத் துறைமுகத்தில் சங்கமமாகும் மகாவலி கங்கை வழியாக நாட்டின் உட்பகுதிகளுக்குப் பயணம் செய்யக்கூடியதாக இருந்தமை.
4) திருகோணமலையைக் கைப்பற்றுதல் அப்போது பலம் மிக்கதாய் இருந்த கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கான முதல் நடவடிக்கையாக இருந்தமை.

26. மலையகப் பகுதியில் 1815இல் ஆரம்பித்த பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக மக்கள் அதிருப்தி கொண்டமைக்கான காரணமாக அமைந்தது பின்வருவனவற்றுள் எது?
1) கண்டி மக்களின் பாரம்பரியங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் பிரித்தானியர் மதிப்பளிக்காமை.
2) ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனை நாடு கடத்தியமை.
3) நாயக்கர் பிரதானிகளின் அதிகாரங்களை நீக்கியமை.
4) புதிய வரிவகைகளை நடைமுறைப்படுத்தியமை.

மறுபக்கம் பார்க்க.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 09,10 பிராந்தியங்களில் நடப்பாண்டு திட்டமிடல் கருத்தரங்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்றபோது பிராந்தியம் 10 இன் தலைவர் லயன் ஆர்.செல்வநாதன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் காணலாம்.



உரும்பிராய் வாணி கல்வி நிலையத்தில் நடைபெற்ற வாணி விழாவில் மாணவர்கள் வழங்கிய கலை நிகழ்ச்சி இது.



ஊரெழு கணேச வித்தியாசாலையின் பழைய மாணவியும், ஜேர்மனியில் வசிப்பவருமான திருமதி லெனிஸ் ஜெயநிலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஓகன் இசைக் கருவியைப் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்த இசைக்கருவியை அவரின் சகோதரர்கள், குடும்பத்தினராகிய சிவராஜா ஜெயரஞ்சிதம் மற்றும் முருகவேள் ஜெயஸ்ரீ, ஸ்ரீகாந்தராஜா ஜெயகௌசலா ஆகியோர் பாடசாலை அதிபர் சி.திரிகரனிடம் கையளிக்கிறார்கள். (72)



உள்ளூராட்சி வாரத்தை யொட்டி அல்லாரை ஐங்கரன் முன்பள்ளியில் கற்பித்தல் கண்காட்சி அண்மையில் நடத்தப்பட்டது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சாவகச்சேரி பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி கௌ.விக்னகுமார் கண்காட்சியினை திறந்து வைத்த பின்னர் முன்பள்ளிச் சிறார்கள்,ஆசிரியைகள்,பெற்றோர் ஆகியோருடன் நிற்பதைக் காணலாம். (207)



அச்சுவேலி மத்திய கல்லூரியில் இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் சிறுவர் சேமிப்புப் பிரிவான 'பொன் அரும்புகள் அலகு' திறப்பு விழாவின்போது சிறுவர் சேமிப்பு அலகின் மாணவர் குழுவின் தலைவர் செல்வன் செ.நிவேஜன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் -

அலகின் ஆரம்பப்பிரிவு இணைப்பாளர் ஆசிரியர் எஸ்.சடகோபனுக்கு வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் படத்தில் காணலாம். (படம்:அச்சுவேலிச் செய்தியாளர்)



ஐ.ஐ.ஏச்.எஸ். நிறுவனத்தினரால் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் உயர் கல்விக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாய்ப்புகள் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மேற்படி நிறுவனத்தில் இருந்து வருகை தந்த டாக்டர் நிகால் டி சில்வா, டாக்டர் கீத்சிறி எதிர்சிங்க, அமில ஆகியோர் கருத்துரை வழங்குகிறார்கள். (படம்: நந்தன்)



புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 10ஆவது கிளையாக சிறிய கூட்டுறவு நகர் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி வைக்கிறார். அருகில் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி க.இராஜரட்ணம் நிற்கின்றார்.



மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலய உப அதிபர் திருமதி இ.மைதிலியின் சேவை நயப்பு விழாவில் அவருக்குப் பழைய மாணவர்கள் சார்பில் பாராட்டுப் பத்திரம் வழங்கப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்று நவராத்திரி. ஆலயமொன்றில் நடந்த ஏடுதொடக்குதல் நிகழ்வில் கலந்து கொண்டுவிட்டு எனது நண்பன் ஒருவ னின் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண் டிருந்தேன்.

'டேய் நீ இன்றைக்கு ஸ்கூல் போகல் லையடா?

அவன் ஓர் ஆசிரியர். கல்வியியல் கல்லூரியில் பயிற்சி முடித்து அதிகஷ்ரப் பிரதேசத்தில் ஆசிரிய நியமனம் கிடைத்து சேவையாற்றிக் கொண்டிருப்பவன். "இல்லையடா"

"ஏன் போகவில்லை?"

அவன் ஒரு நாள் கூட லீவு எடுக்காதவன். இப்படிச் சொன்னதால் ஏன் எதற்காக என்றுஅறிய ஆவலுடன் மீண்டும் கேட்டேன்.

"ஸ்கூல்ல சின்னப்பிரச்சினையடா" கூறியபடி சலித்துக் கொண்டான்.

"என்னடா பிரச்சினை" என்று அழுத்தினேன்.

"எங்கட ஸ்கூல்ல படிப்பிக்கிற மாஸ்டர் ஒருத்தருக்கு பொடியள் கொஞ்சப்பேர் குரூப்பா சேர்ந்து அடிச்சிட்டாங்களடா".

"என்னடா..? படிக்கிற பொடியளோடா அடிச்சவங்கள்..?"

ஆச்சரியத் தொனியில் விசாரித்தேன்.

"ஸ்கூல்ல படிக்கிற பொடியன் ஒருத்தனுக்கு அந்த மாஸ்டர் அடிச்சுப் போட்டார். அவன் தன்ர ஊர்ப்பொடியளைக் கூட்டிக் கொண்டு வந்து மாஸ்டரைச் சுற்றி வளைச்சு நையப்புடைச்சிட்டு மூக்கை உடைச்சு காயப்படுத்திப் போட்டாங்கள் . அவர் இப்ப கொஸ்ப்பிற்றலிலடா".

"என்ன! மூக்கை உடைச்சுப் போட்டாங்களா?"

"கஸ்ரப் பிரதேசத்தில வேலை செய்தாலும் எவ்வளவு பற்றுதியுடனும், அர்ப்பணிப்புடனும் அந்தப் பிள்ளையளின்ர கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்டு சேவைசெய்தம். ஆனால் இப்ப வெறுத்துப் போச்சு... மனம் சரியாய் சோர்ந்து போச்சடா.. இப்பிடியா..சீ..இப்ப எல்லாம் மாறிப்போய்ச்சடா..." என்று மனம் சலித்துப் போக அவன் கதைத்து முடித்துவிட்டான்.

கவிநேசன்

கேட்டீர்களா? இது போன்ற சம்பவங்கள் ஒரு சில தான் எமக்குத்தென்படுகின்றன. சிலசம்பவங்கள் நாம் அறியாமலே அமிழ்ந்துவிடுகின்றன. அவற்றில் வெளியுலகுக்குத் தெரியாமல் போன விடயங்களில் இதுவும் ஒன்று.




ஆசிரியர்கள் என்பவர்கள் யார்? ஒரு சமூகத்தையே ஏன் ஒரு நாட்டையே வழிப்படுத்துகின்ற பெரியவர்களை உருவாக்குகின்றவர்கள்,

உலகத்திலே புனிதமான தொழில் ஆசிரியர் தொழில் என்று கூட சொல்லலாம். அவர்கள்தான் உயிர்களுடன் பழகுபவர்கள். உயிரோட்ட மான தொழில் செய்பவர்கள்.

அத்தகைய உயிரோட்டமான உன்னத பணியாற்றுகின்ற ஆசிரியர்களைத் தாக்குவதென்பது ஒரு சமூகத்தையே தாக்கிவிடுவதற்கு சமம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆசிரியர்களை காட்டு மிராண்டித் தனமாகத் தாக்குவதால் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்ற அவர்களின் மன நிலை பாதிக்கப்பட்டு மன உளைச் சலுக்குள்ளாகி விடுவார்கள்.

ஆசிரியர்கள் தரப்பிலும் சில தவறுகள் இருக்கலாம். அதற்காக அவர்களின் தவறுகளைச் தட்டிக்கேட்கும் தோரணையில் அநாகரிக முறையில் அவர்களை நாடிச்சென்று தாக்குவது மிகவும் கேவலமான செயல் என்றுதான் சொல்லவேண்டும்.

ஒக்டோபர் 06 உலக ஆசிரியர் தின விழாவில் மட்டும் அவர்களுக்குப் பாடசாலைஅளவில், தேசிய அளவில் என்றெல்லாம் விழா எடுத்து மாலைகள் அணிவித்துக் கௌரவிப்பதில் எது வித பயனுமில்லை. முதலில் எழுத்தறிவை யூட்டிய அந்த உயிருட்டிகளான ஆசிரியத் தெய்வங்களை மனதளவில் நாம் மதித்து அவர்களுக்குரிய கௌரவத்தை வழங்க வேண்டும்.

அதைவிடுத்து ஆசிரியர்கள் விடு கின்ற தவறுகளுக்கு மாணவர்களே தங்கள் கைகளில் சட்டத்தை எடுத்துக்கொண்டு செல்வார்களானால் சமூகம் அதுவும் எதிர்கால சமூகம் வன்முறை களை நோக்கிச் செல்கிறது என்பது நிகழ்கால குறியீடாகும். இதை உணர்ந்து செயற்பட வேண்டியது அனைவரதும் கடமையாகும்.



இளைஞர்கள் தங்களைத் தாங்களே நெறிப்படுத்தி ஒழுங்கமைத்துக் கொள்ளும் முறையினைப் போதிப்பதிலும் அவர்கள் பால் அடங்கியுள்ள நற்பண்புகளையும் மனிதநேயத்தையும் வளர்ப்பதிலும் வெற்றி கொண்ட ஒரு சர்வதேச அமைப்பே சாரணியம் ஆகும். சாரணியம் இளைஞர்களின் உடல்,உள,ஆன்மீக நலத்திற்கும் புத்திக்கூர்மை, தன்னம்பிக்கை,ஆளுமை விருத்தி,ஒழுக்க மேன்மை,என்பவற்றிற்கும் பயிற்சியளிக்கின்றது.

1907 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி இங்கிலாந்துக் கால்வாயில் உள்ள பிறவுன்ஸ் தீவில் இருபது சாரணர்களுடன் பாசறை வாசத்தினை 'பேடன் பவல் 'பிரபு அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.அன்று அவர் அங்கு விதைத்த விதை பேர் விருட்சமாக அதன் கிளைகள் எட்டுத் திசைகளிலும் பரந்திருப்பதற்கு சாரணியத் தின் மகத்துவமே காரணமாகும். சாரணியம் மனிதனின் உள்ளத்திலே தூங்கிக் கிடக்கும் ஆற்றலை துலங்கவைக்கின்றது. இளம் சிறார்களை தன்னம்பிக்கை உடையவர் களாகவும் தான் வாழும் சமூகத்திற்கு உபயோகமுள்ளவர்களாகவும் பொறுப்புணர்ச்சி,கடமை, கண்ணியம்,கட்டுப்பாடு உள்ளவர்களாகவும் ஆக்குவதோடு சமயத்திற்கும் தொண்டாற்றி அவர்களை பூரண இறைமையுள்ள மனிதனாக்குவதே சாரணியத்தின் நோக்கமாகும்.

உலக சகோதரத்துவத்தையும் ,புரிந்துணர்வையும் மேம்படுத்துவது சாரணர் இயக்கமாகும். இதனையே சாரண, குருளைச்சாரண வாக்குறுதியும்,விதிகளும் எடுத்தியம்புகின்றன.

இவ் வியக்கமானது சிறந்த பிரஜைகளை உருவாக்குகின்றது என்பதற்கு விளக்கமளிக்க வேண்டியதில்லை. ஏனெனில் இதையொத்த நூற்றுக்கு மேற்பட்ட இயக்கங்கள் இவ்வுலகில் தோன்றி மறைந்துள்ளன.சில பெயரளவில்தான் இயங்குகின்றன. ஆனால் "பேடன்பவல்" பிரபுவால் ஸ்தாபிக்கப்பட்ட இவ் இயக்கமே பல்கிப்பெருகி, இவ்வுலகின் மூலைமுடுக்கெல்லாம் பரவி மற்றெல்லா இயக்கங்களிலும் மேம்பட்டு உலகிலேயே அதிகூடிய அங்கத்தவர்களை உடைய இயக்கமாக வெற்றிப்பாதையில் வீறு நடைபோடுகின்றது.

ஏ.அபிசன், சென்.ஜோன்ஸ் கல்லூரி,

## சாரணியம் என்றால்....?



# கலைகளின் மைந்தன் கலையார்வன்

பன்முக ஆளுமைகள் கொண்ட கலைஞர்களை உற்பவிப்பது குருநகர் மண்ணு
கைவந்தகலை. அவ்வகையில் குருநகர் மண்ணில் கலைமீது தாகம்கொண்ட ஜீவ
எப்போதும் தேடல்கொண்டவர் கு.இராயப்பு. இவர் நாடகம், இலக்கியம், திரைப்ப
சமூகசேவை, கணனித்தொழில்நுட்பம் எனத் தன்னுடைய ஆளுமைத் தேடல்க
விரித்துக்கொண்டே செல்வார். இப்போதும் கலைமீது நேசம்கொண்ட இந்தக்
கலைஞனுக்கு மணிவிழா நடைபெறும் இச்சந்தர்ப்பத்தில் இவரது குருதிக் குளிய
என்னும் நூலுக்கு மாகாண அமைச்சின் விருதும் கிடைத்துள்ளது. இந்த மகிழ்ச்சிய
தருணத்தில் தன்னுடைய கலைப்பயணச் சுவடுகளை உதயன் வாசகர்களோடு
பகிர்ந்துகொள்கிறார் 'கலையார்வன்' கு.இராயப்பு.

கேள்வி: கலைகள் மீதான நேசிப்பும் அவற்றுடனான தொடர்பாடலும் உங்களு
உண்டான விதம் பற்றிக் கூறுங்கள்?

பதில்: இளமைப்பருவம் அதிக தேடலுள்ள பருவம். 1960[illegible] ஆண்டுகளில்
சிறுவயதில் - எனது நண்பர்களோடு கூடியிருந்து அரிக்கன் லா[illegible] வெளிச்
நாடகங்களை வீட்டுமுற்றத்தில் நடித்திருந்தேன். அப்போதெல்லாம் பாடப்புத்
இடம்பெற்றிருக்கும் நாடகங்களே எமக்கு நடிப்பதற்கும் கைகொடுத்தன. இத்த
முயற்சியே கலைகளின் உள்நுழைவுக்கு எனக்கு விதையிட்டன. அதன்பின்னர்
பாடசாலைகளிலும், வெளியரங்குகளிலும் பல்வேறு விதமான நாடகங்களில்
பங்கேற்றுள்ளேன்.

அதில் நான் நடிகனாக மாத்திரமன்றி நாடக எழுத்துரு ஆசிரியராகவும் எனது
திருப்திகரமாகச் செய்துள்ளேன்.

அதுதவிர 1965இல் ஷேக்ஸ்பியர் எழுதிய 'ஹம்லெற்' நாடகத்தைத் தமிழி
பெயர்த்து அதை நெறியாள்கையும் செய்தேன். என்னுடைய நெறியாள்கையில்
வெளிவந்த முதலாவது நாடகம் இதுதான். நாடகம்தான் என்னை மற்றைய க
அழைத்துச் சென்றது.

கேள்வி: இதுவரையும் நீங்கள் பங்கேற்ற நாடகங்கள் பற்றி சிறு விபரமொ
தரமுடியுமா?

பதில்: 1965ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையும் 45 நாடகங்களை நான்
எழுதியுள்ளேன். இவற்றில் இரண்டு நாடகங்கள் சுவிஸ் நாட்டில்
மேடையேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதைவிட 19 நாடகங்களை
நெறியாள்கை செய்துள்ளேன். அத்துடன் 8 நாடகங்களில் நடிகனாகவும்
தோன்றியுள்ளேன். பொதுவாகவே எந்தவொரு நெறியாளரும், நாடக ஆசிரி
நாடகங்களில் தாமே பிரதான பாத்திரம் ஏற்கவேண்டுமென எண்ணுவதுண்
நான் பாத்திரப் பொருத்தம் கருதி சிறுவேடங்களில் மட்டுமே தோன்றுவேன்
சிலவேளைகளில் ஆற்றுகை நாளின்போது பிரதான நடிகர் [illegible]ாதவிடத்து
அந்தப் பாத்திரங்களை நான் ஏற்று நடித்ததுண்டு.

கேள்வி: எழுத்துலகில் உங்களுடைய கலைப் பயணம் பற்றிக் கூறுங்க

பதில்: நான் 1965ஆம் ஆண்டு முதலே கவிதை, கட்டுரை, சிறுகதை எ
ஆர்வமுடையவனாக இருந்தேன். 'கே.ஆர்.', 'குருநகர் கு.இராயப்பு' என்னு
ஆரம்பகாலத்தில் என்னுடைய படைப்புகள் சஞ்சிகைகள், பத்திரிகைகள்
வெளிவந்தன. ஆயினும் 1972ஆம் ஆண்டிலிருந்து 'கலையார்வன்' என்னு
புனைபெயரில் என்னுடைய இலக்கிய முயற்சிகள் தொடர்கின்றன.

இதுதவிர குருநகர் இளைஞர் கலைக்கழகத்தால் வெளியீடு செய்யப்ப
கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தேன். அதுதவிர இக்க
வெளியீடு செய்யப்பட்ட 'உலகின் ஒளி' என்ற தொகுப்பு நூலின் ஆசிரிய
இருந்தேன்.

இதுதவிர இலக்கியம் சார்ந்த ஐந்து நூல்களும், அறிவியல் சார்ந்த நான்
பல்துறை சார்ந்த நான்கு நூல்களும் என்னால் வெளியிடப்பட்டுள்ளன.
கடலலைகள் கொஞ்சும் நகர் என்ற நூல் 2006ஆம் ஆண்டுக்கான மாகாண
பல்துறை இலக்கிய நூலுக்கான விருதையும், குருதிக் குளியல் நூல்200
ஆண்டுக்கான மாகாண அமைச்சின் பல்துறை இலக்கிய நூலுக்கான வி
பெற்றுள்ளன.

கேள்வி: நாடகம், இலக்கியம் என்பன தவிர்ந்த உங்களது ஏனைய க
முயற்சிகள் பற்றி...?

பதில்: இறையியலையும் மக்களின் துன்பங்களையும் வெளிப்படுத்
'யாகப்பரே எங்கள் காவலரே' என்ற பாடல் இறுவட்டை வெளியி
இதுதவிர குருநகர் மண்ணுக்கே சொந்தமான நாட்டுக்கூத்துப் பாடல்க
இசைவடிவமாக்கி இறுவட்டாக வெளியிட முயற்சித்தேன். முடியவில்
வீடியோ திரைப்பட முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளேன்.

கேள்வி: தங்கள் சமூகசேவையாற்றிய நிறுவனங்கள் பற்றிக் குறிப்
பதில்: நிச்சயமாக. வெறுமனே கலைப்பணி மட்டுமே சமூகத்துக்கு
சமூகம் சார்ந்த சேவைகளும் தேவைப்படுகிறது. அதற்கேற்றாற்போல்
கலைக்கழகம், திருமறைக்கலாமன்றம், குருநகர் சிறகுவலை கடற்றெ
குருநகர் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம், கு
ஐக்கிய முன்னணி, குருநகர் குடியேற்றம், புனரமைப்புக்கான இணை
அபிவிருத்திக்கான இணையம் (போர்கன் - ஒஸ்லோ), யாழ்.பிரதேசக்
குருநகர் கல்வி விழிப்புணர்வு ஒன்றியம் போன்ற அமைப்புகளில் நா
பங்காளியாகி என்னாலான சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகி

கேள்வி: பொதுவாகவே இளையோரிடத்தில் நாடகம் சார்ந்த ஆர்
குன்றிவருவதாகக் கூறப்படுகின்றது. இதை நிவர்த்திக்க என்ன செய்
எண்ணுகிறீர்கள்?

பதில்: இது நாடகம் மட்டுமல்ல எல்லாக் கலைகளுக்குமே பொரு
இன்றைய நவீன உலகில் இளைஞர்களுக்குப் பொருத்தமானதாக இ
கூறப்படுகின்றது. ஆயினும் அவற்றை - கலைகளை - சிறுவயதில்
சிறுவர்களுக்கு ஊட்டி வளர்த்தால் அவர்களிடத்தே இயல்பாகவே
அதிகரிக்கும். இதன்மூலம் கலைகளின் உயிர்ப்பைத் தொடர்ந்து பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



…தன்

…வன்

…தருநகர் மண்ணுக்கு
…ம்கொண்ட ஜீவனாக
…கியம், திரைப்படம்,
…மைத் தேடல்களை
…ண்ட இந்தக்
… குருதிக் குளியல்
… இந்த மகிழ்ச்சியான
…வாசகர்களோடு

…பாடலும் உங்களுக்குள்

… ஆண்டுகளில் -
…ர் வெளிச்[illegible]ல்
…லாம் பாடப்புத்தகங்களில்
…டுத்தன. இத்தகைய
…. அதன்பின்னர்
… நாடகங்களில்

…யராகவும் எனது பணியை

…கத்தைத் தமிழில் மொழி
…நெறியாள்கையில்
…ன மற்றைய கலைகளுக்கும்

… சிறு விபரமொன்றைத்

…கங்களை நான்
…ல்
…9 நாடகங்களை
…களாகவும்
…, நாடக ஆசிரியரும் தமது
…எண்ணுவதுண்டு. ஆனாலும்
… தோன்றுவேன்.
…ராதவிடத்து[illegible]ாத்திரம்

…பற்றிக் கூறுங்கள்?
…ர, சிறுகதை என்பவற்றில்
…ராயப்பு' என்னும் பெயர்களில்
…பத்திரிகைகள் என்பவற்றில்
…ார்வன்' என்னும்
…கின்றன.
…வீடு செய்யப்பட்ட 'நம் ஒளி'
… அதுதவிர இக்கலைக்கழகத்தால்
…நூலின் ஆசிரியராகவும்

…யல் சார்ந்த நான்கு நூல்களும்
…ப்பட்டுள்ளன. இவற்றில்
…க்கான மாகாண அமைச்சின்
…ரியல் நூல்2007ஆம்
…நூலுக்கான விருதையும்

…து ஏனைய கலை இலக்கிய

… வெளிப்படுத்தும் விதத்தில்
…டை வெளியிட்டுள்ளேன்.
…த்துப் பாடல்களைத் தொகுத்து
…ன். முடியவில்லை. இதுதவிர

… பற்றிக் குறிப்பிட முடியுமா?
…ம சமூகத்துக்கு உகந்ததல்ல.
…கேற்றாற்போல் குருநகர் இளைஞர்
…லை கடற்றொழிலாளர் சங்கம்,
…வர் சங்கம், குருநகர் முன்னேற்ற
…கான இணையம், குருநகர் சமூக
…யாழ்.பிரதேசக் கலாசாரப் பேரவை,
…மப்புகளில் நானும் ஒரு
…டுத்து வருகிறேன்.
…ம் சார்ந்த ஆர்வம்
…க என்ன செய்யலாம் என

…க்குமே பொருந்தக் கூடியது.
…தமானதாக இவை இல்லை என்று
… - சிறுவயதிலிருந்தே
…இயல்பாகவே கலை ஆர்வம்
… தொடர்ந்து பேணமுடியும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வார வசந்தம்

தொகுப்பு: ஔண்யன்



மனிதனது வாழ்வில் நினைவாற்றல் முக்கியமான தொன்றாகும். மனிதன் சமூக வாழ்வில் சிறந்தவனாக மிளிர வேண்டுமெனில் நினைவாற்றல் அவசியமாகின்றது. மனிதன் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றிடவும் முக்கியமான விடயங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கும், அறிவைப் பெற்றுக் கொள்ளவும் நினைவாற்றல் அவசியமானதாக உள்ளது. எப்பொழுதும் சிந்தனையில் துடிப்புடன் இருக்கும் நினைவாற்றலே மனிதனுக்கு நேர்த்தியான வழிகாட்டலை வழங்குகின்றது. வாழ்வில் பல கருமங்களை நிறைவேற்றிட நினைவாற்றல் தேவையாகவுள்ளது.

''மனிதர்களின் மிகப்பெரிய பலவீனம் ஞாபகமறதி'' என்று சொல்வார்கள். ஏன் தெரியுமா? மறதி தான் மனிதனது கருமங்களையெல்லாம் மறக்க செய்து வாழ்வையும், செயற்பாடுகளையும் குழப்பிவிடுகின்றது. இதனால் வாழ்வில் பல சங்கடங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. நாம் நினைவாற்றல் உள்ளவர்களை சற்றே

## நினைவாற்றல் மனிதனுக்கு அவசியமானது

கவனித்துப் பார்த்தால் அவர்கள் கல்வியிலே சிறந்து விளங்குவார்கள். கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்ற முயல்வார்கள். எப்பொழுதும் தமது கருமங்களை ஒழுங்காகச் செய்வார்கள் . இப்படியானவர்கள் தான் சமூகத்தில் உயர்வு பெறுகின்றனர். நம்மில் பலர் பிறருக்கு செய்வோம் என்று சொன்னவற்றை, வாக்குறுதி கொடுத்ததை செய்கின்றோமா? முக்கியமான விடயங்களை எல்லாம் ஞாபகத்தில் எப்பொழுதும் வைத்திருக்கிறோமா? அவசரமான சந்தர்ப்பங்களில் ஞாபகத்தி றனுடன் செயற்படுகிறோமா? இவற்றை யெல்லாம் கேட்டுப் பார்த்தால் பெரும்பா லானோருக்கு இப்படியான பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்யும் என்பதனை உணரலாம். ஏனெனில் இது மனிதர்களின் இயல்புகளின் ஒன்று. அவசரமான வேளைகளில் மூளை வேகமாகச் செயற்படும். மூளைக்கு அதிக வேலைப்பழுவாக இருக்கும்.

இவ்வேளையில் ஞாபகத்திறன் என்பது சாத்தியமா? மூளையின் நினைவாற்றல் பகுதி உரியவாறு தகவலை அனுப்புமா? இவை நிகழ்வது சாத்தியமில்லை. எனவேதான் நம்மில் பலர் அவசரமான வேளைகளில் பலவற்றை மறந்து விடுகின்றோம். பல செயற்பாடுகளையும் மறந்து விடுகின்றோம். உதாரணத்துக்கு சிலவற்றை நோக்குவோம். வேலைக்காக நேர்முகத் தேர்வுக்குச் செல்லும்போது அவசரமும், பயமும், படபடப்பும் கொண்டு எத்தனை செயற்பாடுகளை அவ்வேளையில் மறந்திருப்போம். ஏன்? முக்கியமான ஆவணங்களைக் கூட சிலர் எடுத்திருக்கமாட்டோம். மற்றொன்றை நோக்குவோமாயின் பரீட்சைக்குச் செல்லும்போது ஏற்படும் மறதிகள். பலர் பரீட்சை அறைக்கு வந்த பின் ''அடையாள அட்டை மறந்துவிட்டோம்.

பேனாவைக் காணவில்லை. இப்படி எத்தனை சந்தர்ப்பங்கள் இவற்றுக்கெல் லாம் மனப்பதற்றமும், பயமும் காரணமாக இருந்தாலும் நினைவுக்குறைவே பெரும் பங்கு வகிக்கின்றது. நினைவுக்குறைவு தான் மேலும் நம்மைக் குழப்பி விடுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நினைவாற்றல் உள்ளவர்கள் குழப்பமடையாது இயல்பாகவே செயற்படுவார்கள்.


எனவே தான் மனிதனது சகல கருமங்களுக்கும் நினைவாற்றல் அவசியமான தொன்றாக உள்ளது. நமது ஞாபகத்திறன் இயல்பாகவே பிறப்பிலிருந்து வருவது என்றாலும் ஞாபகசக்தியை அதிகரிக்கும் முயற்சிகளில் ஈடுபடுதல் ஓரளவு பலனைக் கொடுக்கும். மனிதனை சமூக வாழ்வில் மிளிர செய்யவும், சிறப்பாகச் செயற்படவும் நினைவாற்றல் அவசியமாகின்றது.

க. மயூரன், மாதகல்.

## வாழைத் தண்டு; சில உபயோகங்கள்

* வாழைத்தண்டைக் கறி செய்து சாப்பிட்டால் வயிற்றில் உள்ள கற்கள் வெளிவந்து விடும்.
* வாழைத்தண்டின் சாறு பிழிந்து வாரம் ஒருமுறை அருந்தினால் உடல் பருமன் குறையும்.
* வாழைத்தண்டை வெட்டுவதால் கத்தி கூர்மை அடையும்.
* வாழைத்தண்டின் நாரை வெயிலில் உலர்த்தி திரிசெய்து நெய்விட்டு சுவாமிக்கு விளக்கேற்றுவது நன்மை பயக்கும்.
* வாழைத்தண்டில் வடகமும் செய்யலாம்.

திருமதி என்.கே.சர்மா
நாச்சிமார் கோயில்,கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.



## இலங்கைத் தமிழ் நவீன நாடகங்கள்



நாடகம் மேற்குலகில் நீண்ட காலமாக எழுதி நடிக்கப்பட்டு வந்தது. கவிதை நடையே நாடகத்தின் மொழியாக இருந்தது. முதலில் சமயப்பிரசார நாடகங்கள் தோன் றின. பின்பு மன்னர்கள், பிரபுக்களது வாழ்க்கைகளையும் அவர்களது போர்களையும் காதல் களியாட்டங்களையும் சித்தரிக்கும் நாடகங்களை எழுதினர்.

மேற்குலகில் முதன்முதலாக நவீன நாடகம் எழுதி நடித்தவர் நோர்வேஜிய நாடகாசிரியரான ஹென்றிக் இப்சன் (கி.பி.1828- 1906) ஆகும். இப்சனுக்குமுன்பே சிலர் யதார்த்த நாடகத்தை எழுத முயற்சித்தனர். ஆனால் அவை யெல்லாம் பரீட்சார்த்த முயற்சிகளே. நவீன நாடகத்தின் எல்லா அம்சங் களும் அவற்றில் அமைந்திருக்க வில்லை. அவர்கள் அந்த வகை நாடகங்களைத் தொடர்ந்து எழுதவு மில்லை. நவீன நாடகங்கள் எழுது வதை ஒரு கொள்கையாகக் கொண்டு, தமது கொள்கையில் உறுதியாக நின்று, அந்த வகை நாட கங்களை அழகாக எழுதி அரங்கேற் றிக் காட்டியவர் ஹென்றிக் இப்ச னாகும்.

இப்சனும் நீண்ட காலமாக மன் னர்கள், பிரபுக்களது வாழ்க்கை பற்றி, கவிதை நடையில் நாடகங்கள் எழுதிப் பாடிக்கொண்டிருந்தவர்தான். திடீ ரென்று ஒரு நாள் ஞானோதயம் வந்தவர் போல் ''இந்த நாடகங்களுக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் தொடர்பில்லை. நாடகம் என்பது சாதாரண மக்களது அன்றாட வாழ்க்கையைச் சித்திரிக்கவேண் டும். அவர்களது பிரச்சினைகளே நாடகத்தில் அலசப் படவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் அவற்றை விரும்பிப் பார்த்துப் பயனடைவர். நாடகமும் சிறக்கும்'' என்று கூறி சாதாரண மக்களது வாழ்க்கையைப் பொருளாகக் கொண்ட நாடகங்களை அவர்களது பேச்சு வழக்கிலேயே எழுதத் தொடங்கினார். அவர் நாடகத்திற்கு எடுத்துக் கொண்ட பல கருத்துக்கள் புரட்சிகரமானவை. அவர் கூறிய கருத்துக் களுக்கு அவரது நாடகங்களுக்கும் ஐரோப்பாக் கண்டத்தில் பல எதிர்ப்புக்கள் கிளம்பின. இப்சன் எதிர்ப்புக்களைக் கண்டு கலங்கவில்லை. தான் சரியென்று கண்ட நாடக வகையைத் தொடர்ந்து எழுதி, வெற்றியும் பெற்றார்! ஐரோப்பாதான் அவரது வழிக்குத் திரும்பியது. அதனால்தான் அவர் நவீன நாடகத் தின் வெளிச்சவீடு என அழைக்கப் படுகிறார்! (Light house of modern Drama)

அதன் பிறகு அறிஞர் பெர் நாட்ஷா, அன்டன் செக்காவ், டால் ஸ்டாய் போன்ற பெரிய எழுத்தாளர் கள் எல்லோரும் நவீன நாடகங் களையே எழுதி அரங்கேற்றினர். பெர்நாட் ஷா ஒருபடி மேலே போய் ''நான் இப்சனின் பக்தன் (Deciple) அவரைப் பின் பற்றியே நாடகங்கள் எழுதுகிறேன்'' என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டார்! இன்று உலகில் நவீன நாடகமே சிறந்த செல்வாக்குப்பெற்ற நாடக மாக விளங்குகிறது!

### தமிழ்மொழியில் நாடகம்

தமிழ் மக்கள் தொன்றுதொட்டு இயல்,இசை, நாடகம் என்று முத்தமிழையும் வளர்த்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பழைய தமிழ் நாடகங்களோ நாடகம் பற்றிய நூல்களோ, எமக்குக் கிடைக்கவில்லை. பழங்காலத்தில் உலகம் முழுவதும் நாட்டியமும் நாடகமும் இணைந்தே வளர்ந்து வந்திருக்கின்றன. பெரும்பாலும் நடனமே நாடகம் என்று அழைக்கப்பட்டது. தமிழ் மொழியிலும் அந்த வழக்கே இருந்திருக்கவேண்டும்.

(வளரும்)

அராலியூர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநலம் பாதிக்கப்பட்டோர் மருத்துவரை நாடாமையால் அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது

உலக உளநல தினம் 2009 இற்கு உரிய கருப்பொருள் ''உளநலத்திற்காக அணி வகுப்போம். சிகிச்சை எடுத்தலை ஊக்குவிப்போம். உளநலத்தினை மேம்படுத்துவோம்'' என்பதாகும்.

உளநல சேவையினை ஆரம்பப் பொதுச் சுகாதார சேவை வழங்கலுடன் ஒன்றித்தலே இன்றைய உலக உளநல தினத்தின் குறிக்கோளாகும். அதாவது ஆரம்பப் பொதுச் சுகாதாரசேவை மக்களுடன் ஆரம்பமாகின்றது. எனவே அங்கு சுகாதார சேவை வழங்குகையிலேயே உளநலத்தினையும் நோக்கல் சிறந்தது. பொதுவாக உளநலப் பிரச்சினைகள் ஆரம்பப் பொதுச்சுகாதார சேவைகள் மட்டத்தில் கண்டறியப்படாமலேயே உள்ளது. மேலும் உளநலப் பிரச்சினைகள் சல ரோகம், உயர்குருதி அமுக்கம், தொய்வு போன்ற ஏனைய உடல் நோய்களுடன் இணைந்தும் காணப்படுகின்றன. எனவே அவற்றுக்கான சிகிச்சையின்போது உள நல சேவைகளும் ஒன்றிக்கப்பட வேண்டியவையே ஆகும்.

மேலும் உலகில் 450 மில்லியன் மக்கள் உளநலக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர்க்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை அளிப்பதால் பெரும் சமூக உளப் பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

தமிழ் மக்கள் கோர யுத்தத்தின் வடுக்களால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளனர். எனவே உலக உளநல தினத்தில்

## இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்

தமிழ் மக்களுக்கு உள ஆரோக்கியம் மேம்படுத்தல் எவ்வாறு என்பதனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

உளநல சேவையின் பழு உலகில் மிக அதிகம். எனவே அதனை ஆரம்பப் பொதுச் சுகாதார நிலைக்கு கொண்டு செல்வதால் உரிய சேவையினை இலகுவாக வழங்கலாம். அடுத்து உளநலமும் உடல் நோய்களும் ஒருவரில் ஒன்றிணைந்தே காணப்படுகின்றது. எனவே இவற்றை வேறு பிரித்துச் சிகிச்சை செய்தல் நல்லதல்ல. மேலும் சாதாரணமாக உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் உளமருத்துவரை நாடுவதில்லை. அதனால் உரிய சிகிச்சை இல்லாது இருப்போர் தொகை அதிகம். இதனைக் குறைக்க ஆரம்பப் பொதுச் சுகாதார சேவைகள் மட்டத்தில் உளநலம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தல் வேண்டும். இதனால் உளநலப் பாதிப்புக்கு உட்பட்டோர் இலகுவாகச் சேவையினை நாட முடியும். மேலும் நோயாளர்கள் சார்பாக மனித உரிமைகளைப் பேணமுடியும். அடுத்து ஆரம்ப மட்டத்தில் உளநல சேவையினை நல்கும்போது அதனை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன், இலாபகரமானதாகவும் அமையும் இவையாவும் சிறந்த உள நலத்தினை வெளிக்கொணர உதவும். ஆரோக்கியமான சமூகத்திற்கு சிறந்த உளநலம் அவசியமானது. இதனால் தனி மனித, குடும்ப, சமூக வன்முறைகள் இல்லாது போகும். எனவே உலக உளநல தினமான இன்றைய நாளில் நாம் எவ்வாறு சிறந்த உளநலத்திற்கு அணிவகுப்போம் எனச் சிந்திப்போமாக. ★

உலக உளநல தினம் ஒக்ரோபர்-10

**Dr.சி.யமுனாநந்தா**

## காலி, ஹேகல்லையில் விபத்து மூவர் பலி; 11 பேர் படுகாயம்

கொழும்பு, ஒக். 10

காலி, கொஸ்கொட, ஹேகல்லை பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 11 பேர் காயமடைந்தனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிமல் மெதிவக்க தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து தெனியாய நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சொகுசு பஸ்ஸும், இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் ஒன்றுடன் ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், விபத்தில் காயமடைந்த 11 பேரும் பலபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சொகுசு பஸ்ஸில் பயணித்த மூவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## இலங்கைக்கு நிதி வழங்குவதில்லை என்ற பிரிட்டனின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது

### 'ரைம்ஸ்' இணையத்தளம் செய்தி

கொழும்பு, ஒக். 10

இலங்கையில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களுக்கு இனிமேலும் நிதி உதவி வழங்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளதன் மூலம் இலங்கை விவகாரத்தில் தனக்கு முதுகெலும்பு உள்ளதை பிரிட்டன் புலப்படுத்தியுள்ளதாக அந்த நாட்டின் 'ரைம்ஸ்' இணையத்தளம் தெரிவித்துள்ளது.

பருவப்பெயர்ச்சி மழைக்காலத்தில் அகதி முகாம்களில் ஏற்படப்போகும் மனிதாபிமான நெருக்கடி குறித்து அச்சம் கொண்டுள்ள மேற்குலகம் அது குறித்து தன் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதை தவிர்ப்பதற்காகவே இந்தப் புதிய நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகவும் 'ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழமையான சேவைகளை வழங்குவதற்குத் தேவையான நிதியுதவியை வழங்கப் போவதில்லை என பிரிட்டன் இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளது.

ஏனைய மேற்குலக நாடுகளும் இதேபோன்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளதாக பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மைக் பொஸ்டர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பருவப்பெயர்ச்சி மழைக்காலத்திற்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்களை விடுவிப்பதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு கொடுப்பதற்காகவே இவ்வாறான நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

இலங்கை இதுகுறித்து சீற்றமடையலாம். இடம்பெயர்ந்தவர்களை விடுவிக்குமாறு பொஸ்டர் விடுத்த வேண்டுகோளை அது ஏற்காமல் போகலாம்.

எனினும், ஏனைய நிதி வழங்கும் நாடுகளுடன் இணைந்து இவ்வாறான நிலைப்பாட்டை எடுத்ததன் மூலம் இவ்வருட இறுதிக்குள் 80 வீதமானவர்களை மீளக்குடியேற்றாவிட்டால், மோசமான விளைவுகள் ஏற்படலாம் என்பதை பிரிட்டன் தெளிவுபடுத்தியுள்ளது.

வெளிநாடுகள் இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரை19.5 கோடி டொலர்களை வழங்கியுள்ளன. அந்த நிதியில் பெரும் பங்கு முகாம்களிலுள்ள அகதிகளுக்காகவே கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இன்னமும் 22.5 கோடி டொலர் நிதி தேவைப்படுகின்றது. இலங்கையால் அதனை தனியாகப். பூர்த்தி செய்யமுடியாது.

யுத்தத்தின் இறுதிக் காலங்களிலும் அதற்குப் பின்னரும் இலங்கை செயற்பட்ட விதத்தை தீர்மானிப்பதற்காக வலுவான ஆயுதமாக மேற்குலகம் இதனை பயன்படுத்தியிருக்கலாம்.

எனினும், இந்த வழிவகையை ஏன் இவ்வளவு கால மும் பயன்படுத்தவில்லை. இலங்கை பெப்ரவரி மாதத்தில் முகாம்களை அமைக்கப்போவதாக அறிவித்த தருணத்திலிருந்து இது சட்டவிரோதமானது; சர்ச்சைக்குரியது என்பது புலனாகியுள்ளது. (சி)

## இளைஞர், யுவதிகளுக்கு கணனி, மரவேலைப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 10

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினரும் கைதடி - நுணாவில் அறவழி நிலையத்தினரும் இணைந்து பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான கணனி மென் பொருள், கணனி வன் பொருள், மரவேலை ஆகிய பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்க வுள்ளனர்.

மரவேலைப் பயிற்சிநெறியில் கலந்து கொள்ளும் பயிலுநர்களுக்கு மாதாந்தம் விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இப்பயிற்சி நெறிகளுக்குப் பதிவு செய்யாத இளைஞர், யுவதிகள் உடனடியாக அறவழி செயலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(203-207)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 10

மானிப்பாய் மெமோறியல் பாடசாலையின் முறைசாராக் கல்விப் பிரிவினரின் சேலை அலங்காரக் கண்காட்சியும் விற்பனையும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 1.30 மணிக்கு மேற்படி பாடசாலையில் நடைபெறும்.

திருமதி வேணுகா சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம திருந்தினராக முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி சிவசக்தி சதாசிவமும் சிறப்பு விருந்தினராக முறைசாராக் கல்விப் பிரிவின் திட்டப் பணிப்பாளர் என்.சண்முகராஜாவும் கலந்து கொள்வர். (203-201)


**விற்பனைக்கு**

எம்மிடம் வீடியோக் கமரா SONY Optical [illegible] Digital Zoom விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: [illegible]சாலை,

234,கே.கே.எஸ்.வீதி,யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலைப்பீடம்

### புதிய கல்வியாண்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம் 2008/2009

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கலைப்பீடத்திற்கு கல்வியாண்டு 2008/2009 இல் ''கலை, சட்டம், இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்'' ஆகிய கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2008/2009 இற்கான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் பின்வரும் ஒழுங்குகளில் நடைபெறும்.

| குழு | காலம் | இடம் |
|---|---|---|
| குழு(A) (கலை) | 19.10.2009 காலை 9 மணி | புதிய கலைப்பீடக் கட்டடம், (யாழ். பல்கலைக்கழக பிரதான வளாகம்) |
| குழு(B) (கலை) | 20.10.2009 காலை 9 மணி | புதிய கலைப்பீடக் கட்டடம், (யாழ். பல்கலைக்கழக பிரதான வளாகம்) |
| குழு(C) (கலை,சட்டம்) | 21.10.2009 காலை 9 மணி | புதிய கலைப்பீடக் கட்டடம், (யாழ். பல்கலைக்கழக பிரதான வளாகம்) |
| குழு (D) (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) | 22.10.2009 காலை 9 மணி | இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார் மடம் |

*மாணவர்கள் தமது குழுக்களின் விவரங்களையும் நிகழ்ச்சி நிரலையும் கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையிலோ, www.jfn.ac.lk/arts எனும் இணையத்தளத்திலோ பார்வையிடலாம்.*

*மாணவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் காலை 8.30 மணிக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
08.10.2009 (சி/561613)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**சின்னக்கிளி இராசம்மா**

தோற்றம்: 10.04.1927

மறைவு: 11.09.2009

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு வருகைதந்து துயரிலும் இறுதிக்கிரியை நிகழ்விலும் கலந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் ஏனைய வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.அத்துடன் நாளை (11.10.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: பிள்ளைகள்-
சின்னக்கிளி சௌந்தரராஜன் (சிவலிங்கம்)
தொ.பே: 0213735576
சின்னக்கிளி குணம் (திரு) மொன்றியல் - கனடா
514-3411486

'கீர்த்திகா தாரகை',
மணல் தெரு,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(89708)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கண் மகிழ 12 ★ 02 ★ 1956



நெஞ்சம் நெகிழ 10 ★ 09 ★ 2009

**அமரர் பாலசுப்பிரமணியம் குகநேசன்** (கோணேஸ், துரை)

கடந்த 10.09.2009 அன்று அமரத்துவம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணக் கிரியைகளின்போது கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறியும் எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (10.10.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். எமது நினைவிற்கப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறியிருப்பின் பெருந்தன்மையுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (89723)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**English Language II from 08.10.2009 .......**

Test - 10

Here is a conversation between two pedestrians. READ the questions and match them with the answers. WRITE the number of the question in the correct box. The first one is done for you.

1. What are those people looking at? What has happened?
2. A robbery? What happened exactly?
3. When did it happen?
4. Has she given money to robber?
5. Has anyone informed the police?
6. Have they taken the cashier to hospital?

- Yes, the police have arrived. They are questioning the eye witnesses.
- About fifteen minutes age. The cashier got frightened and faintned.
- There has been a robbery in the bank.
- No, not yet. They have called an ambulance and are waiting for it.
- A bank robber has got into the bank and asked for Rs. 100,000/= from the cashier.
- Yes, she has given only Rs.10,000/= in a bag and the robber has run away with it.

Test - 11

READ the following paragraph and from (A - E) there is an extra word. UNDERLINE the word.

One has been done for you.

Ravi is a university student. He casually goes to the campus on his bike.

Eg: He studies hard with on his fellow students.

a) He reads a the lot of books.
b) He often goes to the library hostel to borrow books.
c) At home, he reads looks them.
d) He does not like to waste his time money idling.
e) Because but he has much work to do.

Test - 12

Your class students and teachers have decided to go for trip. You are staying in your school hostel. WRITE a letter to your father asking for permission and money.

Include the following.

- When and where you are going.
- Who are participating.
- Short description of the trip.

OR

A load of garbage has not been removed for a long time from your street. You are going to WRITE a letter of complain to the Chairman of Urban Council, Trincomalee.

Include the following.

- How long it has not been removed?
- What are the difficulties people undergoing.
- What setps you have taken so far.

Use about 150 words.

Test - 13

READ the paragraph given below and fill in the missing words. Use the words given.

**with, off, up, on, out, to, behind, by, through, in**

When I was going 1.................... this morning the sun was shining 2 .................... the sky. It was a beautiful morning. I walked 3 ................... the nearest park 4 ................... the river and sat down 5 ................... the grass. But while I was sitting there black clouds gathered and the sun hid 6 .................. the clouds. It began 7 ................... rain heavily. I wore the hat which I had taken 8 ................... me and ran home. My hat fell 9 ...................as I ran. But I did not stop to pick it 10 .................... because it was raining heavily.

Test - 14

READ the text and answer the questions given below.

I was boarded in the hostel during my school days. THe great midnight parties we used to have are one of my happiest memories of hostel life. Our hostel warden, Mr.Perera, was a strict disciplinarian and these parties had to be organized very carefully and skillfully. So each party was something of an adventure for us.

I remember one occasion particu-larly well. The new term had begun and, of course, a party was arranged.There was great excitement during the day and our teachers and our teachers must have won-dered what it was all about. There were no complaints over tea and boys accepted what was served.

Later that evening, punctual as ever, Mr.Perera turned off lights at nine o'clock. We could be punished for talking after 'lights out', but it was difficult for us to keep quiet. At about ten o'clock, Hasitha and Saman overcame thier fears of Mr.Perera.They crept over to the window and drew out the curtains slightly to see if Mr. Perera's light had been turned off. It was still on and we waited eagerly for ages, We felt sorry to have given our hostel warden so much marking to do.

When his lights went out at last, we all jumped out of bed. Hasitha produceda wax-candle which he set in the middle of the floor. In no time the place was covered with cakes, biscuits, fruit, nuts and gallons of soft drinks.

It must have been about one o'clock when some of us were falling asleep on the floor and only a few hardy ones were still eating that Sisira dropped his mother's cake tin. There was a loud crash and, gathering up the remains of the party which we slipped under the bed- clothes, we retired to bed at once. It was a good thing we acted so rapidly, for a few minutes later the door opened and Mr. Perera appeared- only to find twenty little boys sleeping gently!

1) Why was it necessary to organize these parties very carefully and skillfully?
2) Underline the correct answer.
   The party was arranged ...............................
   a. in the middle of the term.
   b. at the beginning of the term. c. at the end of the term.
3) What were the boys not allowed to do after'lights out'?
4) Who watched weather Mr. Perera's light had been turned off?
5) What does 'It in paragaraph 3 refer to?
6) Write te sentence, which saya the hostal warden correct boys' homework.
7) Where did they hide the remains of the party?
8) How many boys were there in the hostel?
9) Find similar words from the text to match the following words.
   a. on time ...............................................................
   b. fast ...............................................................

Test - 15

WRITE on one of the following. Use about 250 words.

a) You have been invited to make a speech on "The importance of respecting others at the assembly.
   Include the following : who we should respect
   : why we should respect
   : how we should respect
   : how it helps to change the society.
b) WRITE an article to a magazine on what you did on "National Environmental Week"
   Include the following : how you organized your work
   : who helped in your work
   : what special events you had
   : the experience you gained
c) WRITE a report to be given to the principal of your school on the English Camp held recently.
   Include the following : the venue
   : the time
   : the participants
   : the programme
d) COMPLETE the following story
   We were watching the television, Suddenly lights went out and my mother screamed ....................................................................

## வரலாறின் தொடர்ச்சி.....

27. யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான பிழையான கூற்று எது?
   1) யாழ்ப்பாண இராட்சியத்தின் தலைநகராக நல்லூர் விளங்கியமை.
   2) சங்கிலி என்ற பெருடைய ஆட்சியாளன் போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையைக் கடுமையாகப் பின்பற்றியமை.
   3) யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியடைந்தமைக்கு அங்கு நிலவிய உள்நாட்டு அரசியல் முரண்பாடுகளே காரணமாகும்.
   4) போர்த்துக்கேயர் ஆட்சியின் கீழ் வரும் வரை யாழ்ப்பாண இராச்சியம் விஜய நகரப் பேரரசின் ஒரு பிரிவாக விளங்கியது.

28. பின்வரும் நிகழ்வுகளை வரலாற்று ஒழுங்கு வரிசைப்படி தருகின்ற சரியான விடை எது?
   A - மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டமான பிரான்சியப் புரட்சி.
   B - போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதரல்.
   C - முதலாம் உலக மகா யுத்தம்.
   D - துருக்கியர் கொன்ஸ்தாந்திநேபிள் நகரை கைப்பற்றியமை.
   E - கலிலியோ கலிலி தொலைக்காட்டியைக் கண்டுபிடித்தமை.
   1) ABCDE 2) DBEAC 3) ADCEB 4) DBAEC

29. தர்ம அசோக மன்னன் "ஸ்வர்ண பூமி" தேசத்திற்கு தர்ம தூதுக்குழுவை அனுப்பிய தாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இந்த நாடு தற்போது எப்பெயரால் அழைக்கப் படுகின்றது?
   1) சீனா. 2) சியாம். 3) கம்போடியா. 4) பர்மா.

30. மொகாலயரான பாபர் முதன்முதலாக இந்தியாவை எந்த ஆண்டில் ஆக்கிரமித்த தாக கருதப்படுகின்றது?
   1) கி.பி 1504 2) கி.பி 1206 3) கி.பி 1526 4) கி.பி 1325

31. மறுமலர்ச்சி காலத்தில் சித்திரக்கலைஞர்கள் தொடர்பாக பிரபலமாகக் காணப் பட்ட நகரம்?
   1) மிலானோ. 2) ரோம். 3) ஜெனிவா. 4) புளோரண்ஸ்.

32. முதலாம் நிரலில் காணப்படும் நிகழ்வுகளோடு தொடர்பான நபர்கள்/ இடங்கள் சில நிரல் இரண்டில் தரப்பட்டுள்ளன. இவற்றை 123 உடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் விடையாவது,

| நிரல் 01 | நிரல் 02 |
|---|---|
| 1 - 1594 தந்துறை போர் | A - றொபவுட் பிரவுன்ரிக் |
| 2 - 1638 உடன்படிக்கை | B - இரண்டாம் இராஜசிங்கன் |
| 3 - ஜூரி சபை முறை அறிமுகம் | C - முதலாம் இராஜசிங்கன் |
| | D - லோபேஸ் டீ சூசா |
| | E - கொன்ஸடன்டைன் தசா |
| | F - தோமஸ் மேல்டன் |

   1) DBF 2) ABF 3) ACF 4) BDA

33. ஹிட்லரின் ஜேர்மனியப் படைகளால் போலந்து டென்சிங் துறைமுகம் தாக்கப் பட்டமை பின்வரும் எந்த யுத்தம் தோன்ற ஒரு காரணமாகக் கொள்ளலாம்.
   1) முதலாம் உலக யுத்தம். 2) சிலுவைப்போர்.
   3) 2ஆம் உலக யுத்தம். 4) பானிபட் யுத்தம்.

34. சத்தர்ம ரத்னாவிலிய, பூஜா வலிய, கவி சிலுமின ஆகிய சிறந்த இலக்கிய நூல்கள் எக்காலத்தில் எழுதப்பட்டன?
   1) பொலநறுவை. 2) தம்பதெனிய. 3) அநுராதபுரம். 4) கோட்டை.

35. மகாசேன மன்னனது ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சைத்தியம் எது?
   1) அபயகிரி. 2) மிரிசவட்டி. 3) ஜேதவனாராம 4) தூபாராம.

36. வசப மன்னன் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சிங்களவர் வசித்ததற்கு சான்று பகரும் வரலாற்று ஆவணங்கள் யாது?
   1) பனாகடுவ ஏடு. 2) அடகமுவ கல்வெட்டு.
   3) வல்லிபுரம் செப்பேடு. 4) வெஸ்சகிரி கல்வெட்டு.

37. அபயகிரி விகாரையைக் கட்டுவித்து அதனை மகாயான பௌத்தத்தின் மத்திய நிலையமாக்கிய மன்னன் யார்?
   1) தாதுசேனன். 2) வலகம்பா. 3) துட்டகைமுனு. 4) காசியப்பன்.

38. இலங்கையை ஆட்சி புரிந்த கடைசி சிங்கள மன்னனாகக் கருதப்படுபவர்,
   1) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன். 2) 5ஆம் மகிந்தன்.
   3) ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன். 4) ஸ்ரீ விஜய இராஜசிங்கன்.

39. நிரல் 01 இல் அநுராதபுர மன்னர்களும் நிரல் 02 இல் அக்காலத்தில் இந்நாட்டை ஆக்கிரமித்தவர்களும் தரப்பட்டுள்ளனர். A,B,C,D இற்கு சரியான விடைகளின் தொகுப்பு,

| நிரல் 01 | நிரல் 02 |
|---|---|
| A - அசேலன் | E - புபுக நாதன் |
| B - வலகம்பா | F - 1ஆம் இராஜ ராஜன் |
| C - தாதுசேனன் | G - எல்லாளன் |
| D - 5ஆம் மகிந்தன் | H - பண்டு/ பாரிந்தன் |

   1) GEFH 2) EFGH 3) FHGE 4) GEHF

40. "நீங்கள் பெறும் வரப்பிரசாதங்கள் ஏனையவர்களும் அனுபவிக்க இடங்கொடுங்கள். சகலருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு" பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட இக் கூற்று யாரால் வெளியிடப்பட்டது?
   1) வோல்டெயார். 2) ரூசோ.
   3) ஸ்டுவர்ட் மில். 4) மொன்டெஸ்க்யு.

வளரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி செயற்பாடுகள் குறித்து ஆணையாளர் செயலாளர்களுடன் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக். 10

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். ஜோன்சன் யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடு தொடர்பாக உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம் வருகை தந்த இவர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபைகளின் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள் எனப்பல்வேறு துறைசார் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-9)

# உதைபந்தாட்டம்

வடமராட்சி, ஒக். 10

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டம் இன்று சனிக்கிழமை தொடக்கம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை வரை அல்வாய் மனோகரா மைதானத்தில் நடைபெற வுள்ளது.

10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும், 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு டயமன்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (1-236)

# பண்டத்தரிப்பில் திருக்காட்சித் திருவிழா

பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னையின் யாத்திரைத்தல திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெறும் இத்திருவிழாவில் 12ஆம் திகதி திங்கட்கிழமை வரை வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும். 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு அருட்பணி. எஸ்.மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதுடன் மாலை 4 மணிக்கு நன்றித் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். (10)

# உழைப்பாளிகளை இழந்த பெண்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக். 10

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்த அனர்த்தங்களின் போது குடும்ப உழைப்பாளியை இழந்த குடும்பங்களினது மாணவர்கள், அங்கவீனமான மாணவர்கள், மனவளர்ச்சி குன்றிய மாணவர்கள் ஆகியோரின் தாய்மார்களுக்கான விசேட செயலமர்வு இன்று சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு அறவழி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாணவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகத் தாய்மார்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் இந்தச் செயல்திட்டத்துக்கு கனடா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் வதியும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் நிதியுதவி வழங்கவுள்ளதாகவும் அறவழி நிலைய செயலாளர் எம். கே.ஜீவகதாஸ் அறிவித்துள்ளார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி டெய்ஸ்பா பெனடிற்

மண்ணில் சிறக்க 16.07.1943

விண்ணில் சிறக்க 09.09.2009

அன்பான உங்களது அன்பு மொழி-எம்
அகம் தன்னில் என்றென்றும் ஒலிக்குதம்மா
வேராக நீரிருந்த எம் குடும்பம்-இன்று
தீராத வேதனையால் துடிக்குதம்மா
மாறாத சோகமது எமைவாட்ட
ஆறாகக் கண்ணீர் பெருகுதம்மா
எம் உயர்வுக்காய் அரும்பாடுபட்ட
எம் குல தெய்வமே உமை மறப்போமா?
மண்ணுலகில் மாட்சியுடன் நாம் மிளிர-எமை
கண்ணெனப் போற்றி நின்ற தெய்வமே!
மருவும் ஒரு பிறப்பு உண்டாயின்-எம்
மனையிற் பிறந்து மனவருத்தம் தீருங்கள்
மலர்களாய்த் தூவி எம் மனக்கண்ணீரை எல்லாம்
கொட்டி இறைவனிடம் வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்கான நன்றித் திருப்பலி இன்று (10.10.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெறும்.

தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்"

கிங்சிலி பெனடிக் (கணவர்)
துசித்தா, துஷான், துஜீவ் (பிள்ளைகள்)
அ.அ.யோகராசா (சகோதரர்).

புஸ்பமகால்,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி. (89711)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

*Manufactured By:*
**Sithara Products**
*Puttalam, Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா,
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 ★ 09 ★ 1925



மறைவு 10 ★ 09 ★ 2009

### அமரர் சின்னத்தம்பி சதாசிவம்

(உபதபால் அதிபர், மல்லாகம்)

அன்பான உங்களது அன்புமொழி - எம்
அகம் தன்னில் என்றென்றும் ஒலிக்குதப்பா...
வேராக நீரிருந்த எம் குடும்பம் - இன்று
தீராத வேதனையால் துடிக்குதப்பா...
மாறாத சோகமது எம்மை வாட்ட
ஆறாகக் கண்ணீர் பெருகுதப்பா...
எங்கள் உயர்விற்காய் அரும்பாடுபட்ட
எமது குல தெய்வமே!
உங்களை மறவோம் அப்பா...

எங்கள் இதய தீபம் அமரர் சின்னத்தம்பி சதாசிவம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்ட வுடன் எமது இல்லத்திற்கு விரைந்து வந்து எமது துயரில் பங்கேற்று எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் பலபுரிந்த அன்பு உள்ளங் களுக்கும், அவரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலை பேசி, தந்தி மூலம் ஆறுதல் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

இன்று (10.10.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள 31ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியைகளிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன உபசாரத்திலும் தாங்களும் பங்கேற்று, எமக்கு மனச்சாந்தி அளிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: மனைவி - ச.பரமேஸ்வரி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
க.செல்வகுமார் (கணக்காளர்,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

மில் லேன்,
மல்லாகம். (89638)


**யாழ் நகரில் நம்பமுடியாத கட்டணக்கழிவில்**
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
**வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்**

**Post Graduate Diploma In Management (Pre.MBA)**
காலம் 9 மாதங்கள் (MBA final year in UK / London)
To Whom :பட்டதாரிகள், வர்த்தக வியாபார பட்டதாரி அல்லாதவர்கள், உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA முடித்தவர்கள்)

**Diploma In Hospitality Management (Hotel Management)**
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்களுக்கு அடுத்த இரண்டு வருட பட்டப்படிப்பு வண்டனில்
காலம் 6 மாதங்கள்

எமது நிறுவனத்தின் அனைத்துக் கற்கைநெறிகளுக்கும் சர்வதேச தரம் கொண்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**HND in Business Management - Edexcel**
**HND in Computing - Edexcel**
**HND in Quantity Surveying - Edexcel**
காலம் 16 மாதங்கள்
(Bsc final year in UK / London)
Admission Requirements : 2 passes in G.C.E. (A/L) in any subject and 6 passes inclusive of two credit passes for English and Mathematics in G.C.E (O/L) examination or Success full completion of BCHS Access programming.

அனைத்துப் பாடநெறிகளுக்குமான புதியபிரிவுகள் ஆரம்பிக்கப்படுகின்றன

| Batch 4 | Batch 5 | Batch 6 |
|---|---|---|
| 07.10.2009 | 10.10.2009 | 18.10.2009 |

**Access Programming** (Foundation Degree Programme)
காலம் 6 மாதங்கள்
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L வில் நல்ல பெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma போன்ற கற்கை நெறிகளைக் கற்று, பட்டதாரி ஆகுவதற்கான முன்னோடிப் பாடநெறி

**Diploma in English**
**Advanced Diploma in English**
காலம் 6 மாதங்கள்
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை இலகுவாக தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் தயாரிக்கப்பட்டுள்ளது.

எமது நிறுவனத்தில் கல்வி கற்று வெளியேறும் மாணவர்களுக்கு **100 % Student Visa** பெற்றுக் கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த எமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் வழங்கப்படும்

**BCHS**
No.15, Sirambiyadi Lane,
Off Stanley Road, Jaffna.
HotLines: 0773501499 / 0777222422 /0714299935
021 2224550
E-mail: info@bchs.lk



எமது நிறுவனம் 04.10.2009 முதல் புது பொலிவுடன் புதிய முகவரியில் இயங்கி வருகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகிறோம்

**SATS-TECH ENGINEERS (PVT) LTD.**
( A. SLTRC APPROVED COMPANY )
Import and Sales, Service For Satellite Receiving Systems
&
Cable TV Equipments




No: 218 A/2, Wolfendhal Street ,
Colombo-13
Phone:- 011 4362929 / 011 2424797

Branch
No: 300 K.K.S Road, Jaffna,
Phone:- 021 2224559 / 021 2228812


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சர்வதேச முதியோர், மாற்று ஆற்றல் உடையோர் தினநிகழ்வு தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், டெனிஸ் அகதிகள் சபை யாழ்.மாவட்ட தலைமை அலுவலர் யோ.ஆன்கிங்சிலி, தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் எஸ்.பீ.பாலகரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினம் முதியவருக்கு நுளம்புவலை, உடுபுடவைப் பொதி ஆகியவற்றைக் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: தென்னவன்)

# புத்தகசாலை

## புல்லாங்குழல்



வேணுகான வித்தகர் வே.க.சண்முகராசாவினால் எழுதப்பட்ட 'புல்லாங்குழல்' நூல் வெளிவந்துள்ளது.

'புல்லாங்குழல்' என்பது இசைவாத்தியங்களில் மிகவும் மென்மையான இசைதரவல்லது. அத்தகைய மென்மையான இசைக்கருவியின் சிறப்புக்களைத் தருகின்ற நூலாக 'புல்லாங்குழல்' வெளியிடப்பட்டுள்ளது.

புல்லாங்குழலின் சிறப்புக்களைச் சொல்வதோடு மட்டுமல்லாது கர்நாடக சங்கீதம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்பெறக் கூடிய வகையில் இந்நூல் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

## விமலம்




ஜி.சீ.ஈ.உயர்தர மாணவர்களுக்கான சிறப்புக் கட்டுரைத் தொகுப்புக்களைத் தாங்கியவாறு 'விமலம்' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

நெல்லியடி மற்ஸ்சென்ரர் நிர்வாகி அமரர் சிற்றம்பலம் விமலராஜா நினைவாக 'விமலம்' விரிந்துள்ளது. விமலராஜாவின் நினைவுப் பகிர்வுகளுடன் உயர்தர மாணவர்கள் பயன்பெறக் கூடியதான கட்டுரைகளும் இதில் பொதிக்கப்பட்டுள்ளன.

ஒரு பிரதேச மாணவ சமுதாயத்திற்கு நீண்டதொரு கல்விப்பணிபுரிந்து அமரராகி விட்ட ஆசிரியர் ஒருவரின் நாமம் நாளும் மாணவர்கள் மத்தியில் ஒலித்திட வேண்டுமென்பதற்காக இம்மலரை வெளியிட்டுள்ள மலர் அமைப்புக் குழுவினர் பாராட்டுக்குரியவர்கள்.

# மாணவர் குறைந்த பாடசாலைகளுக்கும் வடக்கின் வசந்தம் வீசச் செய்வீர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாணவர் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகள் தொடர்பாக எழுதவிரும்புகின்றேன். குறிப்பாக மாணவரின் எண்ணிக்கை 10- 50 வரை உள்ள பாடசாலைகளில் மிகவும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பிள்ளைகள் கல்வி கற்பதோடு மீத்திறன் குறைந்த மெல்லக் கற்கும் மாணவர்களாகவே இம்மாணவர்கள் உள்ளனர். பெரும்பாலும் இப்பாடசாலைகள் ஆரம்பக் கல்விப் பாடசாலைகளாக உள்ளன. எண்ணிக்கை கூடிய [சுமார் 100- 500 வரை] பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகள் இப்பாடசாலைகளுக்கும் சமமாக ஒதுக்கப்படுகின்றது. குறிப்பாக குணநல உள்ளீட்டு நிதி, ESDP நிதி என்பனவற்றைக் குறிப்பிடலாம். இருந்தபோதிலும் இந்நிதியின் பயன்கள் இப்பாடசாலைப் பிள்ளைகளுக்கு 100வீதம் பயன்படுகிறதா எனின் அது கேள்விக்குறியே.

பிள்ளைகளின் தொகைக்கு ஏற்ப ஆசிரியரின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதனால் ஏனைய பிள்ளைகள் பெறும் பயனை இப்பிள்ளைகள் பெறாதுள்ளனர். உதாரணமாக ஆரம்பக்கல்வி பயிற்றப்பட்ட ஆசிரியர், ஆங்கில ஆசிரியர், சித்திர ஆசிரியர், சங்கீத ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் என விசேட விதமாகப் பயிற்றப்பட்ட ஆசிரியரின் சேவை இப்பிள்ளைகளுக்குக் கிடைக்காது உள்ளது. பெரும்பாலும் பிள்ளைகள் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகளில் பரிசளிப்பு விழா, விளையாட்டுப்போட்டி மற்றும் கல்லூரி சார்ந்த நிகழ்வுகள் நடைபெறுவது இல்லை. இதனால் பிள்ளைகளின் திறன்கள் மழுங்கடிக்கப்படுகின்றன.




குடும்பமட்ட, கோட்டமட்ட, வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்ற சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றன. உடற்பயிற்சிப்போட்டி, மெய்வல்லுனர் போட்டிக்குழு, விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றப் போதியளவு எண்ணிக்கையான மாணவர் இல்லாமை, திறமையான மாணவர் இல்லாமை போன்ற காரணங்களினால் இப்பாடசாலைகள் போட்டிகளில் பங்குபற்றமுடியாது உள்ளது. ஏனைய பாடசாலைப்பிள்ளைகள் அனுபவிக்கும்வசதிகளை இம் மாணவர்கள் பெறாது உள்ளனர். நூலகவசதி கணனிக்கல்வி, விளையாட்டு மைதானம் போன்றவற்றை உதாரணத்திற்குக் கூறலாம்.

அத்துடன் திறமையான மாணவர்களோடு கற்கும், பழகும் சந்தர்ப்பம் இழக்கப்படுகின்றது. இத்தகைய பாடசாலைகளில் கற்றுப்பின் பெரிய பாடசாலைகளில் கற்கச் செல்லும்போது பல்வேறு விதமாக உளத்தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். இத்தகைய சிறிய பிள்ளைகள் எண்ணிக்கை கொண்ட பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் அற்றவையாக உள்ளன. குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி மலசல கூடவசதி என்பன அற்றவையாகவும் சிறுவர்கள் விளையாடி மகிழவிளையாட்டு உபகரணங்கள் அற்ற பாடசாலைகளாகவும் உள்ளன.

எனவே இத்தகைய பலவிதமான குறைபாடுகளைக் கொண்ட பாடசாலைகளை இனங்கண்டு இப்பாடசாலைகளை அருகில் உள்ள பெரிய பாடசாலைகளோடு இணைத்து இத்தகைய வறுமைக் கோட்டிற்குட்பட்ட பிள்ளைகளும் ஏனைய வசதியான பிள்ளைகளுடன் சம பலத்துடன் வளர வடமாகாண கல்விப்பணிப்பாளரும் ஏனைய கல்வி அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இத்தகைய பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் உபகார நிதிகள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், தர உள்ளீட்டு நிதிகள், ESDP நிதி, பாடசாலைக் கட்டடம், தளபாட வசதிகளுக்கு ஒதுக்கும் நிதிகள், பாடசாலை பௌதீக வளத்தைப் பெருக்க ஒதுக்கும் நிதிகள், கட்டட வசதிக்கு ஒதுக்கும் நிதிகள், சுற்றாடல் பராமரிப்பு ஏனைய ஒதுக்கு நிதிகள் எனப் பல லட்சம் ரூபா அரச பணம் வீணடிக்கப்படாமல் இப்பணம் ஆக்கபூர்வமாகப் பயன்படவேண்டும். நிதி மோசடிகள் இடம்பெற அனுமதிக்கக்கூடாது. அரச வளங்கள் வீணடிக்கப்படக்கூடாது. எனவே, இத்தகைய சிறிய எண்ணிக்கை மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளைப் பெரிய பாடசாலைகளோடு இணைத்து அரச வளங்கள் பூரணமாகப் பயன்பட உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கல்விச் சமூகத் தின் சார்பாக தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வடபகுதியில் சுற்றுப் பயணம் செய்யும் வடமாகாண கல்விப்பணிப்பாளர், வட மாகாணக் கல்விச் செயலாளர் மற்றும் கல்வி உயர் அதிகாரிகள் இதில் கவனம் எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

சி.முருகமூர்த்தி, யாழ்ப்பாணம்.

# 'சுடர் ஒளி'க்கு பயங்கரவாத முத்திரை; அதாவுல்லாவுக்கு ஹக்கீம் கண்டனம்!

கொழும்பு, ஒக்.10

'சுடர் ஒளி' ஒரு பயங்கரவாதப் பத்திரிகை என்று அமைச்சர் அதாவுல்லா கூறியமைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

உண்மைகளையும், அமைச்சர்களின் காட்டுமிராண்டித் தனத்தையும் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் பத்திரிகை ஒன்றைப் பயங்கரவாதப் பத்திரிகையாக வர்ணிக்கும் அளவுக்கு இங்கு ஊடக அடக்குமுறை தலைதூக்கியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தடி எடுத்தவர்களெல்லாம் இன்று குண்டர்களாகிவிட்டனர். சில அமைச்சர்கள் காட்டுமிராண்டித்தன நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதைப் பத்திரிகைகள் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தியமையால் அப்பத்திரிகைகளைப் பயங்கரவாதப் பத்திரிகைகள் என்று அமைச்சர்கள் கூறுகின்றனர்.

அண்மையில் அக்கரைப்பற்றில் கிழக்கு மாகாண உலமா சபைத் தலைவர் ஹனீபா ஆயுததாரிகளால் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

அவர் கடத்தப்பட்டு நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைச்சின் அக்கரைப்பற்றுக் காரியாலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றும் அங்கு அமைச்சர் அதாவுல்லா அவரை விசாரணை நடத்தினார் என்றும் ஹனீபா கூறியுள்ளார்.

இந்த விடயத்தை 'சுடர் ஒளி' பத்திரிகை பிரசுரித்திருந்தது. அவ்வாறு செய்தமைக்காக அதாவுல்லா அப்பத்திரிகையை ஒரு பயங்கரவாத பத்திரிகை என்று கூறினார்.

அடாவடித்தனத்தில் யார் ஈடுபட்டாலும் அதை மக்களுக்குத் தெரிவிப்பது ஊடகத்தின் கடமை. அந்த வகையில்தான் அமைச்சரின் அடாவடித்தனமும் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால், பயங்கரவாதப் பத்திரிகை என்று அமைச்சர் கூறுகின்றார். அந்தளவுக்கு இந்நாட்டில் ஊடக அடக்குமுறை தலைதூக்கியுள்ளது. - என்றார். (சி)

# இளைஞருக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்தவர்



சைவமும் தழிழும் தழைத்தோங்கும் கிராமங்களில் முதன்மை வகிப்பதில் ஒன்று அளவெட்டி என்னும் அருந்தழிழ் கிராமம். கற்றவர் பலரும் கவிநிறை இசைக்கலைஞர் பலரும் செந்தமிழ் ஆய்ந்த பண்டிதர் பலரும்சிறப்புற வாழ்ந்தது இக்கிராமம் இங்கு ஒழுக்கமும் குன்றா இறைபக்தியும் கொண்ட குடும்பத்தில் அருணாசலத்திற்கும் பொன்னு அவர்களுக்கும் அருந்தவப்புதல்வராக அவதரரித்தவர் அமரர் விசுவநாதன் ஆவார்.

இளமைப்பருவம் தொட்டே ஒழுக்கமும், பண்பும், இறைபக்தியும் கொண்டு நெஞ்சினில் நிமலனை மறவாத கண்ணியம் மிக்க இளைஞனாய்,வாலிபனாய்,ஆசானாய் வாழ்வில் ஒவ்வொரு படியும் உயர்வினைக் கொண்டவராக வாழ்ந்து அருந்தமிழ் குடும்பத்தில் பிறந்த கந்தவனம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியைக் கைப்பிடித்து களங்கமில்லா வாழ்வு வாழ்ந்த கனவான் விசுவநாதன் அவர்கள்.

## நீத்தார் நயப்புரை

எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் சேராது தனிப்பட்ட தன் முயற்சியாலும் லண்டன் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி (B.A.) பட்டதாரி ஆனார். இதற்கு முன்னர் மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து அக் கலாசாலையில் ஆங்கில ஆசிரியர் தராதரப் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறினார்.

பின் தனது ஆசிரியர் பணியை சிறுப்பிட்டி கிராமத்தில் தொடர்ந்த விசுவநாதன், காலக்கிரமத்தில் தனது சொந்தக் கிராமமான அளவெட்டிக் கிராமத்தில் அப்போது கல்வி அறிவினை ஊட்டி கதிரவன் போல் திகழ்ந்த அருணோதய கல்வி முகாமையாளர் திரு அ.சுப்பையா அவர்களின் அன்பிற்குப் பாத்திரமாய் அதன் பயனாய் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் ஆசானாகும் பேற்றினைப் பெற்றார்.

இளம்வயதிலே, அளவெட்டி, கும்பிளாவனை விநாயகர்பால் ஈடில்லா பக்தி கொண்ட இவர் சைவவாலிபசங்கம் நடத்திய அனைத்து சமய போட்டிகளிலும் முன்னின்று உழைத்து அளவெட்டி அடங்கிலும் சைவம் தழைத்து ஓங்க தன் அழியா முத்திரையைப் பதித்து நின்றார். வெள்ளிக்கிழமை தோறும் இளைஞர்களைத் திரட்டி முதியவர் பின் நிறுத்தி பஜனையை ஆரம்பித்து அளவெட்டி கும்பிளாவளையில் இத்தனை ஆண்டுகள் பஜனை நின்று நிலவ வித்திட்டவர் இவரே ஆவர்.

அளவெட்டிக் கும்பிளாவளை ஆலயத்தில் பல்லாண்டுகளாக நடைபெற்றுவரும் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை, புராணபடனம் படித்தல், சமய அறிவுப்போட்டிகள் நடத்துதல் ஆகிய சமயத் தொண்டுகளை முன்னின்று நடத்திய பெருமை அவரையே சாரும். அளவெட்டி கிராம சைவப் பெரியார் அமரர் செ.மயில்வாகனம் அவர்கள் முன்னின்று நடத்திய திருப்பணிகளுக்கெல்லாம் ஊன்று கோலாக இருந்தவர் அமரர் விசுவநாதன் அவர்களே ஆவர்.

கல்லூரியில் கல்வி புகட்டும் நேரம் தவிர்ந்த மற்றைய நேரம் எல்லாம் சைவத்தைப் பேணுகின்ற, வளர்க்கின்ற பெரும்பணியைத் தனது மூச்சாகக்கொண்டு காலையும் மாலையும் கும்பிளாவளையில் தன் தொண்டினை ஆற்றிய பதவி அவருக்கே உரியது.

இவரது நேர்மை தர்மகர்த்தாக்கள் சபையை இழக்கவைத்தது. இதேபோல் கூட்டுறவாளர் என்ற பொறுப்பினை ஏற்று பணியாற்றுகின்ற பேற்றினையும் நிலைபெறச்செய்யவில்லை. இப்படி வாழ்ந்த அந்தப் பெருமனதார் தன் வாழ்க்கையில் ஒரே இலக்காகக் கொண்ட கைலாச யாத்திரையை தன் வாழ்நாளிலே நிறைவேற்றி அங்கே கைலாசத்திலே தனது இறுதிக் கிரியைகள் அனைத்தையும் செய்துவிட்டு ஊருக்குத் திரும்பினன் என்ற நிம்மதியுடன் வாழ்ந்து இவ்வுலகத்தினை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

ஆண்டொன்றுநிறைந்த வேளையில் இந்தப் பெருமகனை நினைவுகொள்வது வருங்கால சமூகத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தரவல்லது.

சைவப்புலவர் பண்டிதர்
வைத்திலிங்கம் பாலகிருஷ்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளையும், மக்களையும் அரசு எவ்வாறு வேறுபடுத்தப் போகிறது

## ஐ.நா. கேள்வி

கொழும்பு,ஒக்.10

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களையும், அப்பாவி பொது மக்களையும் அரசு எவ்வாறு வேறுபடுத்தி அறிந்து கொள்ளப் போகின்றது - என்று ஐக்கிய நாடுகள் சபை கேள்வி எழுப்பியுள்ளது.

முகாம்களில் பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படுகிறது என அரசு வெளியிட்டு வரும் கருத்துக்களில் நியாயம் இருக்கிறது என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மற்றும் அகதிகளுக்கான விசேட பிரதி நிதி வோல்டர் கெலீன் தெரிவித்துள்ளார். வவுனியா உள்ளிட்ட இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுடன் புலி உறுப்பினர்கள் ஊடுருவியிருக்கின்றனர் எனவும், அவர்களை வேறுபடுத்தி அறிந்து கொள்ளும் வரையில் பொது மக்களை மீளக் குடியேற்ற முடியாது எனவும் அரசு வலியுறுத்தி வருகின்றது.

எனினும், புலிகளையும் பொதுமக்களையும் அரசு எவ்வாறு வேறுபடுத்தி அறிந்து கொள்ளும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகளால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற அரசின் வாதத்தில் நியாயம் இருப்பதாகவே தாம் உணர்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், மக்களை மீள் குடியேற்றுவது குறித்த சரியான திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும்என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (சி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 04 ★ 05 ★ 1929



ஆண்டவன் அடியில் 21 ★ 09 ★ 2008

அமரர் சோமசுந்தரம் சரஸ்வதி

திதி: அபரபக்க ஸப்தமி

குடும்பத்தின் குலவிளக்காய் சரவணையின் ஒளி விளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அம்மா என்றழைக்க
நீங்கள் இங்கு இல்லையே
பார்போற்ற உத்தமியாய் வாழ்ந்து பண்போடு எம்மை
வளர்த்தெடுத்த எம் அன்னையே
ஈராறு மாதங்கள் சென்றாலும் மறையாது உங்கள் நினைவு
எங்கள் இதயங்களில்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சரவணை கிழக்கு,
வேலணை.

(89737)

குடும்பத்தினர்.



## இறைச்சிக் கோழி விற்பனை

புறோயிலர்,கல்பேட்ஸ்,ஊர்ச்சாவல், முட்டை என்பன நியாயமான விலையில் வேண்டிய அளவுகளில் எந்த வேளையும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக் கழிவுகள் வழங்கப்படும்.

தொடர்பு:.மல்ரி பாம் சென்ரர்,61,இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(89739)

திரு.திருமதி அன்னலிங்கம்-
சுகிர்தமலர் தம்பதியரின் செல்வப்
புதல்வனும்
மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின்
மாணவனுமாகிய **அன்னலிங்கம்
கௌசிகன்** தரம்- 5 புலமைப்
பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளைப்
பெற்றுச் சித்தி அடைந்துள்ளார். இவரைப்
பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பா, சித்தி, கஜனன்.



## வாழ்த்துகின்றோம்



(சி/561615)

வடமாகாண கல்வி பண்பாட்டு
அலுவல்கள் விளையாட்டுத்துறை
அமைச்சினால் இன்று (10.10.2009)
சனிக்கிழமை யாழ்ப்பாணம்
இந்துக்கல்லூரியில் நடத்தப்படும்
தமிழ் இலக்கிய விழாவில் மிருதங்கத்
துறையில் கௌரவ ஆளுநர் விருதுபெறும்
எமது குருநாதர் மிருதங்க வித்துவான்
கலாபூசணம்

**திரு.க.ப.சின்னராசா**

அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

-மாணவர்கள்.



## STUDY IN EUROPE

## MBBS/MD

**Lugansk State Medical University**

Ukraine (உக்கிரேன்) - East Europe

ஸ்ரீ லங்கா Medical Councillயினால் அங்கீகரிக்கப்பட்டது

With O/Ls 7 Years

With A/Ls 6 Years

இவ்வருடத்திற்கான First Batch மாணவர்கள் யாவரும் Ukraine VISA ஐ பெற்றுவிட்டனர்.

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட St.John's College Jaffna, St. Patricks College Jaffna, Holy Family Convent Jaffna, St. Michaels College Batticaloa, St.Mary's Convent Trinco, Vavuniya Vidyalam, Royal College Colombo, Hindu College Colombo, Hindu Ladies College Colombo, Ramanathan Ladies College Colombo Isipathana College Colombo ஆகிய கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தற்பொழுது Medical Degree (MBBS) கற்கின்றனர்.

**Next Batch Starting : 15th October**

**www.lugmedi.com**

Colombo Head Office
Tel : (தமிழ்) 0777-767 818
Scholars Information Center ( 2nd Floor)
No.50 Galle Raod,
Colombo 06

யாழ்ப்பாணத்தில் விபரங்களை பெற:
Mr.S.Mariaratnam 077-4528818
148, Temple Road, (Opp.UNICEF)
Jaffna. Tel : 021 - 222 3818



## யாழ்.இந்து மகளிர் கல்லூரி தரம் 6 அனுமதி-2010

2010 ஆம் ஆண்டு தரம்- 6
அனுமதிக்கான விண்ணப்பப்
படிவங்களை 13ஆம் திகதியன்று
பிற்பகல் 2 மணிக்குப் பின்னர்
கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்
கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:
30.10.2009

(89740)


## இந்தியாவின் துணைத் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அலோக் பிரசாத் நியமனம்

கொழும்பு, ஒக்.10

இந்தியா அயலகப் பணியின் உயர் அதிகாரியும், இலங்கைக்கான இந்தியத் தூதருமாகிய அலோக் பிரசாத் இந்தியாவின் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையின் நியமனங்கள் குழு எடுத்த முடிவின்படி அலோக் பிரசாத் இரண்டு ஆண்டுகள் வரையோ அல்லது அடுத்த மாற்றம் நடைபெறும் வரையோ இப்பதவியில் இருப்பார்.

1974 பிரிவு அதிகாரியான பிரசாத் கொழும்பில் பணிபுரிவதற்கு முன்னதாக சிங்கப்பூரில் இந்தியத் தூதராகவும், வாஷிங்கடனிலுள்ள இந்தியக் தூதரகத்திலும் பணியாற்றியுள்ளார். (சி)

## கோடா வைத்திருந்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 10

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருத்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 45 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நேற்று முன்தினம் விசாரணைக்குஎடுக்கப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் இருவருக்கும் தலா 45 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 20 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டனர்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 14.10.1930

மறைவு 10.09.2009

திருமதி செல்லத்தம்பி மகேஸ்வரி

கடந்த 10.09.2009 வியாழக்கிழமை அன்று சிவபதம்
எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய
நிகழ்வு இன்று [10.10.2009] சனிக்கிழமை நண்பகல்
12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் அனைவரும் வருகை தந்து எமது அன்புத்
தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து
இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

புது வீதி,
அறுகால்மடம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## 12th year Remembrance

Born 28 ★ 02 ★ 1928



Died 10 ★ 10 ★ 1997

The Rt.Rev.**Dr.David Jeyaratnam Ambalavanar**
(Second Bishop of Jaffna, Diocese of the Church of S.India)

"Only because He laid down His life, is life Possible for the sheep and this life is the life abundant"

'Mission House'
Manipay.

(89724)

Fondly remembered by his family.



## நினைவஞ்சலி

25ம் ஆண்டு

தோற்றம் 21 04 1901



மறைவு 17 09 1984

திரு. சபாபதி சுப்பையா

15ம் ஆண்டு

தோற்றம் 10 04 1910



மறைவு 18 01 1994

திருமதி சின்னம்மா சுப்பையா

ஆலமரம் போல் எம் எல்லோர்க்கும் நிழல் தந்து எமக்கு
வாழ்வளித்த எமதன்புத் தாய், தந்தையரே ஆண்டுகள் பல
சென்றாலும் எம் மனதை விட்டகலாத உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாணம், செங்குந்த இந்துக் கல்லூரியின் பவள விழா நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விருந்தினர்கள் நிகழ்விற்கு அழைத்து வரப்படுவதையும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பிரதம விருந் தினராகக் கலந்துகொண்ட சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.ஜெயரட்ணம், மூதறிஞர் 'சிற்பி' சி.சிவசரவணபவன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை மேல் வரிசையில் காணலாம். கல்லூரி அதிபர் இ.பாலகுமார், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோரை அருகில் காணலாம்.

மூதறிஞர் 'சிற்பி' சி.சிவசரவணபவன், வைத்திய கலாநிதி எஸ். ஜெயரட்ணம், நிக்கொட் நிறுவன மாவட்ட திட்டப்பணிப்பாளர் என்.ஆர்.எஸ். சிவரூபன் ஆகியோர் உரையாற்றுவதை கீழ்வரிசைப் படங்களில் காணலாம்.

*(படங்கள்: தமிழரசன், உமா)*

# வட பிலிப்பைன்ஸில் சூறாவளி அனர்த்தம்: 160 பேர் பலி; 35 ஆயிரம் பேர் இடம்பெயர்வு



மணிலா, ஒக். 10

வட பிலிப்பைன்ஸை கடும் மழையோடு தாக்கிய 'பர்மா' சூறாவளியால் பாரிய அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. வெள்ளப் பெருக்காலும் மண் சரிவுகளாலும் இது வரை 160இற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். 35 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர். பெங்கட் மாகாணத்தில் மாத்திரம் 69 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''பெங்கட் மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைநதுள்ளன. கடும் மழை நீடிக்கின்றது. வெள்ளம் உயர்வடைந்து வருகிறது. மண்சரிவுகள் ஆங்காங்கு இடம்பெற்று வரு கின்றன. இவற்றின் அனர்த்தங்களுக்கு இதுவரை 69 பேர் பலியாகியுள்ளனர்'' என பெங்குட் மாகாண ஆளுநர் நெஸ்டர் பொங்வான் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத் துக்குத் தெரிவித்தார்.

''பகுயோ நகரத்தில் 17 பேர் பலியாகியுள்ளனர். மலைப் பிராந்தியங்களைக் கொண்ட இம் மாகாணத்தில் உயிரிழப்புகள் அதிகளவில் சம்பவித்துள்ளன. பெருந்தொகையான வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. மண்சரிவுகளால் போக்கு வரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன. தொலைத் தொடர்புகளும் தடைப்பட்டுள்ளன'' என தேசிய பேரிடர் தவிர்ப்பு ஒருங்கிணைப்புப் பேரவையின் நிறைவேற்று அதிகாரி கிளின் ராபொன்ஸா தெரிவித்தார்.

''இப்பிராந்தியத்தில் கடும் மழை நீடிக்கின்றது. மீட்பு, நிவாரணப்பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடியிருப்புப் பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் கூரைகளின் மீதும், மலைகளின் மீதும் ஏறியிருக்கிறார்கள்'' என்றும் அவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்கு மேலும் விவரித்தார்.

''நீர்மட்டம் துரிதமாக உயர்வடைந்ததையொட்டி, அணைக்கட்டு உடைப்பெடுக்கலாம் என அஞ்சி, சான் ரொகு அணைக்கட்டு திறந்து விடப்பட்டது. இதனாலும் நகரங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது'' என பங்காசினன் மாகாண ஆளுநர் அமடோ எஸ்பினோ நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

''அணைக்கட்டு திறந்துவிடப்பட்டும் நீர்மட்டம் குறையவில்லை. கடும் மழையால் பிரவாகமெடுத்துவரும் வெள்ளத்தால் அணை நிரம்பி நீர் மேவிப்பாய்கிறது. பங்கா சினன் மலைகளிலிருந்து வெள்ளம் கரைபுரண்டு வந்தவண்ணமுள்ளது'' என்றும் அவர் விவரித்தார்.

இந்தப் புயல், மழை, வெள்ளப் பெருக்கு ஆகியவற்றின் அனர்த்தங்களால் 32 நகரங்கள், 2 பெரு நகரங்கள் ஆகியவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 35 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளனர். பயம்பாங், அல்கலா, பசிஸ்டா ஆகிய பகுதிகள் பெரும் பாதிப்புக்குள்ளான பகுதிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

செப்ரெம்பர் 26 ஆம் திகதி, பிலிப்பைன்ஸை கடும் மழையோடு தாக்கிய 'கெட்ஸானா' சூறாவளிக்கு 300 பேர் வரை பலியாகியுள்ளனர். 5 லட்சம் பேர் வரை வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். இதையடுத்து, பர்மா எனும் கடும் புயல் பிலிப்பைன்ஸின் வடக்கை கடுமையாகத் தாக்கியுள்ளது.

# பாக். வட மேற்கில் மோதல்: தலிபான் தளபதி உயிரிழப்பு

பெஷாவர், ஒக்.10

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் புற மாநிலத்திலுள்ள ஸ்வாட் பகுதியில் இராணுவத்துக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்குமிடையே மூண்ட துப்பாக்கிச் சமரில் தலிபான் தளபதி நிசார் அகமது பலியானார்.

இவர் தலிபான் தலைவர் பைதுல்லா மசூத்தின் நெருங்கிய உதவியாளராக இருந்தவர். இவருக்கு காஜி பாபா என்றும் ஒரு பெயர் உண்டு. இவர் குண்டு தயாரிப்பதில் நிபுணர் ஆவார்.

இவரது வீடு ஸ்வாட் பகுதியிலுள்ள மட்டா என்ற இடத்திலுள்ளது. இந்த வீட்டை இராணுவம் முற்றுகையிட்டது. அப்போது தளபதி நிசார் அகமதுவும் அவரது சக தீவிரவாதிகளும் இராணுவம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இராணுவம் திருப்பிச் சுட்டது. அப்போது குண்டு பாய்ந்து நிசார் அகமது உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தில் 10 தீவிரவாதிகள் பிடிபட்டனர்.

இவரது மரணம் மிகப்பெரிய வெற்றி என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சீன சுரங்க விபத்தில் 26 தொழிலாளர் பலி!

பீஜிங், ஒக். 10

சீன கனிய சுரங்கமொன்றில் இடம் பெற்ற விபத்தில் சுமார் 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மத்திய சீனாவில் உள்ள சுரங்கமொன்றின் லிப்ட் இடிந்து வீழ்ந்ததில் அதில் பணியாற்றிய 26 தொழிலாளர்கள் பரிதாபமாகப் பலியாகியுள்ளனர்.

இந்த விபத்தையடுத்து, கனிய உற்பத்தி சுரங்கத்தின் உற்பத்திப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

சுரங்கத் தொழில் தொடர்பான கடுமையான சட்டவிதிகள் சீனாவில் அமுல்படுத்தப்படுகின்றன. எனினும், பணியாளர்கள் அதிகளவில் உயிரிழக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடத்தில் மட்டும் சுமார் 3 ஆயிரத்து 200 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

# இந்தியத் தூதரகத் தாக்குதலுக்கு தலிபான் இயக்கம் பொறுப்பேற்பு

காபூல், ஒக்.10

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலிலுள்ள இந்தியத் தூதரகம் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைப்படை கார்க் குண்டுத் தாக்குதலுக்கு தலிபான் பொறுப்பேற்றுள்ளது.

இதுகுறித்து தலிபான் இணைய தளத்தில் தகவல் வெளியாகியுள்ளது என 'அல் ஜசீரா' தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

தலிபான்கள் விடுத்துள்ள செய்தியில், ''இந்திய தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்திய தலிபான் தற்கொலைப்படை தீவிரவாதியின் பெயர் காலித். இந்த தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

''இந்தியத் தூதரகம் மீதான இத்தாக்குதலின் பின்னணியில் வெளிநாட்டைச் சேர்ந்த ஓர் அரசு(பாகிஸ்தான் பெயரை குறிப்பிடாமல்) உள்ளது என ஆப்கானிஸ்தான் அரசும் உளவுத் துறையும் கூறுகின்றன. ஆனால், தலிபான் இயக்கமே இத் தாக்குதலுக்கு [illegible] அதில் மேலும் [illegible]

# பெஷாவர் நகரில் நேற்று குண்டுவெடிப்பு: 41 பேர் உயிரிழப்பு; 100 பேர் படுகாயம்!



பெஷாவர், ஒக். 10

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் இடம் பெற்ற பயங்கரக் குண்டுவெடிப்பில் 41 பேர் கொல்லப்பட்டனர். 100 இற்கும் மேற்பட் டோர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு நகரான பெஷாவரில் நேற்று வெள்ளிக்கிழமை இக் குண்டு வெடித்தது. இதில் 41 பேர் கொல் லப்பட்டனர்.

இதுகுறித்து மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் சையத் ஜாகிர் அலிஷா குறிப்பிடுகையில், ''இந்தச் சம்பவத்தில் 41 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்'' என்றார்.

பெஷாவர் நகரின் பிரபலமான கைபர் பஜார் பகுதியில் இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில் ஒரு வாகனத்தில் சென்றுகொண்டிருந்த பயணிகள்தான் பெருமளவில் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் நடந்த பகுதி மிகப் பெரிய சந்தைப் பகுதி ஆகும். இந்த இடத்திற்கு அருகில்தான் பெஷாவர் உயர்நீதிமன்றம், வட மேற்கு எல்லைப்புற மாகாண சட்டசபை, அரசு அலுவலகங்கள் ஆகியவை உள்ளன.

குண்டுவெடிப்பு நடந்தபோது சட்ட சபைக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது.

இந்தச் சம்பவத்தில் ஒரு மினி பஸ் கவிழ்ந்து விழுந்தது. 3 ஓட்டோகள் வெடித்துச் சிதறிவிட்டன. 3 வாகனங்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவத்திற்கு தலிபான் தீவிரவாதிகளே காரணம் என சந்தேகிக்கப்படுகிறது.

கடந்த 2 வாரங்களில் பெஷாவரில் நடக்கும் 2 ஆவது குண்டுவெடிப்புச் சம்பவம் இதுவாகும். கடந்த செப்ரெம்பர் 26 ஆம் திகதி நடந்த குண்டுவெடிப்பில் 8 பேர்கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோயிஸ்ட்டுகள் திடீர் தாக்குதல்; மராட்டியத்தில் 18 பொலிஸார் பலி!

நாக்பூர், ஒக். 10

மராட்டிய மாநிலத்தில் நேற்றுமுன்தினம் 200 மாவோ நக்ஸலைட்டுகள் திரண்டு வந்து பொலிஸார் மீது அதிரடித் தாக்குதல் நடத்தினர். அப்போது இரு தரப்பினருக்கும் இடையே 4 மணிநேரம் நடைபெற்ற பயங்கரத் துப்பாக்கிச் சண்டையில் 18 பொலிஸார் பலியாகினர்.

மராட்டிய மாநிலம் காத்சிரோலி மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் நக்ஸலைட் ஒழிப்புப் படையைச் சேர்ந்த கொமாண்டோக்களும், சாதாரண பொலிஸாருமாக46 பேர், நேற்றுமுன்தினம் காலை வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அந்தமாவட்டத்தின் லகிர் கிராமத்துக்கு அவர்கள் வந்து கொண்டிருந்தனர். அப்போது, ஓரிடத்தில் மறைந்திருந்த 200 மாவோயிஸ்ட்டுகள் கொண்ட கும்பல், பொலிஸார் மீது திடீரெனத் துப்பாக்கிச் சூடு நடத்தியது. பொலிஸார் உடனடியாக சுதாரித்துக் கொண்டு, எதிர் தாக்குதல் நடத்தினர். இருதரப்பினருக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்றது.

கூடுதல் படைகளும் வரவழைக்கப் பட்டன. அப்படையினர் மீதும் மாவோயிஸ்ட்டுகள் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்பினருக்கும் இடையே 4 மணி நேரமாக நடைபெற்ற இச்சண்டையில் உதவி இன்ஸ்பெக்டர் ஒருவர் உள்பட 18 பொலிஸார் பலியாகினர். இவர்கள் அனைவரும் நக்ஸலைட் ஒழிப்புப் படையைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த போது, எல்லைப் பாதுகாப்புப் படையினர் 50 பேர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் மாவோயிஸ்டுகளுடன் துணிச்சலாக மோதினர்.

இதையடுத்து மாவோயிஸ்டுகள், அடர்ந்த காடுகளுக்குள் தப்பி ஓடிவிட்டனர். இதனால் மீதியுள்ள 28 பொலிஸாரை எல்லைப் பாதுகாப்புப் படையினர் பத்திரமாக மீட்டனர்.

தப்பி ஓடிய மாவோயிஸ்ட்டுகளைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. அப்பகுதி முழுவதையும் 'சீல்' வைத்துப் பொலிஸார் தேடி வருகிறார்கள்.

மராட்டிய மாநில சட்டசபை தேர்தல், வரும் 13ஆம் திகதி நடைபெற இருக்கும் நிலையில், இந்த தாக்குதல் நடந்துள்ளது.

இதற்கிடையே, பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் பாதுகாப்புக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில், நக்ஸலைட் பிரச்சினை பற்றியும், அதை ஒடுக்குவதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

# நடிகைகளைப் பற்றி அவதூறுச் செய்தி; பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும்

## சரத் வலியுறுத்து

சென்னை, ஒக். 10

நடிகைகளைப் பற்றி அவதூறுச் செய்தி வெளியிட்ட நாளிதழ், அனைவரும் அறிய பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் - என்று நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் கூறினார்.

பிரபல நடிகைகளைப் பற்றி அவதூறாகச் செய்தி வெளியிட்ட காலை நாளிதழ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி மற்றும் பொலிஸ் கமிஷனர் ராஜேந்திரனிடம் திரையுலகினர் முறைப்பாடு செய்தனர்.

நடிகர் சங்கம் சார்பில் கடந்த புதனன்று கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது. இதையடுத்து சம்பந்தப்பட்ட நாளிதழின் செய்தி ஆசிரியர் லெனின் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், முதல்வர் கருணாநிதியை கோபாலபுரம் இல்லத்தில் நேற்றுமுன்தினம் காலை நடிகர் சங்கத்தினர் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

பின்னர் வெளியே வந்த சரத்குமார் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

அவதூறுச் செய்தி வெளியிட்ட நாளிதழின் செய்தி ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார். இதற்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்தோம்.

உலகத்துக்கே தெரியும் வகையில் அவதூறு செய்தியைப் பெரிதாக வெளியிட்டு விட்டு, வருத்தம் தெரிவிக்கிறோம் என்பதை மட்டும் சிறிய அளவில் பிரசுரம் செய்துள்ளனர். சம்பந்தப்பட்ட நாளிதழ், அனைவரும் அறியும் வகையில் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் - என்றார்.



நடிகைகளைப் பற்றி அவதூறாகச் செய்தி வெளியிட்ட நாளிதழ் செய்தி ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு, நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் தலைமையில் நடிகர்கள், கருணாநிதியை நேற்றுமுன்தினம் சந்தித்து நன்றி தெரிவித்தபோது....

# மாநில அரசுகள் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கத் தவறுவதால் நக்ஸல் தலையெடுப்பு

## சொல்பவர் ராகுல்



சென்னை, ஒக். 10

மக்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளாமல் மாநில அரசுகள், அவர்களைப் புறக்கணிப்பதால்தான் நக்ஸல் தீவிரவாதம் வளரக் காரணமாகிறது - என்று கருத்துத் தெரிவித்துள்ளார் காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல்.

கேரளாவில் கடந்த புதன்கிழமை அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், ஒரிஸா, பிகார் போன்ற மாநிலங்களில் நக்ஸல் தீவிரவாதம் காணப்படுகிறது. வளர்ச்சி அடைந்த பகுதிகள், ஜனநாயக நடைமுறை அமுலில் உள்ள இடங்களில் நக்ஸல் தீவிரவாதம் இல்லை என்பதை நாம் அறியும் போது இவற்றுக்கு இடையே உள்ள தொடர்பு நமக்குப் புரிகிறது.

ஏழை எளிய மக்களின் தேவைகளைப் புரிந்து கொள்ளாமல் எட்டவே நிற்கும் மாநில அரசுகளால் ஆத்திரம் கொண்டு ஏழை எளியோர் நக்ஸல் பாதைக்குத் திரும்புகின்றனர் என்றே எனக்குத் தோன்றுகிறது.

இது எனது சொந்தக் கருத்துதான். நக்ஸல் பிரச்சினையை வேரறுப்பதற்கான பல்வேறு வழிமுறைகளை அரசுக்கு கூற வல்லுநர்கள் உள்ளனர். மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அதைத் தீர்க்க உள்ளாட்சி அமைப்புகள் தவறும் போது நக்ஸல் தீவிரவாதம் தலைதூக்குகிறது என்பதை நாம் அனுபவ ரீதியில் அறிகிறோம் - என்றார்.

# குழந்தைத் திருமணங்கள் இந்தியாவிலேயே அதிகம்!

## யுனிசெவ் அறிக்கையில் தகவல்

சென்னை, ஒக். 10

உலகம் முழுவதும் நடைபெறும் குழந்தைத் திருமணங்களில் 3இல் ஒரு குழந்தைத் திருமணம் இந்தியாவில் நடக்கிறது - என்று ஐ.நா. குழந்தைகள் அமைப்பான 'யுனிசெவ்'வின் அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

குழந்தைகள் முன்னேற்றம், பாதுகாப்பு குறித்த விவரம் என்ற பெயரில் 'யுனிசெவ்' அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்தியாவில் கல்வியறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனினும், பாரம்பரியம் ழற்றும் மத நம்பிக்கை காரணமாக குழந்தைத் திருமணங்கள் தொடர்கின்றன. அதற்கு சட்டரீதியான தடைகள் இருந்தாலும், பெரியளவில் பயன் ஏற்படவில்லை.

உலக அளவில் தெற்கு ஆசிய நாடுகளில்தான் குழந்தைத் திருமணங்கள் அதிகளவில் நடக்கின்றன. அவற்றில் இந்தியா, நேபாளம் முக்கிய பங்கு வகிக்கின்றன. உலகின் பாதிக்கு மேற்பட்ட சிறுவயது மணப்பெண்கள் தெற்கு ஆசியாவைச் சேர்ந்தவர்கள். உலகின் குழந்தை மணப்பெண்கள் எண்ணிக்கையில் இந்தியா 33 சதவீத இடம் வகிக்கிறது. அதாவது, 3இல் ஒரு குழந்தைத் திருமணம் இந்தியாவில் நடக்கிறது.

அதுபோலவே, பதிவு செய்யப்படாத குழந்தைப் பிறப்பும் இந்தியா உட்பட தெற்காசிய நாடுகளில் அதிகம். தெற்காசிய நாடுகளில் 2007இல் பிறந்த குழந்தைகளில் சுமார் 47 சதவீதம் பதிவு செய்யப்படவில்லை. அவர்களின் மொத்த எண்ணிக்கையான 2 கோடி 40 லட்சத்தில் இந்தியக் குழந்தைகள் மட்டும் ஒரு கோடி 60 லட்சம் பேர் - என்றுள்ளது.

# நீலகிரியில் அணுத் துகள் ஆய்வுகூடம்; தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும்

## வலியுறுத்துகிறார் வைகோ

சென்னை, ஒக். 8

நீலகிரி மாவட்டம் மசினகுடியில் அணுத் துகள் (நியூட்ரினோ) ஆய்வு கூடம் அமைக்கும் முடிவை கைவிட வேண்டும் - என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

நீலகிரி மாவட்டம் மசினகுடியில் அணுத் துகள் ஆய்வுக் கூடம் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் வாழும் யானைகளின் முக்கிய வழித்தடங்கள் இப்பகுதியில்தான் உள்ளன.

இந்தியாவில் உள்ள 20 அறிவியல் ஆராய்ச்சிக் கூடங்க்ள் சார்பில் மசினகுடியில் உள்ள சிங்காரா பகுதியில் 10 ஏக்கர் பரப்பில் 917 கோடி ரூபா மதிப்பில் 'இந்தியா நியூட்ரினோ' என்ற அணுத் துகள் ஆய்வுகூடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக இங்கு 'காஸ்மிக் கதிர்கள்' உண்டாக்கும் அணுத் துகள்கள் பற்றியும், 2 ஆவது கட்டமாக ஜப்பான், சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் அணுத் துகள்களை பூமிக்குள் ஊடுருவச் செய்தும் ஆராய்ச்சி நடத்தப்படும் என்று கூறப்படுகிறது.

ஆயிரமாயிரம் அணுகுண்டுகளை மனிதனால் உருவாக்க முடியும். ஆனால் நீலகிரி மலையைப்போல இன்னொரு மலையை உருவாக்க முடியாது.

அணுத் துகள் ஆய்வுக் கூடம் பற்றி தமிழக அரசு எதுவும் கூறாத நிலையில் 'மசினகுடி தான் சிறந்த இடம்' என்று ஜெய்ராம் ரமேஷ் கூறியிருப்பது தமிழக அரசின் உரிமையில் தலை யிடும் நடவடிக்கையாகும். எனவே, இதைத் தடுக்க தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றுள்ளது



# மாணவிகள் விடுதியில் 100 பாம்புகள்! நெல்லையில் பாம்பாட்டிகளால் பிடிப்பு

நெல்லை, ஒக். 10

நெல்லை அரச மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள தாதியர் கல்லூரி மாணவிகள் விடுதியில் 100 பாம்புகள் பாம்பாட்டிகள் மூலம் மடக்கிப் பிடிக்கப்பட்டன.

அந்த விடுதியைச் சுற்றி அடர்ந்த முட்புதர்கள் காணப்படுவதால் பாம்புகள் நடமாட்டம் அதிகமாக இருந்தது.

இதுகுறித்து, நிர்வாகத்திடம் மாணவிகள் முறையிட்டனர். பாம்புகளைப் பிடிக்க மருத்துவ அலுவலர் மோகன் நடவடிக்கை எடுத்தார். மேலப்பாளையம், மானாமதுரை, ஆறுமுகநேரி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பாம்பு பிடிக்கும் தொழிலாளிகள் மாரியப்பன், சாத்தாகுட்டி, கண்ணன் உட்பட 8 பேர் வரவழைக்கப்பட்டனர்.

அவர்கள் நேற்றுமுன்தினம் காலை மருத்துவமனை வளாகத்தில் மகுடி ஊதினர். அப்போது முட்[illegible] இருந்து நல்லபாம்பு, கட்டுவிரியன் [illegible] பெரிய பாம்புகளும், 75 சிறிய பாம்புகளும் [illegible] வெளியே வந்தன. அவற்றை பாம்[illegible] பிடித்தனர்.




# 'தினமலர்' செய்தி ஆசிரியர் பிணையில் விடுதலை

'தினமலர்' செய்தி ஆசிரியருக்கு நிபந்தனை ஏதும் இல்லாமல் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நடிகைகள் அவதூறுச் செய்தி தொடர்பாக சென்னைப் பொலிஸார் தினமலர் செய்தி ஆசிரியர் லெனினை கடந்த புதன்கிழமை பத்திரிகை அலுவலகத்திற்குள் சென்று கைதுசெய்தனர். இதற்கு மாநிலம் முழுவதும் கடும் கண்டனம் எழுந்தது.

பத்திரிகையாளர்கள் போராட்டம் நடத்தினர். இந்நிலையில் பிணையில் விடுதலை செய்ய வேண்டும் என நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் நிபந்தனை ஏதும்இல்லாமல் விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்தது. இதையடுத்து செய்தி ஆசிரியர் லெனின் விரைவில் விடுதலை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் வடக்கு மாகாணக் கல்வி மற்றும் பண்பாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டிலான தமிழ் இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விருந்தினர்களாகக் கலந்துகொண்ட துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், அரச அதிபர் கே.கணேஷ், மாகாண விளையாட்டுத்துறை முன்னாள் பணிப்பாளர் எதிர்மன்னசிங்கம் ஆகியோர் வரவேற்கப்படுவதையும் தமிழ்த்தாய்க்கு துணைவேந்தர் மலர்மாலை அணிவிப்பதையும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோர் உரையாற்றுவதை மேல்வரிசையிலும்-

நிகழ்வில் கலந்து கொண்டோரையும் நடன நிகழ்ச்சிகளையும் கீழ் வரிசையிலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன், ஓங்காரன்)

# வடமராட்சி வடக்குப் பிரதேச கடற்றொழிலாளர்கள் இரவு 10 மணிக்கு சென்று 4 மணிக்கு கரைதிரும்ப அனுமதி

## அமைச்சர் டக்ளஸ் -படை அதிகாரிகள் சந்திப்பில் இணக்கம்

யாழ்ப்பாணம்.ஒக்.10

வடமராட்சி வடக்குப் பிரதேச கடற்றொழிலாளர்கள் இரவு 10 மணிக்கு கடலுக்குச் சென்று அதிகாலை 4 மணிக்கு கரை திரும்ப அனுமதிப்பதென இணக்கம் காணப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்குக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று விஜயம் மேற்கொண்டார். அங்கு கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து படை அதிகாரிகள், பிரதேச செயலர், கடற்றொழிலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

எரிஞ்சம்மன் கோயிலடியில் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் அவர்களது சொந்த இடமான சுப்பர்மடத்தில் தொழிலில் ஈடுபடுவதற்கும், மயிலியதனையில் தொழில் செய்துவரும் தொண்டைமானாறு கடற்றொழிலாளர்கள் தொண்டைமானாறு வெள்ளைக் கடற்கரை பகுதியில் தொழிலில் ஈடுபடுவதற்கும், ரேவடி பகுதியில் தொழில் செய்துவரும் கொத்தியால் கடற்றொழிலாளர்கள் கொத்தியாலடியில் தொழில் செய்வதற்கும் மயிலியதனையில் தொழில் புரிந்து வரும் கெருடாவில் கடற்றொழிலாளர்கள் காட்டுப்புலம் பகுதியில் தொழில் செய்வதற்கும் மேற்படி சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதேநேரம் கடற்றொழிலாளர்கள் இரவு 10 மணியளவில் கடலுக்குச் செல்லவும் அதிகாலை 4 மணியளவில் கரையேறி வெளியில் வரவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்துடன் கற்கோவளம் மீன் சந்தையை பழைய இடத்தில் (கடற் கரையில்) இயங்குவதற்கும் மணற்காடு மற்றும் குடத்தனை பகுதியில் கடற்றொழிலாளர்கள் சிரமமின்றி தங்களது கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தங்களது உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்கும் உரிய வசதிகளை மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா-

அனைவரினதும் வேண்டுகோளுக்கு இணங்க பாதுகாப்பு படையினரால் இச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதனை எவரும் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்றும், அவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படும் பட்சத்தில் அது அனைவரையும் பாதிக்கும் என்றும் தெரிவித்தார்.

இந்தியக் கடற்றொழிலாளர்கள் கண்மூடித்தனமாகத் தமது கடல் எல்லைக்குள் வந்து ரோலர்கள் மூலம் மீன்பிடிப்பதனால் கடற்றொழிலாளர்களின் வலைகள் சேதமடைவதுடன், எமது கடல் வளமும் பாதிக்கப்படுவதாகக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்ததுடன், இந்தியக் கடற்றொழிலாளர்கள் தமது கடல் எல்லைக்குள் ஊடுருவுவதைத் தடுக்கும் பொருட்டு இலங்கை கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும், அவ்வாறு கடற்படையினர் ரோந்து பணிகளில் ஈடுபடும் சமயங்களில் இந்தியக் கடற்றொழிலாளர்கள் அப்பகுதிக்கு வருவதனை தடுக்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

இந்தியக் கடற்றொழிலாளர்கள் குறித்து வடமராட்சிக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்த கருத்துக்களைச் செவி மடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதுடன், அவர்கள் யாழ்.குடாநாட்டிற்கும் விஜயம் செய்யவுள்ளதால், அவர்களுடன் இந்தியக் கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதுடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் இந்த விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார் என்று சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

# சாவகச்சேரியில் பணிநயப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.10

சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற நா.சத்தியநாதனுக்கு பணிநயப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை தென்மராட்சி பாடசாலைகளில் அதிபர் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். (1-10)

# கைதடியில் இன்று இசை நிகழ்ச்சி

நாவற்குழி.ஒக்.10

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தினரின் ஏற்பாட்டில் இசைநிகழ்சி இன்று இரவு 8 மணிக்கு கைதடியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமராட்சியூர் கே.பாஸ்கரனின் நடன நிகழ்வு, நல்லூர் ராகம் இசைக்குழுவினரின் இசைச்சரம் நிகழ்ச்சியும், தென்மராட்சியின் முன்னணி இசை நடனக்கலைஞர்கள் வழங்கும் காத்தவராயன் சிந்துநடனக்கூத்து ஆகியன இடம் பெறவுள்ளன. (1-10-288)

# வாக்குப்பெட்டிகளை மாற்ற அரசு திரைமறைவில் திட்டம்!

## ஐ.தே.கட்சி உறுப்பினர் நாடாளுமன்றில் தகவல்

இன்று நடைபெறும் தென் மாகாண சபைத் தேர்தலில் வாக்குப் பெட்டிகளை மாற்றுவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளது என்று ஐ.தே. கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தென் மாகாண சபைத் தேர்தலில் அரசு மோசடியில் ஈடுபடத் தயாராகியுள்ளது. வாக்குப்பெட்டிகளை மாற்றுவதற்காக அரசு சதித்திட்டம் தீட்டியுள்ளது என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

வாக்குப்பெட்டிகளை ஏற்றிச்செல்லும் பஸ்களில் செல்ல ஏன் எங்களது பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கவில்லை? வாக்குப் பெட்டிகளை மாற்றும் திட்டம் தொடர்பில் எமக்கு சரியான முறையில் தகவல்கள் கிடைத்துள்ளன - என்றார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா, ஐக்கிய தேசியக் கட்சி தனது தோல்விக்கான காரணத்தைக் காட்டுவதற்காக இவ்வாறான பொய்யைக் கூறுகின்றது- என்றார்.

தோல்விக்கான காரணத்தை வெளியே தேடாது கட்சிக்குள் தேடினால், ஐக்கிய தேசியக் கட்சியால் எல்லாத் தேர்தல்களிலும் வெல்ல முடியும் என்றும் இன்றைய தென் மாகாண சபைத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி தோற்பது உறுதியாகிவிட்டது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நேற்று அதிகாலை தொடக்க 12 மணி நேரம் நாட்டின் பல இடங்களில் மின் துண்டிப்பு

கொழும்பு, ஒக்.10

நாட்டின் பல பாகங்களும் நேற்று அதிகாலை திடீரென மின் துண்டிப்பு ஏற்பட்டது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டது. இது குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக அரசு உயர்மட்ட விசாரணைக் குழுவொன்றை அமைக்கவுள்ளது.

களனிதிஸ்ஸ மின் நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணி முதல் தொடர்ந்து 12 மணித்தியாலங்களுக்கு மின் துண்டிப்பு ஏற்பட்டது.

இதன் தொடர்ச்சியாக நாட்டின் பல பகுதிகளில் நீர் விநியோகமும் தடைப்பட்டது.

அனேகமாக நாடு முழுவதிலும் மின் துண்டிப்பு ஏற்பட்டது என மின்சக்தி அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

தேசிய மின்னிணைப்புடன் தொடர்பை ஏற்படுத்தும் 'கேபிளி'ல் ஏற்பட்ட கோளாறே இந்த மின் துண்டிப்புக்கு காரணம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த மின்துண்டிப்பு குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக அரசு உயர்மட்டக் குழுவொன்றை அமைக்கவுள்ளது என மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

களனிதிஸ்ஸவில் பாரிய பொறியியல் தவறு நிகழ்ந்துள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்காகத் தொழில்சார் நிபுணர்கள் கொண்ட குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது'' என்று அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-சி)

# வடமாகாண முன்பள்ளிகளின் கண்காட்சி இன்றும் நாளையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில்

கொழும்பு, ஒக்.10

வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் வடமாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் இன்றும் நாளையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு கண்காட்சியையும் திறந்து வைப்பார்.

முற்பகல் 10 மணிமுதல் 12.30 மணி வரை கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இருதினங்களும் கண்காட்சி முற்பகல் 9 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணி வரையும் நடைபெறும் என்று கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெயாதம்பையா தெரிவித்தார். (1-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழக எம்.பிக்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் தூதுக்குழுவில் ஆளும்தரப்பைச் சேர்ந்த தமிழக எம்.பிக்கள் மட்டுமே இடம்பெறுகின்றனர்.

### கருணாநிதியுடன் நீண்ட ஆலோசனை

இலங்கை வரும் தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நீண்ட நேரம் முதலமைச்சர் கருணாநிதியுடன் தாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விரிவாக ஆராய்ந்து கலந்துரையாடினர் என்று சென்னைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று நண்பகல் 1.30 மணிக்கு தமிழகத்தைச் சேர்ந்த எம்.பிக்களைக் கொண்ட தூதுக்குழு கொழும்பு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தூதுக்குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை பி.ப. 4 மணிக்கு சந்தித்து கலந்துரையாட உள்ளனர்.

இந்தியத் தூதுக்குழு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் சென்று அங்கு மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களை சந்தித்துக் கலந்துரையாடும் என தெரிவிக்கப்பட்டது.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், அரசியல் வாதிகள் ஆகியோரைச் சந்தித்து மீள் குடியமர்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறியவுள்ளது.

அரசின் அழைப்பின் பேரில் இங்கு வரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு பல்வேறு பகுதிகளுக்கும் செல்வர், பிரதானமாக வவுனியா அகதிமுகாம்களுக்குச் சென்று அம் மக்களுடன் கலந்து பேசி நிலை மையை நேரில் அறிவர். தூதுக்குழுவினர் எதிர்வரும் 14 ஆம் திகதி ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய பின் திரும்புவர் என்று வெளிவிவகார அமைச்சின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தூதுக்குழுவினர் இந்தியா திரும்பமுன் செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கொழும்பில் நடத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

**பெண்களுக்கான யோகா பயிற்சி**

இன்று(10.10.2009) சனிக்கிழமை வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

இல 397, பிரதான வீதி,
(பஸ்தியான் சந்தி) யாழ்ப்பாணம்
(89734) T.P :- 0772479652

**வேலையாள்கள் தேவை**

சாவகச்சேரியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவைப் படுகிறார்கள்.

1. வரவேற்பாளர் (பெண்கள்)
   * கணனி, ஆங்கில அறிவு
   * உயர்தரம் சித்தி
2. தாதிய உத்தியோகத்தர்/பயிலவிரும்புவோர்
   * உயர்தரம் சித்தி

(சாவகச்சேரி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது)

நேர்முகத்தேர்வு 12.10.2009 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இல 32, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(புட்சிற்றி (Food City) இருந்த இடம்)
தொடர்புகளுக்கு:- 0213734505
(89744)

## வவுனியா நலன்புரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் அவர்களது குடும்பத்தினரும் இன்று யாழ்ப்பாணம் அழைத்து வரப்படவிருக்கின்றனர் என்றும் அரசஅதிபர் கூறினார்.

அதேவேளை வவுனியாவில் இருந்து அழைத்துவரப்பட்டு கைதடியில் உள்ள பல்கலைக்கழக விடுதியில் தங்கவைக்கப்பட்டுள்ள 522 பேரையும் இன்று விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## 'ரூபெல்லா'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் குறித்த மாணவிகள் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.இவர்களில் இரண்டு மாணவிகள் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்நுட்ப பிரதி அமைச்சரிடம் வர்த்தகர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இந்த முறைப்பாட்டை அடுத்து பிரதியமைச்சர் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் ஓய்ந்துள்ள நிலையில் தொடர்ந்தும் தமிழர்கள் மீது காட்டப்படும் இது போன்ற சம்பவங்களால் அவர்கள் விசனமடைந்து உள்ளனர். அத்துடன் ஏற்கனவே பொலிஸ் பதிவு, வர்த்தக பதிவு போன்றவை இருக்கின்ற நிலையில் இந்தள; புதிய பதிவு எந்த நோக்கத்துக்காக மேற்கொள்ளப்படுகிறது என்ற கேள்வியையும் எழுப்புகின்றனர்.

இது போன்ற பதிவுகளால் தொல்லைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்நிலையிலேயே பிரதியமைச்சர் விவரமான கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பியுள்ளார் என அவரது ஊடகப்பிரிவு விடுத்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## வன்முறைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலைப் பொறுத்தவரை கடந்த காலங்களை விட இம் முறை தேர்தல் வன்முறைகளும், அரச சொத்துகளைத் துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்களும், தேர்தல் சட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றமையும் உச்சமாக இடம்பெறுகின்றன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அறிவித்திருக்கின்ற நிலையில், இன்றைய வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் மிகவும் பரபரப்பாக எதிர்நோக்கப்படுகின்றது.

இந்தத் தேர்தல் தொடர்பாக, தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' நேற்று முன்தினம் வெளியிட்ட பிந்திய அறிக்கையில், இம்முறை தேர்தல் வன்முறைகளும், சட்ட மீறல்களும் வெகுவாக அதிகரித் திருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-சி)

## இந்தியத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்லப்படுவர்.

யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில் மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் குழுவினருக்கு பொது வரவேற்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இந்த நிகழ்வில் பங்குபற்றுவார்.

இந்த வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு திணைக்கள தலைவர்கள், பாட சாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, அழைப்புவிடுத்துள்ளார்.

அன்று காலை 9 மணிக்கு பல்கலைக் கழக நூலகக்கேட்போர் கூடத்தில் இந்திய நாடாளுமன்ற தூதுக்குழுவினர் பல்கலைக்கழக சமூகத்தினரை சந்திக்கவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்யும் தூதுக்குழுவினர் முக்கியமாக நலன் புரி நிலையங்களில் இருந்து வருகைதந்த மாணவர்களது நிலைவரங்கள் தொடர்பாக அறிந்துகொள்வதுடன் அந்த மாணவர்களுடன் அவர்கள் கலந்துரையாடுவர்.

இந்தநிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் மற்றும் சமூகநலத்துறை மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒன்றியம் கேட்டுள்ளது. (அ-1)

## அகதிகளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறுகின்றது என்று அவர் சிறப்புரிமைப் பிரச்சினையைக் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா அகதி முகாம்களைப் பார்வையிடுவதற்காக இந்தியாவிலிருந்துஅடுத்த வாரம் 4 எம்.பிக்கள் வருகின்றனர். அவர்களுக்கு அனுமதி வழங்கியவர் யார்?

ஆனால், எமது எம்.பிக்கள் அகதிமுகாம்களுக்குச் செல்ல இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. இந்த அரசு திட்டமிட்டு எமது சிறப்புரிமையை மீறுகின்றது.

வெளிநாட்டவர்களுக்கு அனுமதி வழங்க முடியும் என்றால் எமது மக்களைப் பார்க்க ஏன் எமக்கு அனுமதி வழங்க முடியாது? இந்த நாடாளுமன்றத்துக்குத் தலைவர் சபாநாயகர் தான். சபாநாயகர் இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும். எமது சிறப்புரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர்-

இதற்கு நான்தான் அனுமதி வழங்கினேன் என்பதுபோல் பேசுகிறீரே. மக்கள் அவ்வாறுதான் நினைக்கப்போகின்றார்கள். - என்றார். (அ-சி)

## சமாதானத்துக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒபாமாவுக்குநோபல் சமாதானப் பரிசு வழங்கப்படுகிறது என நோபல் பரிசுக்குழு அறிவித்திருக்கின்றது. இவ்வருட சமாதானத் துக்கான நோபல் பரிசுக்காக சிம்பாப்வே பிரதமர், சீன அதிருப்தியாளர் உட்பட 205 பேர் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

ஐந்துபேர் கொண்ட குழு ஒன்று இவர்களில் பராக் ஒபாமாவைத் தெரிவுசெய்துள்ளது.

''ஒபாமாவைப் போல் மிக அரிதானவர்களே உலகின் கவனத்தை ஈர்த்துள்ளனர். சிறந்த எதிர்காலம் குறித்த நம்பிக்கையை அவர் மக்களுக்கு அளித்துள்ளார்,'' என நோபல் பரிசை வழங்கும் நோர்வே குழு தெரிவித்துள்ளது.

உலகுக்குத் தலைமை வகிப்பவர்களில் உலகின் பெரும்பான்மை மக்கள் பின்பற்றும் அடிப்படை விழுமியங்கள், மனப்பாங்கு என்பவற்றைப் பின்பற்றவேண்டும் என்ற அடிப்படையில் ஒபாமாவின் இராஜதந்திரம் அமைந்துள்ளது என்றும் அக்குழு பாராட்டியுள்ளது.

''ஒபாமா சாதிக்க முயல்வதற்கு நாங்கள் ஆதரவளிக்க விரும்புகிறோம். இதன் காரணமாகவே அவர் பதவியேற்ற ஒரு வருட காலப் பகுதிக்குள் இந்த விருதை வழங்கியுள்ளோம்'' என்றும் அக்குழு தெரிவித்துள்ளது.(அ-சி)

**பணியாளர் தேவை**

* கோட் மெசின் இயக்குனர்
* கொம்பியூட்டர் ரைப்செற்றிங் தெரிந்தவர்கள்
* புக் வைன்டிங் வேலை தெரிந்தவர்கள்
* வேலைபழக விரும்புபவர்களும்

விண்ணப்பிக்கலாம்

விண்ணப்ப முடிவுத் திகதி 25.10.2009

யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ். வீதி

**மீண்டும் யாழ். மண்ணில் உங்கள் சுடர்ஒளி**

இவ்வார இதழில்

⇨ உயிர் வலிக்கும் கணங்கள்.....!
⇨ மீண்டும் முறிந்தது உறவு
⇨ சர்வதேச,அழுத்தங்கள் பலிக்குமா?

மற்றும் பல விறுவிறுப்பான சுவையான அம்சங்களுடன்....

இப்பொழுது விற்பனையில்
உங்கள் உதயன் முகவர்களிடம்
கேட்டு வாங்குங்கள்.....

**LAVA HOSPITAL**

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

**BroadBand /ADSL**

பாவனையாளர்களே!
உங்கள் தொலைத்தொடர்பு சேவையினை பூர்த்தி செய்யும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இலவசமாகப் பேச வசதிகள் செய்து தரப்படும்.

மேலும் Net Work இற்கு தேவையான Router (wired / wireles) swich/ USB Dongle/ Access point, point to point /web camera போன்றவைகளை மிகமலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்

PEP2-7750/=, A/c Creadit 950/=(10$), Recover card 1150/=, Pass word product card (USB)-முதன் முதலாக அறிமுகம் செய்கின்றோம்.

இவை அனைத்திற்கும் ஒரு வருட உத்தரவாதம் அத்துடன் மேலதிக சேவைகள் கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.

NALIN Information Technologies Pvt Ltd
அனைத்து கணனி உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
Tel: 0212221166 0777667974
44/3 A மணல்தரை லேன், கந்தர்மடம் யாழ்ப்பாணம் (சுந்தரம் [illegible])

**S&M Consultant Service, Branch Office**

148, Temple Road, Jaffna. (யுனிசெவ் முன்பாக)

யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் !!!

நவம்பர் மாதப் பிரவேசத்துக்கான நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

இவ்வருடத்திற்கான இறுதிப்பிரவேசத்தில் இணைந்து இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!!!

வார நாள்களில் கைத்தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு நேரம் ஒதுக்கி உடனடியாக நேரடியாக சந்தித்துக் கொள்ளலாம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை எந்நேரமும் சந்தித்துக் கொள்ளலாம்.

உடன் தொடர்பு - 0774528818
0212223818
Email: [illegible]1404_2009 @yahoo.com

148, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(யுனிசெவ் முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.